லீலா தமிழ்ச் செல்வம்

இரண்டாம் புத்தகம்

ஐந்தாம் படிவம்—பொது

தொகுப்பாசிரியர் :

T. S. உமாபதி, M.A., L.T., (Dip. in. Geog.)

தலைமை ஆசிரியர், சி. அப்துல் ஹக்கிம்
இந்து முஸ்லிம் உயர்நிலைப்பள்ளி, சென்னை.

பதிப்பாசிரியர் :

வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

M. சேஷாசலம் அண்டு கம்பெனி
7, சுங்குராம செட்டித் தெரு, சென்னை–1

1954

[விலை 1–4–0

பதிப்புரிமை]

முதற்பதிப்பு—அக்டோபர், 1953
இரண்டாம் பதிப்பு—மே, 1954

APPROVED FOR CLASS USE
BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE

Kabeer Printing Works, Madras (2506)

முகவுரை

'லீலா தமிழ்ச் செல்வம்' என்னும் பெயருடன் வெளி வரும் இத்தொகுப்பு நூல் நமது இராச்சியத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் **ஐந்தாம்** பாரத்தில் தமிழைப் பொதுவாகப் பயிலும் மாணவ மாணவியர்க்குரியது. இது 1952-ஆம் ஆண்டு, ஜூலைத் திங்களில் உயர்நிலைப்பள்ளிகளுக்கென அரசினர் வெளியிட்ட பாடத்திட்டத்தை முற்றிலும் பின் பற்றித் தொகுக்கப்பட்டுள்ளது.

இதன்கண் சங்க காலம், இடைக்காலம், பிற்காலம் என்னும் தலைப்புக்களில் இடம் பெற்றுள்ள செய்யுட்பாடங்கள், பண்டு முதல் இன்றளவும் செய்யுள் நிலையில் ஏற்பட்டு வந்துள்ள வேறுபாடுகளை மாணவ மாணவியர் அறிதற்குத் துணை புரியுமென்பது எனது எண்ணம். அன்றியும், இப்பாடங்கள் தமிழ்த் தொண்டில் சமய வேறுபாடின்றிச் சைவர், வைணவர், சமணர், பௌத்தர், கிறித்தவர், இஸ்லாமியர் அனைவரும் ஈடுபட்டுச் சிறந்ததொரு தமிழர் சமுதாயத்தை உருவாக்க முயன்றுள்ளனர் என்பதை விளக்குதலும் ஒருதலை. உரைநடைப் பாடங்களும் அங்ஙனே அமைக்கப் பெற்றுள்ளன.

பாடத்திட்டத்தில் பொதுப் பகுதிக்கு 400 வரி அளவுக்குச் செய்யுட்பாடங்களும், 50 பக்க அளவுக்கு உரைநடைப் பாடங்களும் நிர்ணயிக்கப்பட்டுள்ளனவாயினும், இடத்துக்கிடம் மாணவ மாணவியர் தரம் வேறுபடக் கூடுமாகலின், தத்தம் மாணவர் நிலைக்கேற்பத் தமிழாசிரியர்கள் பாடங்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளற்பொருட்டுப் பாடத்திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட அளவுகட்கு அதிகமாகச் செய்யுட்பாடங்களும் உரைநடைப் பாடங்களும் சேர்க்கப்பெற்றுள்ளன.

இந்நூல் உருவாதற்கு உறுதுணையாக உயரிய கட்டுரைகள் நல்கிய அறிஞர் பெருமக்கள் அனைவர்க்கும் யான் பெரிதும் கடப்பாடுடையேன். அவர்கட்கு எனது உளமார்ந்த நன்றியை உரிமைப்படுத்துகிறேன். இந்நூல் அச்சாகுங்கால் இன்றியமையாத திருத்தங்கள் நல்கி, பிரதிகளை ஒப்பு நோக்கி, சிறந்த முறையில் இது வெளி வருமாறு செய்த இதன் பதிப்பாசிரியரும் எனது மதிப்பிற்குரிய கெழுதகை நண்பருமாய **வித்துவான் திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை** அவர்கட்கும் எனது அன்பு கலந்த நன்றியை உரிமைப்படுத்துகிறேன். இதற்கு ஆதரவு நல்கி எனக்குத் துணை புரியுமாறு ஆசிரிய அறிஞர் உலகத்துக்கு எனது பணிவு மிக்க வேண்டுகோள் உரியதாகுக.

த. சே. உமாபதி

உள்ளுறை

செய்யுட்பகுதி

எண்	பொருள்	பக்கம்
I.	இறை வணக்கம் ...	1
II.	தமிழ் வாழ்த்து ...	2
III.	அறவுரை	
1.	திருமந்திரம் ...	3
2.	புறநானூறு ...	3
3.	மணிமேகலை ...	4
4.	நீதி நூல் ...	4
5.	திருக்குறள் ...	5
6.	பழமொழி ...	7
IV.	தொடர்நிலைச் செய்யுள்	
1.	நைடதம்—வீமன் தேட விட்ட படலம் ...	8
2.	சீகாளத்திப் புராணம்—நக்கீரச் சருக்கம் ...	13
3.	பெரிய புராணம்—மனுநீதிகண்ட புராணம்...	17
4.	கம்பராமாயணம்—கையடைப்படலம் ...	20
5.	ஸ்ரீமத் குமாரசுவாமியம்—திருக்கைலாயத் திருவிளையாடல் ...	24
V.	சிறு நூல்கள்	
1.	சீட்டுக் கவி ...	26
2.	கலிங்கத்துப் பரணி—போர் ...	27
3.	திருவிளையாடல் அம்மானை ...	28
4.	காவடிச் சிந்து ...	29
VI.	வருணனை	
1.	இமயமலை ...	31
2.	யாறு ...	31
3.	பாண்டி நாடு ...	31
4.	சூரியோதயம் ...	32
5.	சந்திரோதயம் ...	32
VII.	தனிப்பாடல்கள் ...	33
	குறிப்புரை ...	34

உரைநடைப்பகுதி

எண்	பொருள்		பக்கம்
1.	இறையனார் அகப்பொருள் வரலாறு —மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்	...	48
2.	கலைகள் —திரு. வி. கலியாண சுந்தரனார்	...	51
3.	உழுதொழில் —நாவலர், பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார்	...	57
4.	தேசீயக் கவி பாரதியார் —பேராசிரியர் ச. சோமசுந்தர பாரதியார், M.A., B.L.	...	63
5.	தம்பிக்கு —டாக்டர் மு. வரதராசனார், M.A., M.O.L., Ph.D.	...	71
6.	வெள்ளித்திரையில் வியப்பென்ன? —திருவாட்டி ஈ. த. இராசேசுவரி அம்மையார், M.A., L.T.	...	77
7.	இலக்கிய ஓவியங்கள்—முத்தொள்ளாயிரம் —திரு. ச. ஆறுமுக முதலியார், M.A., B.O.L., L.T.	...	83
8.	ரேடார் —திரு. வி. சு. அங்கப்பனார், B.A., B.Sc. (Hons.), Dip. in Geog.	...	92
9.	திருக்குறள் —திருவாட்டி ஆர். இராசரத்தினம் அம்மையார், M.A., L.T.	...	99
10.	கொதிநீர்ப் பீச்சுக்கள், ஊற்றுக்கள் —திரு. G. R. தாமோதரனார், B. Sc. Elec , B.Sc. Mech. (Durham) A.M.I.E.E. (London), M. P.	...	104
11.	புறநானூறும் மக்கள் சமுதாயமும் —திருவாட்டி இராசாம்பாள் கோவிந்தராசனார், M.A., L.T., Praveen	...	112
12.	திருக்கடன்மல்லை —திரு. த. சே. உமாபதி, M.A., L.T. (Dip. in Geog.)	...	116

நன்றியுரை

இந்நூலின்கண் இடம் பெற்றுள்ள சிறந்த கட்டுரைகளை அன்புடன் அளித்த கீழ்க்காணும் அறிஞர் பெருமக்களுக்கு எமது அன்பு கலந்த நன்றி உரியதாகுக.

கட்டுரையும் உரிமையாளரும்

1. கலைகள்
—திரு. வி. கலியாண சுந்தரனார்

2. உழுதொழில்
—திரு. V. நடராசனார், B. Sc. (Hons.)

3. தேசீயக் கவி பாரதியார்
—பேராசிரியர் S. சோமசுந்தர பாரதியார், M.A., B.L.

4. தம்பிக்கு
—டாக்டர் மு. வரதராசனார், M.A., M.O.L., Ph.D.

5. வெள்ளித்திரையில் வியப்பென்ன ?
—திருவாட்டி ஈ. த. இராசேசுவரி அம்மையார், M.A., L.T.

6. இலக்கிய ஓவியங்கள்—முத்தொள்ளாயிரம்
—திரு. ச. ஆறுமுக முதலியார், M.A., B.O.L., L.T.

7. ரேடார்
—திரு. வி. சு. அங்கப்பனார், B.A., B.Sc. (Hons.), Dip. in Geog.

8. திருக்குறள்
—திருவாட்டி R. இராசரத்தினம் அம்மையார், M.A., L.T.

9. கொதிநீர்ப், பீச்சுக்கள், ஊற்றுக்கள்
—திரு. G. R. தாமோதரனார், B.Sc. Elec. B. Sc. Mech., (Durham), A.M.I.E.E. (London)., M.P.

10. புறநானூறும் மக்கள் சமுதாயமும்
—திருவாட்டி இராசாம்பாள் கோவிந்தராசனார், M.A., L.T., Praveen.

லீலா தமிழ்ச் செல்வம்

ஐந்தாம் படிவம்—பொது

செய்யுட்பகுதி

I. இறை வணக்கம்

அங்கிங் கெனுதபடி எங்கும்ப்ர காசமாய்
ஆனந்த பூர்த்திஆகி
அருளொடு நிறைந்ததெது?தன்னருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடிஎல்லாம்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது? மனவாக்கினில்
தட்டாமல் நின்றதெது ? சமயகோ டிகளெலாம்
'தந்தெய்வம், எந்தெய்வம்,'என்(று)
எங்குந் தொடர்ந்(து)எதிர் வழக்கிடவும் நின்றதெது ?
எங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்லஒரு சித்தாகி இன்பமாய்
என்றைக்கும் உள்ளதெது?மேல்
கங்குல்பகல் அறநின்ற எல்லைஉள தெது?அது
கருத்திற் கிசைந்த(து);அதுவே
கண்டனவெ லாம்;மோன உருவெளிய தாகவும்
கருதிஅஞ் சலிசெய்குவாம் !

—தாயுமானவர்

II. தமிழ் மொழி வாழ்த்து

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமும்துளுவும்
உன்உதரத்(து) உதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக்(கு) அழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!

—பேராசிரியர் பெ. சுந்தரம் பிள்ளை

III. அறவுரை

1. திருமந்திரம்

நல்லுரை

ஒன்றே குலமும்; ஒருவனே தேவனும்;
நன்றே நினைமின்! நமனில்லை நாணுமே;
சென்றே புகுங்கதி இல்லை; நும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே! 1

ஆனந்தம் அடைய

ஆசை அறுமின்கள்! ஆசை அறுமின்கள்!
ஈசனோ டாயினும் ஆசை அறுமின்கள்!
ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள்;
ஆசை விடவிட ஆனந்த மாமே! 2

—திருமூலர்

2. புறநானூறு

அரசர் கடன்

நெல்லும் உயிரன்றே; நீரும் உயிரன்றே;
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்;
அதனால், 'யானுயிர்' என்பது அறிகை
வேல்மிகு தானை வேந்தற்குக் கடனே! 1

—மோசி கீரனார்

அவரவர் கடமை

ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே;
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே;
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே;
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே;
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே. 2

—பொன் முடியார்

3. மணிமேகலை

உண்டி கொடுத்தோர் உயர்வு

ஆற்றுநர்க் களிப்போர் அறவிலை பகர்வோர் ;
ஆற்று மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை ;
மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே. 1

பசியின் கொடுமை

குடிப்பிறப் பழிக்கும், விழுப்பங் கொல்லும்,
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்,
நாணணி களையும், மாணெழில் சிதைக்கும்,
பூணணி மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்னும் பாவி ! 2

—சீத்தலைச் சாத்தனார்

4. நீதி நூல்

அருந்தவே கூழும், பூண
ஆடையும், வீடும் இன்றி
வருந்துவோர் எண்ணி லார்நம்
மருங்குளார் எனஅறிந்தும்,
விருந்திடாய் ; மணிமா டத்து
மேவிநீ யொருவன் வாழப்
பொருந்தினுய் மனமே ! மாக்கள்
போலநீ விலங்கா னுயே ! 1

ஒளிமுடி யொடும்பி றந்தே
உலகமாண் டவரும் இல்லை ;
எளியராய் ஓடொன்(று) ஏந்தி
இங்குதித் தவரும் இல்லை ;
குளிர்கடல் உடுத்த பாரில்
குறைந்தவர் மேலோர் என்னல்
வெளிமயக் கன்றிச் சற்றும்
மெய்யல ; உணர்வாய் நெஞ்சே ! 2

—மாயூரம் வேதநாயகம் பிள்ளை

5. திருக்குறள்

கடவுள் வாழ்த்து

பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார். 1

கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
தாளை வணங்காத் தலை. 2

வான் சிறப்பு

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு. 3

அறன் இன்னது என்பது

அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொ லான்கும்
இழுக்கா வியன்ற தறம். 4

இல் வாழ்க்கை

இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றி னின்ற துணை. 5

அன்புடைமை

அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்றா ரெய்துஞ் சிறப்பு. 6

விருந்தோம்பல்

வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம் ? 7

இனியவை கூறல்

அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந்
தின்சொல னாகப் பெறின். 8

நடுவு நிலைமை

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி. 9

அடக்கமுடைமை

நிலையிற் றிரியா தடங்கியான் றோற்றம்
மலையினு மாணப் பெரிது. 10

ஒழுக்கம்

மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும். 11

பொறை

நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை
போற்றி யொழுகப் படும். 12

பிறனுக்குக் கேடு நினையாமை

மறந்தும் பிறன்கேடு சூழற்க; சூழின்
அறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு. 13

ஒப்புரவறிதல்

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ உலகு. 14

அருளுடைமை

பொருளற்றார் பூப்ப ரொருகால்; அருளற்றார்
அற்றார்;மற் றாத லரிது. 15

புலால் உண்ணாமை

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிருந் தொழும். 16

பொய்யும் மெய்யாகக் கருதப்படும்

பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின். 17

வெகுளாமை

நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்திற்
பகையு முளவோ பிற ? 18

கல்வி

உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில். 19

ஊக்கமுடைமை

உள்ள மிலாதவ ரெய்தா ருலகத்து
வள்ளிய மென்னுஞ் செருக்கு. 20

—*திருவள்ளுவர்*

6. பழமொழி

அடக்கம்

கற்றறிந்தார் கண்ட தடக்கம் ; அறியாதார்
பொச்சாந்து தம்மைப் புகழ்ந்துரைப்பர் ;—தெற்ற
அறைகல் அருவி அணிமலை நாட !
நிறைகுடம் நீர்தளும்பல் இல். 1

அறிவு மாட்சி

அறிவினால் மாட்சியொன் றில்லா ஒருவன்
பிறிதினால் மாண்ட தெவனும் ?—பொறியின்
மணிபொன்னும் சாந்தமும் மாலையும் இன்ன
அணியெல்லாம் ஆடையின் பின். 2

உலோபியின் செல்வம்

வழங்கலும் துய்த்தலும் தேற்றாதான் பெற்ற
முழங்கு முரசுடைச் செல்வம்—தழங்கருவி
வேய்முற்றி முத்துதிரும் வெற்ப ! அதுவன்றே
நாய்பெற்ற தெங்கம் பழம் ? 3

ஒழுக்கம்

கெடுவல் எனப்பட்ட கண்ணும் தனக்கோர்
வடுவல்ல செய்தலே வேண்டும் ;—நெடுவரை
முற்றுநீர் ஆழி வரையகத் தீண்டிய
கற்றேயும் ; தேயாது சொல். 4

வாயடக்கம்

பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும் ;—நல்லாய் !
மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்
நுணலும்தன் வாயாற் கெடும். 5

—முன்றுறையரையனார்

IV. தொடர்நிலைச் செய்யுள்

1. நைடதம்

வீமன் தேடவிட்ட படலம்

வீமன் மகளையும் நளனையுந் தேடி வரும்படி ஏவலரை அனுப்புதல்

இனைய னாகிய மன்னவ
னவ்வழி யிருப்ப
வனைக ருங்குழல் விதர்ப்பர்கோன்
மறையவர்க் கூய், 'என்
தனயை தன்னொடு நளனையுந்
தேடிநீர் தந்தால்
நினைவ யாவையுந் தருகுவன்,'
எனவவர் நேர்ந்தார். 1

தரங்க வாரிதி சூழ்தரு
தகைமைசா லுலகம்
ஒருங்கு தேடியுங் காண்கில
ருலப்பிலர் திரிய
வரங்கொள் கேள்வியன் சுவேதனென்
றுரைக்குமோர் மறையோன்
கருங்கட் பேதையைச் சேதிபன்
மனைவயிற் கண்டான். 2

சுவேதன் என்னும் பிராமணன் தமயந்தியைக் கண்டு அழுது வருந்துதல்

மாசு பூத்தொளி மழுங்குபு
மண்ணுறு மணியிற்
றேச ழிந்திடு தெரிவைதன்
றிருமுக நோக்கி,
'ஏச லில்லிவட் கோவிவை
யெய்துமற் றென்று'
ஆசில் கேள்வியோன் கலுழ்ந்தனன்
துயர்க்கட லாழ்ந்தான். 3

சேதி தேசத்து அரசன் தாய் தமயந்தியின் வரலாறு வினவுதல்

கந்த வார்குழற் காரிகை
அழுதல்கேட்(டு), ‘ இவட்குத்
தந்தை யார்?எவற் குரியளித்
தளிரியல் ? தனித்து
வந்த வாறெவன் ? இவளை நீ
உணர்ந்ததெவ் வாறெ’ றன்
றந்த ணாளனை வினவினள்
சுவாகுவை யளித்தாள். 4

தமயந்தி வரலாற்றைப் பிராமணன் உரைத்தல்

‘ மாது ! கேட்டி:இம் மடவரல்
விதர்ப்பர்கோன் புதல்வி;
காத லாயக னிடதர்கோன்
காசினி முழுதுஞ்
சூதி னாலிழந் திவளையுங்
கானிடைத் துறந்தான் ;
ஆத லாலிவட் டேடென
விதர்ப்பர்கோ னறைந்தான். 5

‘ தேண்டி யெங்கணுங் கண்டிலன்
திருவை;நின் மனையிற்
காண்டல் செய்தனன் ; கன்னலிற்
பழுத்தமென் மொழியால்
மாண்ட பேரெழில் வாணுதல்
வயங்கிய மறுவால்
ஈண்டு ணர்ந்தனன் யான்,’என
’மறையவ னிசைத்தான். 6

சேதியரசன் தாய் தமயந்தியின் நெற்றியில் மறுக்கண்டு துணிதல்

அதுகி ளத்தலு மணிநுதன்
மாசினை யகற்றிக்
கதிரெ றித்தலிற் கண்வழுக்
குற்றன கூடச

மதிநு தற்புறத் திலகிய
மறுவினை நோக்கித்
'தகைம லர்க்குழற் றமயந்தி
இவள்,'என வுணர்ந்தாள். 7

சேதி தேசத்தரசன் தாய் புலம்புதல்

'வனைம லர்க்குழன் மங்கை ! நின்
அன்னையும் யானும்
புனைக ருங்கழற் சுதர்மன்றன்
புதல்விய ராவேம்,'
எனலு மன்னைத னிணைமலர்ச்
சீறடி யிறைஞ்சிக்
கனைக ருங்கடல் கரைபுரண்
டாலெனக் கலுழ்ந்தாள். 8

தமயந்தி தன்னைத் தந்தையூர்க்கு அனுப்புமாறு வேண்டுதல்

'இன்ன ளென்றெனை யுணர்வதன்
முன்னமு மீன்ற
அன்னை யாமென வளித்தனை
அன்புமீ தூர;
மன்னு மென்னுயிர் மக்களைக்
காண்பதற் கெந்தை
பொன்ன கர்க்கெனை விடுத்தி,'என்
றின்னுரை புகன்றாள். 9

சுபாகுவின் தாய் தமயந்தியைக் குண்டினபுரத்திற்கு அனுப்புதல்

உரைசெய் மாற்றமோர்ந் துள்ளுயிர்
உருகுறத் தழுவிக்
கரைசெய் வேலையிற் கருந்தடங்
கண்கணீ ருகுப்ப,
எரிம ணிப்பொலன் சிவிகையி
லிருள்கனிந் தொழுகும்
விரைசெய் கோதையை விதர்ப்பர்கோ
னகர்வயின் விடுத்தாள். 10

தமயந்தி குண்டினபுரத்தை அடைதல்

கொள்ளை வண்டினங் கூட்டுணு
நறுமலர்க் கோதை
அள்ள லங்கருஞ் சேற்றிடை
அரக்கிதழ் விரிந்த
வள்ள வாய்ச்செழுங் கமலமேன்
மடவனந் துயில்கூர்
வெள்ள நீர்வயல் விதர்ப்பகோ
னகரமே யினளால். 11

அமுத வுண்கணு மற்றமெல்
லாடையு மலங்கல்
கமழுமச் சூட்டுபு கைசெயாக்
கருங்குழற் காடும்
விழியி னேக்கலும் விதர்ப்பர்கோன்
வெய்துயிர்த் தயர்ந்தான் ;
தழுவி யன்னைய ருறுதுயர்
சாற்றலாந் தகைத்தே ? 12

வீமன் சுவேதற்குப் பரிசளித்தல்

‘ காட்டி னள்ளிருட் காலையிற்
காவல னீத்த
தீட்டொ ணுவெழிற் றெரிவையைத்
தேடினன் கொணர்ந்த
மூட்டு முத்தழன் முறைமையின்
வளர்த்திடு சுவேதன்
வேட்ட யாவையுங் கொள்’கென
அளித்தனன் வீமன். 13

தமயந்தியின் தாய், நளனையுந் தேடுவிக்குமாறு
வீமனிடம் உரைத்தல்

மக்கள் வாண்முக நோக்கிய
மடவரல் நெஞ்சம்
நெக்கு வாடுதல் கண்டநற்
றுயுள நெகிழ்ந்து,

கக்கு செந்தழற் காலவேற்
காதலற் குறுகி,
' நக்க பூங்கழ னளனையு
நாடுெ'கன் றுரைத்தாள். 14

நளனைத் தேடி வருமாறு வீமன் வேவுகாரரை அனுப்புதல்

ஓட ரிக்கணு ளுரைத்தலும்
ஒற்றரைக் கூவி,
' ஆட கப்பசும் பொலன்கழல்
நளனைநீ ராய்ந்து
தேடி வம்மின்,' என் றரசர்கோன்
திசைதொறுஞ் செலுத்த,
நாடி னரவர் நளிகடல்
வரைப்பெலா நடந்தே. 15

வேவுகாரருள் பிராமணனொருவன் அயோத்தியில் நிகழ்ந்தவற்றைத் தமயந்திக்குத் தெரிவித்தல்

துருவு மொற்றரி லொருவன்மீண்
டணங்கின்முன் றோன்றி,
' அரிவை ! மூதெயி லயோத்திமா
நகரினி லடைந்தேன் ;
' புரிக ருங்குழன் மனைவியைப்
போக்கினன் புலம்பும்
ஒருவ னிவ்வுழி யுண்டுகொல் ?'
எனவினு வினனுல். 16

' ஓகை யோடெனக் கொருவனுங்
குளங்கனிந் துருகி
வாகை வெஞ்சிலை யிருதுபன்
னற்குயர் மான்றேர்ப்
பாகன் கொய்யுளைப் பரியுளந்
தேர்பவ னொருவன்
தோகை யைப்பிரிந் தாரஞர்
உழப்பவன் சோர்வான். 17

‘ அழலி லாதுண வமிர்தென
அடுதொழில் புரிவோன்
மழக ளிற்றினன் னடையினன்
வாகுவன் என்போன்
எழுவு லாந்திணி தோளினன்
ஈங்குளன் என்ன
ஒழுகு பூங்கொடி மருங்குலாய் !
உணர்ந்தனன் வந்தேன்.’ 18

—அதிவீரராம பாண்டியர்

2. சீகாளத்திப் புராணம்

நக்கீரச் சருக்கம்

அமுதுறழ் தமிழொண் முத்த மையசந் தனமெல் வாசங்
கமழ்குளிர் தென்ற லென்று கரையரும் பொருள்ப டாமல்
இமிழ்கடல் வரைப்பெ லாந்தோன் றெண்பொருள் படுநா டெள்ளித்
தமிழ்முதல் பிறக்கு நாடாய்த் தயங்குமாற் பாண்டி நாடு. 1

இன்ன தன்மைய வளங்கெழு பாண்டிநா டென்னும்
அன்ன மன்னவள் திருமுக மண்டல மாகி
மன்னும் விண்ணவர் பொன்னக ரத்தினை மறுக்கும்
பொன்னி னன்மணி மாமதின் மதுரையம் புரமே. 2

இனைய வாம்பெரு வளம்பல சிறந்தவவ் வினையில்
அனக மாநகர் வெண்குடைச் செய்யகோ லரசன்
புனித வானவன் றலைக்கொளத் திங்களம் புத்தேள்
தனது தொல்குல விளக்கமோர் வழுதிபைந் தாரான். 3

வெளிறி னுண்புல மந்திரிக் கிளையொடு மேவி
அளவில் போகந்துய்த் தினிதுவீற் றிருந்தனன் ; அந்நாள்
நெளிதி ரைக்கட லுலகெலாந் தம்புகழ் நிறீஇய
தளர்வில் கேள்விநக் கீரனார் முதலிய சான்றோர் 4

அன்ப ரெண்ணிய வெண்ணியாங் கந்நிலை யளிக்கும்
பின்பு தாழ்சடைப் பெருந்தகை யருளினாற் பெற்ற
பொன்பி றங்கிய தெய்வதப் பலகைதம் புலமை
வன்ப றிந்திடந் தரவதி லிருந்துள மகிழ்ந்து 5

யாக்கை பெற்றவர்க் குறுதியா மறம்பொரு ளின்பம்
போக்கி னுண்பொரு ளரிலறப் புதுமொழி புணர்த்துத்
தூக்கி னம்பல பலபுனைந் தெறிதிரை சுருட்டு
மாக்க ருங்கட லுலகிடைத் தமிழினை வளர்த்தே 6

வெள்ளைத் தாமரைச் செல்விதன் பெண்மையை விடுத்திட்
டெள்ளற் பாடிலா ணுருவெடுத் தெனமுடி யேந்தும்
பிள்ளைப் பான்மதி யான்றமி ழொருவனைப் பெருஞ்சீர்
வள்ளற் பாண்டியற் காருயிர்த் துணைவராய் வாழ்ந்தார். 7

இன்ன வாறவர் வாழுநா ளோர்பக லெரிகான்
மின்னு வாட்படைச் சேல்வல னுயர்த்ததார் வேந்தன்
பொன்னின் மாடத்தின் மேனிலைக் குழையடர் பூங்கண்
அன்ன மன்னவ ளோடினி தேறின னமர்ந்தான். 8

[அப்போது பாண்டிமாதேவியின் கூந்தலின் நறுமணம் அவன் மனத்தைக் கவர்ந்தது. அவன், அது தன் மனைவியின் கூந்தலுக்குரிய இயற்கை மணம் என்று மதித்தான்.]

மதித்த காவல னதுமனங் கொண்டுதன் மனத்தில்
தைத்த நுண்பொரு டரவொரு செய்யுள்செய் புலவர்
இதைக்கொள் கென்றுபொன் னயிர மொருகிழி யியற்றி
அதைப்பொற் சங்கமண் டபத்தின்முற் றூக்கின னன்றே. 9

புலவர் யாவருந் தாங்கண்ட வாறுபாப் புனைந்து
தலைவன் முன்புபோய்ச் சாற்றிய வனைத்தையுந் தண்டார்
மலைகொ டோளினன் மறுத்தலின் வறிதகன் றனர்;அவ்
விலகு பொற்கிழி யிருந்ததங் கறுப்பவ ரின்றி. 10

[அப்பொழுது தருமி என்னும் அருச்சகன் பஞ்சத்தால் வருந்தி, பொருள் இன்மையால் சிவபெருமானை வேண்ட, சிவபெருமான் பாண்டியன் பொற்கிழி தூக்கியிருப்பதைக் தருமிக்குத் கூறி]

‘ அங்கதை இப்பா வேந்தற்
கறைந்தனை பெறுதி,’ என்று
‘ **கொங்குதேர் வாழ்க்கை** ’ என்னுங்
கோதில்தூக் கீந்து விட்டான் ;

பொங்கிய களிப்பி னானும்
போய்த்தொடர் பமுதந் தன்னைத்
திங்கள்வெண் குடையி னான்றன்
செவிப்புலத் தூற்றி னானல். 11

மற்றது கேட்டுத் திங்கள்
மருகன்றா னினைந்த வண்ணஞ்
சொற்றலி னினிது வந்து,
'தொகுசங்கத் தவர்பாற் போயிப்
பொற்றபாட் டிசைவி,' என்றான் ;
பொருக்கெனத் தருமி சென்று
கற்றவ ரவைமுன் சொன்னான் ;
கவிகள்கேட் டலுமு வந்தார். 12

ஆங்கவர் தம்முட் கீரன்
அரும்பெறற் கல்விச் செல்வத்
தோங்கிய தருக்கி னால்,'இவ்
வுரைத்தபாக் குற்றம்,' என்றான் ;
தாங்கிய வுவகை சிந்தித்
தருமிதான் றனைவிற் போந்து
தேங்கமழ் கடுக்கை வேணிச்
செல்வனோ டிதனைச் சொன்னான். 13

கேட்டலு மங்க யற்கட்
கிளியுறழ் கிளவி பங்கன்
பாட்டியற் புலவ னாகிப்
பாவலர் தம்பாற் போய்,'எங்
கோட்டமில் கவிக்குக் குற்றங்
கூறின ரியாவர் ?' என்றான் ;
நாட்டிய புகழ்நக் கீரன்,
'நான்'எனத் தருக்கிச் சொன்னான். 14

சொல்லலும், 'குற்றம் யாது ?
சொல்,'என, 'நெடுங்க ணல்லார்
சில்லிருங் குழற்கு நாற்றஞ்
செயற்கையன் றியற்கை யுண்டோ ?

இல்லது கூற லான்மற்
றிதுகுற்றம்,' என்றான் ; அண்ணல்
' மல்லல்விண் மகளிர் கூந்தன்
மணமியல் பன்றே ?' என்றான். 15

என்றலும், ' அரம்பை யர்க்கும்
இருங்குழ லறிய நாற்றம்
இன்'றென வுரைத்தான் ; ஐயன்,
' இறைவியென் றுலக மேத்துங்
குன்றிறை பயந்த செல்வி
கூந்தலெற் 'றென்றான் ; கீரன்,
தன்றனித் தருக்கால், ' அம்மை
தனதுகூந் தலுமற் 'றென்றான். 16

ஏற்றினா னெற்றிக் கண்ணும்
எரிமருள் சடையுங் காட்ட,
மாற்றரு மருட்சி யான்,' கண்
வடிவெலாங் காட்டி னாலுஞ்
சாற்றிய செய்யுள் குற்றம் ;
சடைகொண்டு வெருட்டல் வேண்டா ;
தோற்றில னிதனுக்' கென்றான் ;
தொலைவிலான் வெகுண்டு சொல்வான் : 17

' எம்மொடு முரணி வான்றேய்
இமயமால் வரைப்பூங் கொம்பின்
மைம்மலி மறைசொல் லானா
மணங்கமழ் குழல்ப ழித்த
செம்மைகொ ளறிவி லாய்! நீ
தீர்ப்பருங் குட்ட நோய்கொண்
டிம்மையி லலைக !' என்றான் ;
இறப்பநக் கீர னஞ்சி 18

முழுமெயும் பனித்தி ரங்கி
முருகலர் கமலம் வென்ற
கழலடி வீழ்ந்தி றைஞ்சிக்
' கருணையங் கடலே ! எந்தாய் !

இழிபுடை நாயி னன்னேன்
இலங்கறி விலாது செய்த
பிழைபொறுத் தருளிச் சாபப்
பிணிகெட வருள்வாய்,' என்றான். 19

என்றலுங் கருணை வள்ளல்
எரிசினந் தணிந்து, 'கீர !
சென்றுநீ கயிலை காணிற்
றீருமிக் கொடுநோய்,' என்று
குன்றுறழ் புரிசை விண்டோய்
கோயிலிற் புகுந்தொ ளித்தான் ;
தென்றலம் பொதிய வெற்பிற்
றென்னர்கோ னதிச யித்தான். 20

—சிவப்பிரகாசர்

3. பெரிய புராணம்

மனு நீதி கண்ட புராணம்

நிலம கட்கழ கார்திரு நீள்நுதல்
திலகம் ஒப்பது செம்பியர் வாழ்பதி ;
மலர்ம கட்குவண் டாமரை போல்மலர்ந்
தலகில் சீர்த்திரு வாரூர் விளங்குமால். 1

அன்ன தொல்நக ருக்கர சாயினான்,
துன்னும் செங்கதி ரோன்வழித் தோன்றினான் ;
மன்னு சீர்அந பாயன் வழிமுதல்
மின்னும் மாமணிப் பூண்மனு வேந்தனே. 2

மண்ணில் வாழ்தரு மன்னுயிர் கட்கெலாம்
கண்ணும் ஆவியும் ஆம்பெருங் காவலான் ;
விண்ணு ளார்மகிழ் வெய்திட வேள்விகள்
எண்ணி லாதன மாணஇ யற்றினான். 3

அறம்பொருள் இன்பம் ஆன அறநெறி வழாமல் புல்லி,
மறங்கடிந்(து), அரசர் போற்ற வையகம் காக்கும் நாளில்,
சிறந்தநல் தவத்தால் தேவி திருமணி வயிற்றின் மைந்தன்
பிறந்தனன் உலகம் போற்றப் பேரரிக் குருளை அன்னான். 4

அளவில்தொல் கலைகள் முற்றி, அரும்பெறல் தந்தை மிக்க
உளமகிழ் காதல் கூர, ஓங்கிய குணத்தால் நீடி
இளவர சென்னும் தன்மை எய்துதற் கணியன் ஆகி,
வளரிளம் பரிதி போன்று வாழும்நாள் ஒருநாள் மைந்தன் 5

திங்கள்வெண் கவிகை மன்னன் திருவளர் கோயில் நின்று
மங்குல்தோய் மாட வீதி மன்னிளங் குமரர் சூழக்
கொங்கலர் மாலை தாழ்ந்த குங்குமக் குவவுத் தோளான்
பொங்கிய தானை சூழத் தேர்மிசைப் பொலிந்து போந்தான். 6

அம்புனிற் றாவின் கன்றோர் அபாயத்தின் ஊடு போகிச்
செம்பொனின் தேர்க்கால் மீது விசையினால் செல்லப் பட்டங்(கு)
உம்பரின் அடையக் கண்டங் குருகுதாய் அலமந் தோடி,
வெம்பிடும் ; அலறும் ; சோரும் ; மெய்ந்நடுக் குற்று வீழும். 7

மற்றது கண்டு மைந்தன்,
 ‘வந்ததிங் கபாயம் !’ என்று
சொற்றடு மாறி, நெஞ்சில்
 துயருழந் தறிவ ழிந்து,
‘பெற்றமும் கன்றும் இன்றென்
 உணர்வெனும் பெருமை மாளச்
செற்ற;என் செய்கேன் !’ என்று
 தேரினின் றிழிந்து வீழ்ந்தான். 8

தன்னுயிர்க் கன்று வீயத் தளர்ந்தவாத் தரியா தாகி,
முன்னெருப் புயிர்த்து விம்மி, முகத்தினில் கண்ணீர் வார,
மன்னுயிர் காக்கும் செங்கோல் மனுவின்பொற் கோயில் வாயில்
பொன்னணி மணியைச் சென்று கோட்டினால் புடைத்த தன்றே. 9

மன்னவன் அதனைக் கேளா,
 வருந்திய பசுவை நோக்கி,
‘என்னிதற் குற்ற(து) ?’ என்பான்
 அமைச்சரை இகழ்ந்து நோக்க,
முன்னுற நிகழ்ந்த எல்லாம்
 அறிந்துளான் முதிர்ந்த கேள்வித்
தொன்னெறி அமைச்சன் மன்னன்
 தாளிணை தொழுது சொல்வான் : 10

'வளவ!நின் புதல்வன் ஆங்கோர்
மணிநெடுந் தேர்மேல் ஏறி
அளவில்தேர்த் தானை சூழ
அரசுலாம் தெருவில் போங்கால்,
இளையஆன் கன்று தேர்க்கால்
இடைப்புகுந் திறந்த தாகத்
தளர்வுறும் இத்தாய் வந்து
விளைத்ததித் தன்மை,' என்றான். 11

அவ்வுரை கேட்ட வேந்தன்
ஆவுறு துயரம் எய்தி,
வெவ்விடந் தலைக்கொண் டாற்போல்
வேதனை அகத்து மிக்(கு)'இங்
கிவ்வினை விளைந்த வாறு!'என்(று)
இடர்உறும் ; இரங்கும் ; ஏங்கும்;
'செவ்விதென் செங்கோல் !' என்னும் ;
தெருமரும் ; தெளியும் ; தேறான். 12

மந்திரிகள் அதுகண்டு, மன்னவனை அடிவணங்கி,
'சிந்தைதளர்ந் தருளுவது மற்றிதற்குத் தீர்வன்றால்,
கொந்தலர்தார் மைந்தனைமுன் கோவதைசெய் தார்க்குமறை
அந்தணர்கள் விதித்தமுறை வழிநிறுத்தல் அறம்,'என்றார். 13

'வழக்கென்று நீர்மொழிந்தால் மற்றதுதான் வலிப்பட்டுக்
குழக்கன்றை இழந்தலறும் கோவுறுநோய் மருந்தாமோ ?
இழக்கின்றேன் மைந்தனையென் றெல்லீரும் சொல்லியவிச்
சழக்கின்று நான்இயைந்தால் தருமந்தான் சலியாதோ ? 14

'என்மகன்செய் பாதகத்துக் கிருந்தவங்கள் செயவிசைந்தே
அன்னியன்ஓர் உயிர்கொன்றால் அவனைக்கொல் வேனானால்,
'தொன்மனுநூல் தொடைமனுவால் துடைப்புண்ட'தெனும் [வார்த்தை
மன்னுலகில் பெறமொழிந்தீர் ; மந்திரிகள் வழக்(கு)!'என்றான். 15

எனமொழிந்து, 'மற்றிதனுக் கினியிதுவே செயல்:இவ்வான்
மனமழியும் துயரகற்ற மாட்டாதேன் வருந்தும்இது
தனதுறுபே ரிடர்யானும் தாங்குவதே கருமம்,'என
அனகனரும் பொருள்துணிந்தான் ; அமைச்சருமஞ் சினரகன்றார்.

மன்னவன்தன் மைந்தனையங் கழைத்தொருமந் திரிதன்னை,
'முன்னிவனை அவ்வீதி முரண்தேர்க்கால் ஊர்க,'என,
அன்னவனும் அதுசெய்யா தகன்றுதன்னு ருயிர்துறப்பத்
தன்னுடைய குலமகனைத் தான்கொண்டு மறுகணைந்தான். 17

ஒருமைந்தன் தன்குலத்துக் குள்ளானென் பதுமுணரான்;
'தருமந்தன் வழிச்செல்கை கடன்,'என்று தன்மைந்தன்
மருமந்தன் தேராழி உறவூர்ந்தான் மனுவேந்தன்;
அருமந்த அரசாட்சி அரிதோ,மற் றெளிதோதான்! 18

தண்ணளிவெண் குடைவேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைபொழிந்தார்; வானவர்பூ மழைசொரிந்தார்;
அண்ணலவன் கண்ணெதிரே அணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்கள் தொழநின்றான் **வீதிவிடங் கப்பெருமான்.**

அந்நிலையே உயிர்பிரிந்த ஆன்கன்றும் அவ்வரசன்
மன்னுரிமைத் தனிக்கன்றும் மந்திரியும் உடனெழலும்
இன்னபரி சானனென் றறிந்திலன்வேந் தனும்;யார்க்கும்
முன்னவனே முன்னின்றால் முடியாத பொருளுளதோ! 20

—சேக்கிழார்

4. கம்பராமாயணம்

பாலகாண்டம்

கையடைப் படலம்

நனைவரு கற்பக நாட்டு நன்னகர்
அனைவரும் அணைதர அயிர்க்கும் சிந்தையால்
நினையவும் அரியது விசும்பின் நீண்டதோர்
புனைமணி மண்டபம் பொலிய எய்தினன். 1

தூயமெல் லரியணைப் பொலிந்து தோன்றினன்,
சேயிரு விசும்பிடைத் திரியும் சாரணர்,
'நாயகன் இவன்கொல்!'என் றயிர்த்து, 'நாட்டம்ஓர்
ஆயிரம் இல்லை'என்(று) ஐயம் நீங்கவே 2

மடங்கல்போல் மொய்ம்பினன் முன்னர், 'மன்னுயிர்
அடங்கலும் உலகும்வே றமைத்துத் தேவரோ(டு)

இடங்கொள்நான் முகனையும் படைப்பன் ஈண்'டெனத்
தொடங்கிய கோசிக முனிவன் தோன்றினன். 3

வந்துமுனி எய்துதலும் மார்பிலணி ஆரம்
அந்தரத லத்திரவி அஞ்சஒளி விஞ்ச,
கந்தமல ரிற்கடவுள் தன்வரவு காணும்
இந்திரன்எ னக்கடிதெ ழுந்தடிப ணிந்தான். 4

பணிந்துமணி செற்றுபுகு யிற்றிஅவிர் பைம்பொன்
அணிந்ததவி சிட்டினித ருத்தியொ டிருத்தி,
இணைந்தகம லச்சரண்அ ருச்சனைசெய்(து), 'இன்றே
துணிந்ததென்வி னைத்தொடர்'ப னத்தொழுது சொல்லும்: 5

'நிலம்செய்தவம் என்றுணரின் அன்று; நெடி யோய்!என்
நலம்செய்வினை உண்டெனினும் அன்று;நகர் நீயான்
வலம்செய்துவ ணங்களரி வந்தஇது, முந்தென்
குலம்செய்தவம்,' என்றினிது கூற,முனி கூறும்: 6

'என்னனைய முனிவரரும் இமையவரும்
இடையூறொன் றுடைய ரானல்
பன்னகமும் நகுவெள்ளிப் பனிவரையும்
பாற்கடலும் பதும பீடத்
தன்னகரும் கற்பகநாட் டணிகவரும்
அணிமாட அயோத்தி என்னும்
பொன்னகரும் அல்லாது புகலுண்டோ?
இகல்கடந்த புலவு வேலோய்! 7

'இன்தளிர்க்கற் பகநறுந்தேன் இடைதுளிக்கும்
நிழலிருக்கை இழந்து போந்து,
நின்றளிர்க்கும் தனிக்குடையின் நிழலொதுங்கிக்
குறையிரந்து நிற்ப நோக்கி,
குன்றளிக்கும் குருமணித்தோள் சம்பரனைக்
குலத்தோடும் தொலைத்து நீகொண்(டு)
அன்றளித்த அரசன்றோ புரந்தரன்இன்(று)
ஆள்கின்ற தரச!' என்றான். 8

உரைசெய்யும் அளவில்அவன் முகம்நோக்கி,
உள்ளத்தில் ஒருவ ராலும்
கரைசெய்ய அரியதொரு பேருவகைக்
கடல்பெருக, கரங்கள் கூப்பி,
‘அரசெய்தி இருந்தபயன் எய்தினன்! மற்(று)
இனிச்செய்வ தருளு’ கென்று
முரசெய்து கடைத்தலையான் முன்மொழிய,
பின்மொழியும் முனிவன் ஆங்கே : 9

‘தருவனத்துள் யானியற்றும் தகைவேள்விக்(கு)
இடையூறுய்த் தவஞ்செய் வோரை
வெருவரச்சென் றடைகாம வெகுளியென
நிருதர் இடை விலக்கா வண்ணம்
‘செருமுகத்துக் காத்தி,’ என நின்சிறுவர்
நால்வரினும் கரிய செம்மல்
ஒருவனைத்தந் திடுதி,’ என உயிரீர்க்கும்
கொடுங்கூற்றின் உளையச் சொன்னான். 10

எண்ணிலா அருந்தவத்தோன் இயம்பியசொல்
மருமத்தின் எறிவேல் பாய்ந்த
புண்ணிலாம் பெரும்புழையில் கனல்நுழைந்தா
லெனச்செவியிற் புகுத லோடும்,
உண்ணிலா வியதுயரம் பிடித்துந்த,
ஆருயிர்நின் றூச லாட,
கண்ணிலான் பெற்றிழந்தான் எனவுழந்தான்
கடுந்துயரம் கால வேலான். 11

தொடையூற்றில் தேன்துளிக்கும் நறுந்தாரான்
ஒருவண்ணம் துயர நீங்கி,
‘படையூற்றம் இலன்; சிறியன் இவன்; பெரியோய் !
பணிஇதுவேல், பனிநீர்க் கங்கை
புடையூற்றும் சடையானும் புரந்தரனும்
வெகுண்டெழுந்து புகுந்து செய்யும்
இடையூற்றுக் கிடையூறு யான்காப்பென்
பெருவேள்விக் கெழுக,’ என்றான். 12

என்றனன்;என் றலுமுனிவோ டெழுந்தனன்மண்
படைத்தமுனி; இறுதிக் காலம்
அன்றெனஆம் எனஇமையோர் அயிர்த்தனர்;மேல்
வெயில்கரந்த(து); அங்கும் இங்கும்
நின்றனவும் திரிந்தன;மீ நிவந்தகொழுங்
கடைப்புருவம் நெற்றி முற்றச்
சென்றன;வந் ததுநகையும்; சிவந்தனகண்;
இருண்டனபோய்த் திசைகள் எல்லாம். 13

கறுத்த மாமுனி கருத்தை உன்னி,'நீ
பொறுத்தி !' என்றவற் புகழ்ந்து, 'நின்மகற்(கு)
உறுத்த லாகலா உறுதி எய்துநாள்
மறுத்தி யோ!'என வசிட்டன் கூறுவான்: 14

'பெய்யும் மாரியால் பெருகு வெள்ளம்போய்
மொய்கொள் வேலைவாய் முடுகு மாறுபோல்
ஐய ! நின்மகற் களவில் விஞ்சைவந்(து)
எய்து காலமின் றெதிர்ந்த(து),' என்னவே 15

குருவின் வாசகம் கொண்டு கொற்றவன்,
' திருவின் கேள்வனைக் கொணர்மின் சென்'றென,
' வருக ' என்றனன், என்ன லோடும்வந்(து)
அருகு சார்ந்தனன் அறிவின் உம்பரான். 16

வந்த நம்பியைத் தம்பி தன்னொடு
முந்தை நான்மறை முனிக்குக் காட்டி,'நல்
தந்தை நீ;தனித் தாயும் நீஇவர்க்(கு);
எந்தை ! தந்தனன் ; இயைந்த செய்'கென்றான். 17

கொடுத்த மைந்தரைக் கொண்டு சிந்தைமுந்(து)
எடுத்த சீற்றம்விட் டினிது வாழ்த்தி,'மேல்
அடுத்த வேள்விபோய் முடித்தும் நாம்,'என
நடத்தல் மேயினான், நவைக்கண் நீங்கினான். 18

—கம்பநாடர்

5. ஸ்ரீமத் குமாரசுவாமியம்

திருக்கைலாயத் திருவிளையாடல்

அளவி லாவறி வன்சர வணத்தட மமல
நளின மீதறு குழவிக ளாய்மிளிர் ஞான்றே
அளக நீள்சிவை, 'அறுமுக னுயவிர் ஒ'கன்றே
வளர்க ரங்களி னணைத்தது கண்டுள மகிழ்ந்தாள். 1

அருத்தி ஞடிரு வமுதமு முண்டதா ராப்பூண்
ஒருத்த ஞேடவ ளோடும டைந்ததொண் கயிலை
திருத்த மார்நவ வீரர்க ளிலக்கர்கள் சிதரு
அருத்தி யோடுற வாடலுங் கொண்டதம் மழவே. 2

காலி னேழ்கட லுடைத்தது விடுத்தது கடின
மாலி ருவெழு வான்வரை தகர்த்தது வகைசால்
வேலி னுலிருந் திசைக்கரி யாவையும் வீரிட்
டோலி டுஞ்சிறு பந்தென வாடிய துவப்பால். 3

இன்ன வாறுபல் பெருந்திரு வாடல்க ளிழைத்த
இன்ன லேதுமில் பரம்பொரு ளென்விளை யாட்டாற்
பின்ன மாயவெல் லாமுனம் போற்பிறங் குகவென்
றுன்னி யன்னண மாக்கிய மாண்பெவ ருறுவார்? 4

பின்றை மாகயி லாயம தடைந்தெழில் பிறங்கு
மன்றன் மெய்யிளம் பூரணன் வதிதரு காலை
கொன்றை சூடியை நினைந்தொரு நாரதன் குயிலு
கின்ற வேள்வியிற் றகர்பிறந் ததுமுறை கெடலால் 5

தண்டை நூபுரங் கால்களிற் றயங்குமத் தகர்தான்
கொண்ட சேவுடல் குலுக்கியெப் புவனமுங் குலுங்க
மண்டி யேவரு கிறததை யடக்கென மாண்பார்
அண்டர் மாதவர் தொழுதனர் சேயவ னடியை. 6

வீர பாகுதன் கைகளி னுலதன் மிடன்மெய்ச்
சீர ருவணம் பிடித்ததைக் கொணர்தலுஞ் சேய்மைத்
தார மேனிய னதன்மிசை யிவர்ந்துபஃ றலமும்
ஓர ருமலு லாவி,'என் னூர்தியிஃ ஒ'தன்றுன். 7

அக்க டாவுமவ் வாறமர் வடைந்தபின் னளியாற்
சொக்க ருவய னரனடி களின்மலர் தூவி
மிக்க வோகையோ டேவெளி வருகையின் மிடலார்
செக்கர் வேளடி போற்றலி லாதய றிரிந்தான். 8

அவ்வ யன்றனை யழைத்து,' முற் குடிலையி னருத்தஞ்
செவ்வ னேதுதி,' எனக்குகன் கழறலும், ' சிருட்டி
எவ்வ மின்றுசெய் நானது,' என்றய னியம்ப,
உவ்வி புண்ணுறப் புடைத்தன னவனையவ் வொருவன். 9

குட்டி, ' மேல்துதைத் திருந்தளை யிட்டிவற் கொடுபோய்
விட்டி டாதுகந் தாசல மிருத்துமின்,' எனுஞ்சூள்
இட்ட வாறுசெய் தனர்கணர் ; ஈசனுக் கவ்வோம்
கட்ட தோதின னருணையன் புகழ்தனிக் கடவுள். 10

—குமரகுரு தாசர்

V. சிறு நூல்கள்

1. சீட்டுக் கவி

தூதஞ்சு நாழிகையி லாறுநா ழிகைதனில்
சொற்சந்த மாலைசொல்லத்
துகளிலா அந்தாதி ஏழுநா ழிகைதனில்
தொகைபட விரித்துரைக்கப்
பாதஞ்செய் மடல்கோவை பத்துநா ழிகைதனில்
பரணியொரு நாள்முழுதுமே
பாரகா வியமெலாம் ஓரிரு தினத்திலே
பகரக் கொடிக்கட்டினேன் ;
சீதஞ்செ யுந்திங்கள் மரபினன் நீடுபுகழ்
செய்யதிரு **மலைராயன்**முன்
சீறுமா றென்றுமிகு தாறுமா றுகள்சொல்
திருட்டுக் கவிப்புலவரைக்
காதங்க றுத்துச் சவுக்கிட் டடித்துக்
கதுப்பிற் புடைத்துவெற்றிக்
கல்லணையி னெடுகொடிய கடிவாள மிட்டேறு
கவிகாள மேகம்நானே. 1

—காளமேகப் புலவர்

ஏடாயி ரங்கோடி எழுதாமல் தன்மனத்(து)
எழுதிப் படித்தவிரகன்
இமசேது பரியந்த மெதிரிலாக் **கவிவீர**
ராகவன் விடுக்கும்ஓலை,
சேடாதி பன்சிர மசைத்திடும் புகழ்பெற்ற
திரிபதகை குலசேகரன்
தென்பாலை சேலம் புரந்துதா கந்தீர்த்த
செழியனெதிர் கொண்டுகாண்க :
பாடாத கந்தருவம், எறியாத கந்துகம்,
பற்றிக்கொ லாதகோணம்,
பறவாத கொக்கனற் பண்ணுத கோடை,வெம்
படையிற் றொடாதகுந்தம்,

சூடாத பாடலம், பூவாத மாவொடு
தொடுத்துமுடி யாதசடிலம்,
சொன்னசொல் சொல்லாத கிள்ளையொன் றெங்கும்
துதிக்கவர விடல்வேண்டுமே. 2

—அந்தகக்கவி வீரராகவ முதலியார்

2. கலிங்கத்துப் பரணி

போர்

எடுமெடு மெடுமென வெடுத்ததோர்
இகலொலி கடலொலி யிகக்கவே
விடுவிடு விடுபரி கரிக்குழாம்
விடும்விடு மெனுமொலி மிகைக்கவே. 1

வெருவரு வரிசிலை தெறித்தநாண்
விசைபடு திசைமுகம் வெடிக்கவே
செருவிடை யிளையவர் தெழித்ததோர்
தெழியுல குகள்செவி டெடுக்கவே. 2

எறிகட லொடுகடல் கிடைத்தபோல்
இருபடை களுமெதிர் கிடைக்கவே
மறிதிரை யொடுதிரை மலைத்தபோல்
வருபரி யொடுபரி மலைக்கவே. 3

கனவரை யொடுவரை முனைத்தபோற்
கடகரி யொடுகரி முனைக்கவே
இனமுகி லொடுமுகி லெதிர்த்தபோல்
இரதமு மிரதமு மெதிர்க்கவே. 4

பொருபுலி புலியொடு சிலைத்தபோற்
பொருபட ரொடுபடர் சிலைக்கவே
அரியினொ டரியின மடர்ப்பபோல்
அரசரு மரசரு மடர்க்கவே. 5

விளைகனல் விழிகளின் முளைக்கவே
மினலொளி கனலிடை பிறக்கவே
வளைசிலை யுருமென விடிக்கவே
வடிகணை நெடுமழை சிறக்கவே. 6

குருதியி னதிவெளி யரக்கவே
குடர்நுரை நுரையென மிதக்கவே
கரிதுணி படுமுட லடுக்கியே
கரையென விருபுடை கிடக்கவே. 7

—சயங்கொண்டார்

3. திருவிளையாடல் அம்மானை

சங்கப் பலகை தந்தது

கருணை நிறைகூடல் கயற்கண்மகிழ் சொக்கேசர்
ஒருகையிற்சங் கேந்திக் குயர்ந்தவர்காண் அம்மானை!
ஒருகையிற்சங் கேந்திக் குயர்ந்தவரே ஆமாகில்
தருமவர்தம் கையினிற்பல் சங்கமுண்டோ அம்மானை!
சங்கப் பலகையறத் தாம்அளித்தார் அம்மானை! 1

தருமிக்குப் பொற்கிழி அளித்தது

நல்களனப் பொற்கிழியை நற்றருமிக் கென்றுகவி
சொல்லிவிட்டார் தென்மதுரைச் சுந்தரனார் அம்மானை!
சொல்லிவிட்டார் தென்மதுரைச் சுந்தரனா ராமாகில்
வல்லகவிக் கேன்கீரன் மாசோதும் அம்மானை!
மாசோதி யாரடியார் வாயுள்ளார் அம்மானை! 2

கீரனைக் கரையேற்றியது

சொக்கேசன் சங்கம் துதித்திடப்பொற் றாமரைவீழ்
அக்கீர னைக்கரையேற் றன்புவைத்தான் அம்மானை!
அக்கீர னைக்கரையேற் றன்புவைத்தா னுமாகில்
தக்கனுக்காட் டுத்தலையேன் தான்வைத்தான் அம்மானை!
தானும்மன் றுட்டின் தலைவைத்தான் அம்மானை! 3

—திருநெல்வேலி நாகலிங்கம் பிள்ளை

4. காவடிச் சிந்து

கழுகு மலை வளம்

தெள்ளுதமி ழுக்குதவு சீலன் துதி
செப்பணும லைக்குமனு கூலன் வளர்
செழியப் புகழ்விளைத்த கழுகு மலைவளத்தை
தேனே! சொல்லு வேனே!
வெள்ளிமலை யொத்தபல மேடை முடி
மீதினிலே கட்டுகொடி யாடை அந்த
வெய்யவன் நடத்திவரு துய்யவிர தப்பரியும்
விலகும் படி யிலகும்!

வீதிதொறும் ஆதிமறை வேதம் சிவ
வேதியர்கள் ஓதுசாம கீதம் அதை
மின்னுமலர்க் காவதனிற் றுன்னுமடப் பூவையுடன்
விள்ளும் கிள்ளைப் புள்ளும்.
சீதளமு கிற்குவமை கூறும் உயிர்
சிந்துரங்கள் சிந்துமதத் தாறும் நின்ற
சித்திரம் நிகர்த்தமின்னர் பற்றிப்பூசி டுங்குங்குமச்
சேறும் காதம் நாறும்.

கத்துகடல் ஒத்தகடை வீதி முன்பு
கட்டுதர ளப்பந்தலின் சோதி எங்கும்
காட்டுவதால் ஈரிரண்டு கோட்டுமத யானையிற்பல்
களிறும் நிறம் வெளிறும்.
முத்தமிழ்சேர் வித்வசனக் கூட்டம் கலை
முற்றிலும் உணர்ந்திடுங்கொண் டாட்டம் நெஞ்சில்
முன்னுகின்ற போதுநறுந் தென்மலையில் மேவுகுறு
முனிக்கும் அச்சம் சனிக்கும்.

துள்ளியெழு வெள்ளிமலை மடங்கும் படி
சுற்றிலும் வளைந்தஅகழ்க் கிடங்கும் பல
சொன்னமலை போன்மதிலும் மின்னுவதி ஞலேபுகழ்
தோன்றும் லோகம் மூன்றும்.
கள்ளவிழ் கடப்பமலர் வாகன் குறக்
கன்னியை விரும்பிடும்வி ஞேதன் வளர்
கழுகு மலைநகரின் வளமையென் நாவிலடங்
காதே மட மாதே !

—சென்னிகுளம் அண்ணமலை ரெட்டியார்

VI. வருணனை

1. இமயமலை

குடதிசை குணதிசை தழுவிய குரைகடல்
இடைநுழை இருதலை இமயம தெனுமலை
வடதிசை யுளதது மலையர சிதுவென
இடமுடை யுலகவர் இடுபெய ருடையது. 1

பகுமுக மொடுதிகழ் பகிரதி யிழிதரு
மொகுமொகு மெனுமொலி முழவொலி யதுவர
அகமகி ழுறுபத அளியிசை முரல்தர
மிகமயில் நடமுறு விரிபொழில் உடையது. 2

—ஒட்டக்கூத்தர்

2. யாறு

தாதுகு சோலை தோறும், சண்பகக் காடு தோறும்,
போதவிழ் பொய்கை தோறும், புதுமணல் தடங்கள் தோறும்,
மாதவி வேலிப் பூக வனந்தொறும், வயல்கள் தோறும்,
ஓதிய உடம்பு தோறும் உயிரென உலாய தன்றே.

—கம்ப நாடர்

3. பாண்டி நாடு

நந்தின் இளஞ்சினையும் புன்னைக் குவிமொட்டும்
பந்த ரிளங்கமுகின் பாளையும்—சிந்தித்
திகழ்முத்தம் போல்தோன்றும் செம்மற்றே தென்னன்
நகைமுத்த வெண்குடையான் நாடு.

—முத்தொள்ளாயிரம்

4. சூரியோதயம்

மீனுடை யெயிற்றுக் கங்குல் கனகனை வெகுண்டு வெய்ய
கானுடைக் கதிர்க ளென்னும் ஆயிரங் கரங்கள் ஓச்சித்
தானுடை உதய மென்னுந் தமனியத் தறியி னின்று
மானுட மடங்கல் என்னத் தோன்றினன் வயங்கு வெய்யோன்

—கம்பநாடர்

5. சந்திரோதயம்

கான்எலாம் மலர்ந்த முல்லை
ககனமீ தெழுந்த தென்ன
வான்எலாம் வயங்கு தாரை
நிரைநிரை மலர்ந்து தோன்ற
வேனிலான் விழவின் வைத்த
வெள்ளிவெண் கும்பம் என்னத்
தூநிலா மதியம் வந்து
குணதிசை தோன்றிற் றம்மா ;

—வில்லிபுத்தூராழ்வார்

VII. தனிப்பாடல்கள்

தேங்காய்—நாய்

ஓடு மிருக்குமத னுள்வாய் வெளுத்திருக்கும்
நாடுங் குலைதனக்கு நாணாது—சேடியே !
தீங்காய தில்லாத் திருமலைரா யன்வரையில்
தேங்காயு நாயுமிணை செப்பு. 1

மூவேந்தர் முடி

சேனை தழையாக்கிச் செங்குருதி நீர்தேக்கி
ஆனை மிதித்த வடிச்சேற்றில்—மானபரன்
மாவேந்தர் வேந்தன் பறித்துநட்டா னேகம்பன்
மூவேந்தர் தங்கண் முடி. 2

புகையிலை, புலை, கைலை

நாலெழுத்துப் பூடு நடுவே நரம்பிருக்கும்
காலுந் தலையுங் கடைச்சாதி—மேலாக
ஒட்டு முதலெழுத்து மோதுமூன் றுமெழுத்தும்
விட்டாற் பரமனுக்கு வீடு. 3

கைத்தடி

முனியதட்டு முட்டுக்கு முன்னீ ரளக்கும்
கனியுதிர்க்குங் கவ்வுநாய் காக்கும்—தனிவழிக்குப்
பத்திரம தாகும் பயந்தீர்க்கும் பாம்படிக்கும்
கைத்தலத்திற் றண்டிருந்தக் கால். 4

குறிப்புரை

I. இறை வணக்கம்

தாயுமானவர் திரிசிராப்பள்ளியில் அரசு செலுத்திய விசய ரகுநாத சொக்கலிங்க நாயகரின் அரசாங்கத்தில் கணக்கராயிருந்த **கேடிலியப்ப பிள்ளை** என்பவரின் புதல்வருள் இரண்டாமவர்; தந்தையாருக்குப் பிறகு தாம் அத்தொழிலில் அமர்ந்தார்; **மட்டுவார் குழலியம்மை** என்னும் பெண் மணியை மணந்து இல்லறம் நடத்தி வந்தார். ஆயினும், அவர் மனம் எப்போதும் ஞானத்தையே நாடி இருந்தது. ஆதலால், அவர் **திருமூலர்** மரபினரான **மௌனகுரு** என்பவரிடம் உபதேசம் பெற்றார்; தம் மனைவியாரின் மறைவுக்குப் பின் துறவறம் பூண்டு, பல ஸ்தலங்களைத் தரிசித்து வந்தார். அவர் ஞான யோகத்தில் ஈடுபட்டு, இராமநாதபுரத்தைச் சேர்ந்த இலட்சுமி நகரத்தின் ஒரு பகுதியான சோலையொன்றில் 1742ல் இறுதி எய்தினர். அவர் முத்தியெய்திய ஆண்டு 1659 என்று சிலரும், 1759 என்று சிலரும் கூறுவர். அவர் பாடல்கள் பொதுமை வாய்ந்தவை.

அங்கு - தூரத்தில், இங்கு - சமீபத்தில், ப்ரகாசமாய் - பேரொளியாய், அகிலாண்டகோடி - கோடிக்கணக்கான புவனங்கள், தங்கும்படிக்கு - நிலைபெற்றிருக்குமாறு, இச்சை - விருப்பம், உயிர்க்கு உயிராய் - உயிர்க்குள் உயிராகி, தழைத்தது - பரந்திருப்பது, தட்டாமல் - எட்டாமல், சமய கோடிகள் - பல வேறு மதங்கள், தொடர்ந்து - விடாது பற்றி, எதிர்வழக்கிடவும் - நேர் நின்று வாதிக்கவும், நின்றது எது - அவரவர் தெய்வமாய் நின்றது எந்தப் பொருள், பெரு வழக்காய் - முடிவு பெறாத வழக்காகி, சித்து - சேதனம் (எல்லாம் உணரும் அறிவு), மேல் - மேலும், கங்குல் - இரவு, கண்டன எல்லாம் - காணப்படும் பொருள்கள் அனைத்தும், மோன உரு - மௌன உருவம், வெளியதாகவும் - வெறு வெளியாகவும், அஞ்சலி செய்குவாம் - கைகூப்பி வணங்குவோம்.

II. தமிழ் மொழி வாழ்த்து

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை கி. பி. 1855ல் ஆலப்புழையில் பிறந்தார். இவர் தந்தையார் பெயர் **பெருமாள் பிள்ளை** என்பது. சுந்தரம் பிள்ளையவர்கள், M. A. பட்டம் பெற்றவர்; திருவனந்தபுரம் மகாராசா கல்லூரியில் தத்துவப் பேராசிரியராய்த் தொண்டாற்றியவர்; தமிழில் வல்லவர்; ஆராய்ச்சியில் வல்லவர். இவர் இயற்றிய நூல்களுள் ஆசிரியப் பாவால் இயன்ற **மனோன்மணீயம்** என்னும் நாடக நூல் அழியாப்புகழ் உடையது. இச்செய்யுள் அந்நூலில் உள்ள தமிழ் வாழ்த்து. சுந்தரம் பிள்ளையவர்கள் 1897ல் மறைந்தார்.

படைத்து - உண்டாக்கி, அளித்து - காத்து, துடைக்கினும் - அழிக்கினும், பரம்பொருள் - இறைவன், இருந்தபடி இருப்பது போல் - எப்போ

தும் ஒரே நிலையில் இருப்பது போல, களி - மகிழ்ச்சி, கவின் - அழகு, உதரம் - வயிறு, ஆரியம் - சம்ஸ்கிருதம், சிதையா - அழியாத.

III அறவுரை

1. திருமந்திரம்

திருமூலர் : இவர் ஒரு சித்த புருஷர். ஒரு நாள் இவர் கைலாயத்திலிருந்து பொதியமலையை நோக்கி வருகையில் பசு மேய்த்துக்கொண்டிருந்த மூலன் என்பவன் இறக்க, பசுக்கள் அவன் உடலை மோந்து மோந்து அழக்கண்டு, தம் உடலை விட்டு அவனுடலிற்பாய்ந்து எழுந்து, பசுக்களின் துன்பத்தைப் போக்கி, பின்பு தமது பழவுடலைக் காணாது திருவாவடுதுறை சென்று, ஓர் அரசமர நீழலில் அமர்ந்து யோகஞ்செய்து, மூவாயிரம் ஆண்டு இருந்து, ஆண்டுக்கொரு பாவாக மூவாயிரம் திருமந்திரப் பாக்களைப் பாடி, மீண்டும் கைலாயத்தையடைந்து, இறைவனுடன் இரண்டறக் கலந்தார் என்பர்.

1. நினைமின் - தியானியுங்கள், நமன் - எமன், நாளும்-எந்நாளும், கதி - பிறப்பு, சித்தத்து - மனத்தில், உய்மின் - பிழையுங்கள்.

2. அறுமின்கள் - நீக்குங்கள், ஆய் வரும் - விருத்தியாகும்.

2. புறநானூறு

கடைச்சங்க நூல்கள் முப்பத்தாறு. பாக்களில் பயின்று வந்துள்ள அடிகளின் சிறுமை பெருமைகளை நோக்கியும், பொருள்களை நோக்கியும் இம்முப்பத்தாறு நூல்களுள் பதினெட்டை **மேற்கணக்கு நூல்கள்** என்றும், மற்றும் பதினெட்டைக் **கீழ்க்கணக்கு நூல்கள்** என்றும் வகுத்துள்ளனர். மேற்கணக்கு நூல்கள் **பத்துப் பாட்டு** என்றும், **எட்டுத் தொகை** என்றும் இரு வகைப்படும். புலவர் பலர் இயற்றிய பாக்களால் தொகுக்கப்படுவது **தொகைநூல்** எனப்படும். **புறநானூறு** என்பது புலவர் பலரால் இயற்றப்பட்ட நானூறு பாக்களைக் கொண்ட தொகை நூல்.

1. யான் உயிர் என்பது அறிகை - நானே உலகத்துக்கு உயிர் என்பதைத் தெரிந்துகொள்ளல், தானை வேந்தற்கு - சேனையை உடைய அரசனுக்கு, கடன் - கடமை.

2. ஈன்று - பெற்றெடுத்து, புறந்தருதல் - வளர்த்தல், என் தலைக் கடன் - (தாயாகிய) எனது முதன்மையான கடமை, சான்றோன் - அறிவுடையவன், கொல்லன் - கருமான், நல்கல் - அளித்தல், ஒளிறு - பிரகாசிக்கின்ற, சமம் - போர், முருக்கி - அழித்து, களிறு எறிந்து - யானைகளைக் கொன்று, பெயர்தல் - மீளுதல், காளை - ஆண் மகன்.

3. மணிமேகலை

மணிமேகலை கடைச்சங்க காலத்தையடுத்துத் தோன்றிய **ஐம்பெருங்காப்பியங்களுள்** ஒன்று. **சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், வளையாபதி, குண்டலகேசி** என்பன மற்ற நான்கு காப்பியங்களாகும். மணிமேகலை ஒரு பௌத்த நூல். இதனை இயற்றியவர் **சீத்தலைச் சாத்தனார்.** இந்நூல் சிலப்பதிகாரத்துடன் தொடர்புடையது.

1. ஆற்றுநர்க்கு - பொறுக்கும் வன்மை உடைய செல்வர்க்கு, அறவிலை பகர்வோர் - தருமத்திற்கு விலை மதிப்பிடுபவர் - அதாவது பயன் கருதிச் செய்பவர், ஆற்ரு மாக்கள் - தரித்திரர், களைவோர் - நீக்குபவர், மேற்றே - மேலதே, மண் திணி ஞாலம் - மண் அணுக்கள் செறிந்த நிலவுலகம்.

2. குடிப்பிறப்பு - உயர்குடிப் பிறப்பு, அழிக்கும் - கெடுக்கும், விழுப்பம் கொல்லும் - சிறப்பைக் கெடுக்கும், கல்விப் பெரும்புணை விடூஉம் - கல்வியாகிய பெரிய தெப்பத்தை நீக்கும், நாண் அணி களையும் - நாணம் என்னும் ஆபரணத்தை நீக்கும், மாண் எழில் சிதைக்கும் - மாட்சி பொருந்திய அழகைச் சிதைக்கும், புறங்கடை - தலைவாயில், பசிப் பிணி என்னும் பாவி - உருவகம்.

4. நீதி நூல்

அரிய நீதிகளைக் கூறும் இந்நூல் **மாயூரம் வேதநாயகம் பிள்ளை**யால் இயற்றப்பட்டது. வேதநாயகம் பிள்ளை திரிசிராப்பள்ளியை அடுத்த குளத்தூரில் பிறந்தவர். இவர் தந்தையார் பெயர் சவேரிநாதர் என்பது. இவர் கிறித்தவ சமயத்தைச் சார்ந்தவர்; சிறந்த தமிழறிஞர், இவர் 1889ல் மறைந்தார். இவர் சீகாழியிலும் மாயூரத்திலும் பல ஆண்டுகள் முனிசீப்பு உத்தியோகம் பார்த்திருக்கிருர்.

1. அருந்த - குடிக்க, பூண - உடுத்துக்கொள்ள, மருங்குளார் - அருகில் இருக்கின்றனர், மணிமாடம் - அழகிய மாளிகை, பொருந்திஞய் - அமைந்தாய், மாக்கள் - அறிவில்லாதவர்கள், விலங்கு - மிருகம்.

2. முடி - கிரீடம், உதித்தவர் - பிறந்தவர், பாரில் - பூமியில், குறைந்தவர் - தாழ்ந்தவர், வெளி மயக்கு - வெளித்தோற்றம்.

5. திருக்குறள்

திருக்குறள் என்பது கடைச்சங்கம் மருவிய **பதினெண்கீழ்க்கணக்கு** நூல்களுள் ஒன்று. இந்நூல் குறள் வெண்பாக்களால் ஆனது. ஆதலால், **குறள்** எனப் பெயர் பெற்றது. **தமிழ் மறை, பொது மறை, பொய்யா மொழி, வாயுறை வாழ்த்து, உத்தர வேதம்** முதலிய பத்துப் பெயர்கள் திருக்குறளுக்கு அதன் சிறப்புக் கருதி வழங்கி வருகின்றன.

திருவள்ளுவர் வாழ்க்கை பற்றிய உண்மைகள் கிடைக்கவில்லை. ஆயினும், அவரைப்பற்றிப் பல கதைகள் வழங்குகின்றன. அவை நம்பத்தக்கவையல்ல. 'வள்ளுவர்' என்னும் பெயர் அவரது தொழிலைக் கருதிய பெயரென்றும், அவர் சென்னையின் ஒரு பகுதியாகிய மயிலையிலும் மதுரையிலும் வாழ்ந்தார் என்றும் கொள்ளலாம். அவருக்கு நாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப்புலவர், பெருநாவலர், மாதானுபங்கி முதலிய பத்துச் சிறப்புப் பெயர்கள் வழங்கி வருகின்றன. திருமயிலையில் அவருக்கு ஒரு கோவிலும் உண்டு.

1. பொறி வாயில் - (மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும்) ஐம்பொறிகளை வழிகளாக உடைய, ஐந்து - ஐந்தாசைகளையும், அவித்தான் - அறுத்தவனது, பொய் தீர் - மெய்யான, ஒழுக்கநெறி - ஒழுக்க வழியிலே, நீடு வாழ்வார் - பிறப்பில்லாமல் வாழ்வார்.

2. கோளில் - (தமக்கேற்ற புலன்களைக்) கொள்ளுதலில்லாத, பொறியின் - பொறிகள் போல, எண்குணத்தான் - (தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருள் உடைமை, முடிவில் ஆற்றல் உடைமை, வரம்பில் இன்பம் உடைமை ஆகிய) எண்வகைப்பட்ட குணங்களை உடையவனது, குணமிலவே - பயன்படுவனவல்ல.

3. ஈண்டு - இவ்வுலகத்தில், சிறப்பொடு - திருவிழாவுடன், பூசனை - பூசை, செல்லாது - நடவாது, வானம் வறக்குமேல் - மழை பெய்யாதாயின்.

4. அழுக்காறு - பொறாமை, அவா - (ஐம்புலன்கள்மேற் செல்லும்) ஆசை, வெகுளி - கோபம், இன்னாச் சொல் - கடுஞ்சொல், இழுக்கா - கடிந்து, இயன்றது - நடைபெறுவது, அறம் - தருமம்.

5. இல்வாழ்வான் - இல்லறத்தோடு கூடி வாழ்பவன், இயல்புடைய - அறத்தன்மையுடைய, மூவர்க்கும் - (பிரமசாரி, வானப்பிரத்தன், சந்நியாசி ஆகிய) மூவர்க்கும், நல்லாற்றில் - (அவருடைய) நல்வழிகளில், நின்ற - நிலை பெற்ற, துணை - துணையாவான்.

6. அன்பு - அன்பை, உற்று - உடையவராகி, அமர்ந்த - (இல்லறத்தோடு) பொருந்திய, வழக்கு - வழியின் பயனாகும், என்ப - என்பர், சிறப்பு - பேரின்பம்.

7. வித்தும் - விதையும், இடல் வேண்டுங்கொல் - இடவேண்டுமோ, விருந்தோம்பி - விருந்தினரை உபசரித்து, மிச்சில் - மிகுந்ததை, மிசைவான் - உண்பவன், புலம் - விளைநிலத்துக்கு.

8. அகன் அமர்ந்து - மனம் மகிழ்ந்து, செய்யாள் - இலக்குமி, முகன் அமர்ந்து - முகம் மலர்ந்து.

9. சமன் செய்து - (முன்னே) சமமாய் நின்று, சீர் தூக்கும் - (பின்னே) அளவு செய்வதாகிய, கோல் - துலாக் கோல், ஒருபால் - ஒரு பக்கத்தில், கோடாமை - சாயாமை, சான்றோர் - அறிவால் நிறைந்தோர், அணி - அழகு.

10. நிலையில் - (இல்வாழ்க்கையாகிய தன்) வழியில், திரியாது - வேறு படாது, தோற்றம் - உயர்ச்சியானது, மலையினும் - மலையின் உயர்ச்சி யினும், மாண - மிகவும்.

11. மறப்பினும் - மறந்தானாயினும், ஓத்து - வேதம், கொளலாகும் - மீண்டும் ஓதிக்கொள்ளலாம், ஒழுக்கம் குன்ற - ஆசாரம் குறைய.

12. நிறையுடைமை - நிறைவை உடையவனாயிருக்கை, நீங்காமை - (தன்னைவிட்டு) நீங்காமையை, போற்றி - காத்து, ஒழுகப்படும் - நடக்கப் படும்.

13. பிறன் - பிறனுக்கு, கேடு - கேட்டைத் தரும் செயலை, சூழற்க - எண்ணாதிருக்கக் கடவன், அறம் - அறக்கடவுள், சூழும் - எண்ணும், சூழ்ந்தவன் - கேட்டை எண்ணினவனுக்கு.

14. கடப்பாடு - உபசாரங்கள், மாரி மாட்டு - மேகங்களிடத்து, என் - என்ன பிரதி உபகாரத்தை, ஆற்றும் - செய்து வருகின்றன, உலகு - உலக உயிர்கள்.

15. பொருளற்றார் - வறியவர், பூப்பர் - செல்வம் உண்டாகப் பெறு வர், ஒருகால் - ஒரு காலத்தில், அருளற்றார் - கருணையில்லாதவர், அற்றார்- நீங்கியவரே, மற்று - பின்னொரு காலத்தில், ஆதல் அரிது - ஆகுதல் இல்லை.

16. கொல்லான் - (ஒருயிரையும்) கொல்லாதவனுமாய், புலாலை மறுத் தானை - புலாலையும் உண்ணாதவனை, எல்லா உயிரும் - எல்லாப் பிராணி களும்.

17. புரை தீர்ந்த - குற்றத்தினின்று நீங்கிய, பயக்குமெனின் - தருவ தாயின், வாய்மை இடத்த - மெய்யின் தன்மையைப் பெறும்.

18. கொல்லும் - கெடுந்தெழுகின்ற, சினத்தை - கோபத்தைப் பார்க் கினும், பிற - வேறாகிய, பகை - பகைகளும், உளவோ - உண்டோ ?

19. தலைக்கூடி - உடன் சேர்ந்து, உள்ள - ('இவரை இனி நாம் எப்போது கூடுவோம் ?' என்று) நினைக்கும்படி, பிரிதல் - நீங்குதலாகிய, அனைத்து - அத்தன்மையதாம்.

20. உள்ளம் - மன எழுச்சி, வள்ளியம் என்னும் - யாம் வண்மை யுடையேம் என்னும், செருக்கு - மகிழ்ச்சி.

6. பழமொழி

கடைச்சங்கம் மருவிய **பதினெண்கீழ்க்கணக்கு** நூல்களுள் **பழமொழியும்** ஒன்று. ஒவ்வொரு பாட்டிலும் ஒவ்வொரு பழமொழியை உடைய 400 செய்யுட்களைக் கொண்ட இந்நூலுக்குப் **பழமொழி நானூறு** என்னும் பெயர் வழங்குவதாயிற்று. இதை இயற்றியவர் **முன்றுறை அரையனார்** என்பவர். இவர் சமண சமயத்தவர் ; பாண்டி நாட்டில் உள்ள **முன்றுறை** என்னும் ஊருக்கு அரசர் போலும் ! இவர் காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டென்பர்.

1. பொச்சாந்து - குற்றமடைந்து, தெற்ற - தெளிவாக, அறை - ஒலிக்கின்ற, அணிமலை நாட - ஆடூஉ முன்னிலை, இல் - இல்லை.

2. மாட்சி - பெருமை, மாண்டது எவன் - பெருமை அடைந்தது எங்ஙனம்? பொறி - புள்ளி, சாந்தம் - சந்தனம்.

3. துய்த்தல் - அனுபவித்தல், தேற்றாதான் - அறியாதவன், தழங்கு- முழங்கும், வேய் - மூங்கில், வெற்ப - மலை நாடனே, தெங்கம்பழம் - தேங்காய்.

4. கெடுவல் - அழிவேன், எனப்பட்ட கண்ணும் - என்று தெரிந்த பிறகும், வடுவல்ல - குற்றமற்ற செயல்களை, நெடுவரை - நீண்ட மலை, ஆழி வரையகத்து - கடற்கரையில், ஈண்டிய - நெருங்கிய.

5. பேதை - அறிவிலி, துயர்ப்படுக்கும் - துன்பத்தில் சிக்கிக்கொள்வன், நல்லாய் - மகடூஉ முன்னிலை, நுணல் - தவளை.

IV. தொடர்நிலைச் செய்யுள்

1. நைடதம்

நிடத நாட்டரசனாகிய நளன் கதையைக் கூறும் நூல் **நைடதம்.** ஸ்ரீ ஹர்ஷகவி வடமொழியில் இயற்றிய **நைஷதம்** என்னும் நூலைத் தமிழில் இயற்றியவர் **அதிவீரராமபாண்டியர்** என்ற அரசர். இவர் காலம் பதினாறும் நூற்றாண்டின் பிற்பகுதி. இவர் சைவ சமயத்தவர். **காசி காண்டம், கூர்மபுராணம், இலிங்க புராணம்** என்பன இவர் இயற்றிய பிற நூல்கள். '**நைடதம் புலவர்க்கு ஔடதம்**' என்னும் முதுமொழியால் இந்நூலின் பெருமை நன்கு விளங்கும்.

1. இனையனாகிய மன்னவன் - இத்தன்மையனாகிய நளன் (அடு- தொழில் தேர்த்தொழில்களில் அமர்ந்தவன்), அவ்வுழி - அவ்விடத்தில் (அயோத்தியில்), வனை - அலங்கரித்த, விதர்ப்பர்கோன் - வீமன், நினைவ- நினைப்பவை, நேர்ந்தார் - சம்மதித்தார்.

2. தரங்க வாரிதி - அலைகளை உடைய கடல், தகைமை சால் - மேன்மை பொருந்திய, உலப்பிலர் - அளவற்றோர், மனைவயின் - வீட்டில்.

3. மாசு பூத்து - அழுக்கடைந்து, மழுங்குபு - மழுங்கி, மண்ணுறு - சாணை பிடியாத, மணியின் - இரத்தினம் போல, தேசு அழிந்திடு - அழகு குலைந்திருந்த, ஏசல் இல் - பழிப்பில்லாத, ஆசு இல் - குற்றமற்ற, கலுழ்ந் தனன் - அழுதான்.

4. கந்தம் - நறுமணம், வார் குழல் - நீண்ட கூந்தல், தளிர் இயல் - தளிர் போன்ற சாயலை உடையவள், வந்த ஆறு எவன் - வந்த விதம் யாது?

5. மடவரல் - பெண், விதர்ப்பர் கோன் - வீமன், நிடதர் கோன் - நளன், காசினி - பூமி.

6. தேண்டி - தேடி (விரித்தல் விகாரம்), திருவை - திருமகள் போன்ற தமயந்தியை, காண்டல் செய்தனன் - கண்டேன், கன்னலிற்

பழுத்த - கரும்பினும் முதிர்ந்த, மாண்ட - மாட்சிமைப்பட்ட (நீங்கிய என்றும் கூறலாம்), வாள் நுதல் - பிரகாசம் பொருந்திய நெற்றியில், வயங்கிய - விளங்கிய, மறுவால் - மச்சத்தால்.

7. கிளத்தலும் - கூறலும், மாசினை - அழுக்கை, கதிர் எறித்தலின் - ஒளி வீசியதால், ததை - நெருங்கிய.

8. சீறடி - சிறிய பாதங்கள், கனை - ஒலிக்கின்ற, கலுழ்ந்தாள் - அழுதாள்.

9. மீதூர - அதிகரிக்க, விடுத்தி - அனுமதிப்பாய்.

10. மாற்றம் - சொல், ஓர்ந்து - யோசித்து, வேலையின் - கடல் போல, உகுப்ப - சிந்த, எரி - பிரகாசிக்கும், பொலன் - பொன், சிவிகை - பல்லக்கு, இருள்கனிந்தொழுகும் - மிகவும் கரியநிறங்கொண்டு விளங்கும், விரை செய் - மணங்கமழும், கோதை - குழலையுடைய தமயந்தியை.

11. கொள்ளை - கூட்டமாக, அரக்கிதழ் - சிவந்த இதழ்கள், வள்ள வாய் - கிண்ணம் போல அகன்ற வாயினையுடைய, மேயினள் - அடைந்தாள், ஆல் - அசை.

12. உண்கண் - மை தீட்டிய கண், அற்ற மெல்லாடை - அறுபட்ட மெல்லிய ஆடை, கழும - நிரம்ப, சூட்டுபு - சூட்டி, கை செயா - அலங்கரிக்காத, வெய்துயிர்த்து - பெருமூச்சு விட்டு, தகைத்தே - தன்மையுடையதோ ?

13. நாள் இருள் காலையில் - நடு நிசி நேரத்தில், நீத்த - கைவிட்ட, தீட்ட ஒணு எழில் - சித்திரத்தில் எழுத முடியாத அழகு, முத்தழல் - (காருகபத்தியம், ஆகவனீயம், தக்கிணுக்கினீயம் என்னும்) மூன்று யாக அக்கினிகள், வேட்ட - விரும்பிய.

14. வாள் முகம் - ஒளி பொருந்திய முகம், மடவரல் - பெண்ணுகிய தமயந்தி, நெக்கு - உருகி, குறுகி - சமீபித்து, நக்க - ஒளி வீசிய, பூங்கழல் - அழகிய வீரகண்டை.

15. ஓடு அரிக் கண் - செவ்வரி படர்ந்த கண், ஆடகப் பசும்பொலன்- ஆடகம் என்னும் பசிய பொன்னுலாகிய, வம்மின் - வாருங்கள், நளிகடல் - பெரிய கடல், வரைப்பெலாம் - உலகெலாம்.

16. துருவும் - ஆராயும், மூதெயில் - பழமையான மதில், புரி - அலங்கரிக்கப்பட்ட, இவ்வுழி - இவ்விடத்தில்.

17. ஓகை - (உவகை) மகிழ்ச்சி, மான் தேர் - குதிரை பூட்டிய தேர், கொய் உளை - கத்தரிக்கப்பட்ட பிடரி மயிர், ஆரஞர் - மிக்க துன்பம்.

18. அழல் இலாது - நெருப்பு இல்லாமல், அடுதொழில் - சமையல் தொழில், மழகளிற்றினன் - இளமை பொருந்திய யானையை உடையவன், வாகுவன் - வாகுகன் (நளன் மாறுவேடத்தில் வைத்துக்கொண்ட பெயர்), எழு - இரும்புத்தூண், உலாவும் - அசைகின்ற, ஒழுகு - தேன் ஒழுகும், மருங்குலாய் - இடையை உடையவளே.

2. சீகாளத்திப் புராணம்

நக்கீரச் சருக்கம்

சீ - சிலந்தி, **காளம்** - பாம்பு, **அத்தி** - யானை, ஆகிய மூன்றும் துதித்து முத்தி பெற்றது சீகாளத்தி என்னும் சிவஸ்தலம். இத்தலத்தைப் பற்றிய புராணமே **சீகாளத்திப் புராணம்**. இதனைச் **சிவப்பிரகாசர், கருணைப்பிரகாசர், வேலையர்** என்ற சகோதரர் மூவரும் பாடினர். இந்நூலில் **கண்ணப்பர் சருக்கமும், நக்கீரச் சருக்கமும்** சிவப்பிரகாசரால் இயற்றப்பட்டவை.

சிவப்பிரகாசர் காஞ்சீபுரத்தில் வாழ்ந்த குமாரசாமி தேசிகரின் புதல்வர். இவரே மூத்தவர். இவர் காலம் வீரமாமுனிவர் காலம் என்பர்.

1. அமுதுறழ் - அமுதம் ஒத்த, கரை - சொல்லப்படும், இமிழ் - ஒலிக்கின்ற, வரைப்பு - இடம் (உலகம்), எண்பொருள் - எளிய பொருள், எள்ளி - இகழ்ந்து, தயங்கும் - விளங்கும், ஆல் - அசை.

2. பொன்னகரம் - தேவேந்திரனுடைய அமராவதி நகரம், மறுக்கும்- இடை மறிக்கும்.

3. அனக மாநகர் - குற்றமற்ற பெரிய நகர், புனித வானவன் - பரிசுத்தமான சிவபெருமான், தலைக்கொள் - (தன்) தலையில் சூடிய, புத்தேள் - தேவன்.

4. வெளிறு இல் - அறியாமை இல்லாத, கிளை - உறவினர், நெளி திரை - தவழ்கின்ற அலை, நீரீஇய - நிலைபெறச் செய்த.

5. பின்பு தாழ் சடைப் பெருந்தகை - பின்புறம் தொங்கும் சடையை உடைய சிவபெருமான், பிறங்கிய - விளங்கிய, தெய்வதப் பலகை - தெய்விகம் பொருந்திய சங்கப் பலகை.

6. யாக்கை - உடம்பு, உறுதியாம் - நன்மை தருவனவாகிய, போக்கில் - அடைதற்குரிய இடம் (மோட்சம்), அரில் அற - குற்றமற, புணர்த்து - சேர்த்து, தூக்கினம் - பாவினம்.

7. வெள்ளைத் தாமரைச் செல்வி - சரசுவதி, எள்ளற்பாடு இல் - பழிக்கப்படுதல் இல்லாத, முடியேந்தும் - சடையிற்சூடிய, பிள்ளைப்பால் மதியான் - இளஞ்சந்திரனைத் தரித்த சிவபெருமான், தமிழ் ஒருவனை - (இறையனார் என்னும் பெயருடன்) ஒரு தமிழ்ப் புலவனை.

8. எரி கால் - நெருப்பைக் கக்குகின்ற, சேல் வலன் உயர்த்த - மீனக் கொடியை வலப்பக்கம் உயர்த்திய, பூங்கண் - அழகிய கண்.

9. ததைத்த - பொருந்திய, கிழி - பை, இயற்றி - இட்டு.

10. மலைகொள் - மலையை ஒத்த, வறிது அகன்றனர் - பயனின்றிச் சென்றனர்.

11. அங்கதை - அங்கேயுள்ள பொற்கிழியை, அறைந்தனை - சொல்லி, 'கொங்குதேர் வாழ்க்கை' என்னும் கோதில் தூக்கு ஈந்து விட்டான் - 'கொங்குதேர் வாழ்க்கை' என்னும் தொடக்கத்தையுடைய குற்றமற்ற செய்யுளைக் கொடுத்தனுப்பினன், தொடர்பு அமுதம் - பாட்டாகிய அமுதம்.

12. திங்கள் மருகன் - சந்திர குலத்தில் தோன்றியவன், சொற்றலின் - சொல்லியிருத்தலால், பொற்ற பாட்டு - அழகிய பாட்டு, உவந்தார் - மகிழ்ந்தார்.

13. அரும்பெறல் - (பெறல் அரு) பெறுவதற்கு அரிய, தருக்கினுல் - கருவத்தினுல், சிந்தி - இழந்து, துனைவில் - விரைவில், போந்து - வந்து, கடுக்கை - கொன்றை, வேணி - சடை.

14. கிளி உறழ் கிளவி பங்கன் - கிளி போன்ற சொற்களையுடைய பார்வதியை இடப்பாகத்திற் கொண்ட சிவபெருமான், கோட்டம் இல் - குற்றம் இல்லாத.

15. நெடுங்கண் நல்லார் - நீண்ட கண்களை உடைய பெண்டிர், சில் - மெல்லிய, இருங்கூந்தல் - பெரிய கூந்தல், இல்லது - இல்லாததை, மல்லல் - வளப்பம், விண் மகளிர் - தேவலோகத்துப் பெண்டிர்.

16. அரம்பையர் - தெய்வ மகளிர், இன்று என - இல்லை என்று, குன்று இறை - பருவதராசன், பயந்த - பெற்ற, செல்வி - மகள் (பார்வதி), எற்று என்ருன் - எத்தகையது என்ருன், தன் தனித் தருக்கால் - தனது ஒப்பற்ற கருவத்தினுல், அற்று என்ருன் - அத்தகையதே என்ருன்.

17. எரி மருள் - நெருப்புப்போன்ற, மாற்றரு மருட்சியால் - நீக்குதற்கரிய மனமயக்கத்தால், கண் வடிவெலாம் காட்டினுலும் - (நெற்றியில் மட்டுமன்றி) கண்களை உடலில் எல்லாம் காட்டினுலும், தொலைவிலான் - அழிவற்றவன், வெகுண்டு - கோபித்து.

18. முரணி - மாறுபட்டு, வான் தோய் - ஆகாயம் அளாவிய, மால் வரை - பெரிய மலை, மை மலி - கருமை நிறைந்த, மறை சொல் ஆனு - வேதங்கள் இடைவிடாமல் புகழ்தல் நீங்காத, செம்மை கொள் அறிவிலாய் - கற்றறி மூடனே, இம்மையில் - இப்பிறப்பில், இறப்ப - மிகவும்.

19. முழு மெயும் - உடல் முழுவதும், பனித்து - நடுங்கி, முருகு அலர் - வாசனை வீசுகின்ற, இறைஞ்சி - வணங்கி, எந்தாய் - என் தந்தையே, இலங்கு அறிவு - உண்மை ஞானம்.

20. எரிசினம் - எரிகின்ற கோபம், குன்று உறழ் - மலை போன்ற, புரிசை - மதில், பொதிய வெற்பு - பொதிய மலை, தென்னர் கோன் - பாண்டியன்.

3. பெரிய புராணம்

மனுநீதி கண்ட புராணம்

சைவத் திருமுறைகள் பன்னிரண்டில் இறுதியிடம் பெற்றுள்ளது இந்நூல். இது பெருமை பெற்ற சிவனடியார்களின் வரலாற்றையுணர்த்துவது. இதற்கு ஆசிரியர் இட்ட பெயர் **திருத்தொண்டர் புராணம்** என்பது. **பெரிய புராணம்** என்னும் பெயர் இந்நூலுக்கு யாரால் எப்போது இடப்பெற்றது என்பது தெரியவில்லை. சிவனடியார் தனியடியார் அறுபத்து மூவர் என்றும் தொகையடியார் ஒன்பதின்மர் என்றும் குறிக்கப்படுவர். இந்த எழுபத்திருவர் வரலாறுகளும் இப்புராணத்தில் குறிக்கப்பட்டுள்ளன.

இதனை இயற்றிய சேக்கிழார் தொண்டை நாட்டில், புலியூர்க் கோட்டத்தில், குன்றத்தூரில், வேளாண்மரபில், சேக்கிழார் குடியில் பிறந்தார். இவரது பிள்ளைத் திருநாமம் அருள்மொழித் தேவர் என்பது. இவருக்கு உத்தம சோழப் பல்லவர், தொண்டர் சீர் பரவுவார் என்னும் சிறப்புப் பெயர்களும் உண்டு. இவர் காலம் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதி என்பர்.

1. நிலமகள் - பூமிதேவி, செம்பியர் - சோழர், மலர்மகள் - இலக்குமி, அலகில் - அளவில்லாத.

2. செங்கதிரோன் - சூரியன், மன்னு - நிலை பெற்ற.

3. ஆவி - உயிர், வேள்வி - யாகம், மாண - சிறப்புற.

4. புல்லி - தழுவி, மறம் - பாவம், கடிந்து - விலக்கி, குருளை - சிங்கக் குட்டி.

5. கூர - அதிகரிக்க, அணியன் - நெருங்கிய தகுதியுடையவன், பரிதி - சூரியன்.

6. கவிகை - குடை, மங்குல் - மேகம், கொங்கு - தேன், குலவு - திரண்ட, தானை - சேனை.

7. புனிற்று ஆ - புதிதாகக் கன்றை ஈன்ற பசு, தேர்க்கால் - தேர்ச் சக்கரம், உம்பர் - தேவர், அலமந்து - துன்புற்று.

8. பெற்றம் - பசு.

9. வார - சோர, கோயில் - அரசன் மாளிகை, கோட்டினால் - கொம்பினால்.

10. தொன்னெறி - பழமையான முறை.

11. வளவ - சோழனே.

12. ஆ உறு துயரம் - பசு அடைந்த துன்பம், வெவ்விடம் - கொடிய விஷம், செவ்விது - செம்மையானது, தேறான் - (மனம்) தெளியாதவன்.

13. தீர்வு அன்று - முடிவன்று, ஆல் - ஆதலால்.

14. குழக்கன்று - இளங்கன்று, சழக்கு - குற்றம்.

15. இருந்தவம் - பெரிய தவம் (பிராயச்சித்தம்), துடைப்புண்டது - அழிந்தது.

16. பேரிடர் - பெரிய துன்பம், அனகன் - குற்றமற்ற அரசன்.

17. ஊர்க - செலுத்துக, மறுகு - வீதி.

18. கடன் - கடமை, மருமம் - மார்பு, தேர் ஆழி - தேர்ச் சக்கரம், அருமந்த - அருமருந்தன்ன.

19. தரியாது - பொறாமல், மண்ணவர் - உலகத்தவர், வானவர் - தேவர், அண்ணல் - அரசன், மழவிடை - இளமை பொருந்திய ரிஷபம், வீதிவிடங்கப் பெருமான் - திருவாரூரில் கோயில் கொண்டுள்ள சிவபெருமான் பெயர்.

20. ஆன் கன்று - பசுவின் கன்று, தனிக் கன்று - ஒப்பற்ற இளவரசன், பரிசு - தன்மை.

4. கம்பராமாயணம்

பாலகாண்டம்—கையடைப்படலம்

கம்பர் சோழ நாட்டில் திருவழுந்தூரில் ஆதித்தர் என்பவருக்குப் புதல்வராய்த் தோன்றினர். இவர் உவச்சர் குலத்தவர்; திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப முதலியாரால் ஆதரிக்கப் பெற்றுக் கல்வியிற்சிறந்து புகழடைந்தார். **'கம்பன் கவிச்சக்கரவர்த்தி', கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்', 'கல்வியில் பெரியன் கம்பன்'**, என்னும் தொடர்களால், கம்பரது பெரும்புலமை நன்கு விளங்கும். 'கம்பர்' என்னும் சொல் அக்கால வழக்கில் இருந்தமையால் அதுவே அவரது இயற்பெயர் என்று கொள்ளலாம். கம்பர் இராமாயணத்தைப் பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என்னும் ஆறு காண்டங்களாகச் சுமார் பத்தாயிரங் கவிகளாற் பாடியுள்ளார். இவரது காலம் கி. பி. ஒன்பதாம் நூற்ருண்டின் பிற்பகுதியாகும்; சிலர் பன்னிரண்டாம் நூற்ருண்டென்பர். அது பெரிதும் பொருந்துவதன்று. இராமாயணத்துக்குக் கம்பர் வழங்கிய பெயர் இராமாவதாரம் என்பது.

'கையடை' என்னும் சொல்லுக்கு **'அடைக்கலம்'** என்பது பொருள். இராமனையும் இலக்குவனையும் விசுவாமித்திரரிடம் கையடை செய்ததை உரைக்கும் பகுதியே **கையடைப் படலம்** எனப் பெயர் பெற்றது.

1. நனை - அரும்பு, கற்பக நாடு - தேவலோகம், நன்னகர் - அமராவதி, அயிர்க்கும் - சந்தேகிக்கும்.

2. அரியணை - சிங்காதனம், சேய் இரு விசும்பு - தூரத்தில் உள்ள பெரிய ஆகாயம், நாயகன் - இந்திரன், நாட்டம் - கண்கள்.

3. மடங்கல் - சிங்கம், மொய்ம்பு - பலம், கோசிக முனிவன் - விசுவாமித்திர முனிவர்.

4. அந்தரதலம் - ஆகாயம், இரவி - சூரியன், 'விஞ்ச - அதிகரிக்க, கந்தமலர் - மணம் உள்ள தாமரை, கடவுள் - பிரமன்.

5. மணி - இரத்தினம், செற்றுபு - நெருங்கும்படி, குயிற்றிய - பதித்த, அணிந்த தவிசு - அலங்கரிக்கப்பட்ட பீடம், அருத்தி - அன்பு, கமலச் சரண் - தாமரையொத்த பாதங்கள், துணிந்தது - அற்றது, 'என் வினைத்தொடர்பு இன்றே துணிந்தது,' என்க.

6. நெடியோய் - தவத்தாற்பெரியவனே.

7. பன்னகம் - (பல் + நகம்) பல மலைகளையும், நகும் - (எள்ளிச்) சிரிக்கின்ற, வெள்ளிப் பனி வரை - கைலாயமலை, பதுமபீடத்தன் நகர் - பிரமலோகம், புகல் - அடைக்கலம், புலவு - புலால் நாற்றம்.

8. இருக்கை - அரசு வீற்றிருக்கை, நின் தளிர்க்கும் - நினது செழிக்கின்ற, சம்பரன் - சம்பராசுரன், புரந்தரன் - தேவேந்திரன்.

9. முரசு எய்து - முரசம் பொருந்திய, கடைத்தலையான் - தலை வாயிலை உடையவன்.

10. தரு - மரங்கள், தகை - சிறந்த, வேள்வி - யாகம், வெருவர - அஞ்சும்படி, நிருதர் - இராக்கதர், இடைவிலக்காவண்ணம் - இடையில் தடை செய்யாதபடி, கரியசெம்மல் - இராமன், உளைய - வருத்தமுறும்படி.

11. மருமம் - மார்பு, பெரும்புழை - பெரிய துவாரம், உண்ணிலாவிய துயரம் - (உள் + நிலாவிய) மனத்தில் விளங்கிய துக்கம் (என்றது, முன் ஒருகால் தசரதன் அறியாது அம்பெய்ததால் இறந்த மகன் காரணமாக ஒரு முனிவன் இட்ட சாபத்தால் உண்டான துயரத்தை.)

12. தொடையூற்றில் - இடையருது சுரக்கின்ற ஊற்றைப் போல, ஒரு வண்ணம் - ஒருவாறு, படை ஊற்றம் இலன் - படைத் தொழிலில் தேர்ச்சியில்லாதவன், பணி - கட்டளை, புடையூற்றும் - ஒரு பக்கம் பாய்கின்ற, சடையான் - சடையையுடைய சிவன், புரந்தரன் - தேவேந்திரன்.

13. முனிவோடு - கோபத்தோடு, இறுதிக்காலம் - ஊழிக்காலம், இமையோர் - தேவர்கள், வெயில் கரந்தது - சூரியன் மறைந்தது, நின்றனவும் - அசரங்களும், திரிந்தன - நிலை பெயர்ந்தன, மீ நிவந்த - மேலேறிய.

14. கறுத்த - கோபங்கொண்ட, உறுத்தல் ஆகலா - அடைய முடியாத, உறுதி - பெரிய பேறு, மறுத்தியோ - தடுப்பாயோ ?

15. மொய்கொள் - (எல்லா நதிகளையும் தன்னிடம்) அடக்கிக்கொள்ளும், வேலை - கடல், முடுகுமாறு போல் - விரைந்து செல்வது போல.

16. குரு - வசிஷ்டமுனி, வாசகம் - கூற்று, கொண்டு - மனத்திற் கொண்டு, திருவின் கேள்வன் - இலக்குமியின் கணவனான இராமன், உம்பரான் - மேலே இருப்பவன்.

17. எந்தை - எம் தந்தை.

18. நவைக்கண் நீங்கினன் - குற்றங்களினின்றும் நீங்கிய விசுவாமித்திரன்.

5. ஸ்ரீமத் குமாரசுவாமியம்

திருக்கைலாயத் திருவிளையாடல்

ஸ்ரீமத் குமாரசுவாமியம் என்பது குமாரக் கடவுளின் திருவிளையாடல்களைக் கூறும் நூல். இதனை இயற்றியவர் **குமரகுருதாசர்** என்பவர். இவரது இயற்பெயர் **குமாரசுவாமி** என்பது. இவர் கி. பி. 1850ல் **பாம்பன்** என்னும் ஊரில் **சாத்தப்பபிள்ளை** என்பவருக்குப் புதல்வராய்த் தோன்றினர். இவர் **காளிமுத்தம்மாள்** என்பவரை மணந்து, சிலவாண்டுகள் இல்லறம் நடத்திப் பிறகு துறவு பூண்டார். இவர் தம் இறுதிக்காலத்தைச் சென்னையில் கழித்தார்; 1929ல் மறைந்தார். இவரது சமாதி சென்னைக்குத் தெற்கில் உள்ள **திருவான்மியூரில்** இருக்கிறது.

1. அறிவன் - ஞானி, சரவணத் தடம் - சரவணப் பொய்கை, குழவிகள் - குழந்தைகள், மிளிர் ஞான்று - விளங்கிய காலத்தில், சிவை - பார்வதி.

2. அருத்தினுள் - அருந்தச் செய்தாள்.

3. கரி - யானை, ஓலிடும் - ஒலி செய்யும்.

4. பின்னமாயவெல்லாம் - சிதைந்தன எல்லாம், பிறங்குக - விளங்குக, அன்னணம் - (அன்ன வண்ணம்) அவ்வாறு.

5. இளம்பூரணன் - முருகன், வதிதருகாலை - வசிக்கும் போது, குயிலுகின்ற - பேசப்படுகின்ற, தகர் - ஆட்டுக்கடா.

6. நூபுரம் - காற்சிலம்பு, சேயவன் - முருகன்.

7. இவர்ந்து - ஏறி, ஓர் அருமல் - ஓர் இடம் விடாமல், ஊர்தி - வாகனம்.

8. அயன் - பிரமன், செக்கர்வேள் - முருகன், போற்றலிலா தயறிரிந்தான் - (போற்றல் + இலாது + அயல் + திரிந்தான்).

9. குடிலை - பிரணவம், செவ்வன் - சரியாக, உவ்வி - தலை.

10. துதைத்து - நெருக்கி, இருந்தளை - பெருவிலங்கு, இவற்கொடு போய் - இவனைக் கொண்டு சென்று, கந்தாசலம் - கந்தமலை, இருத்துமின் - சிறையிருக்கச் செய்யுங்கள், சூள் - ஆணை, கட்டு - கற்பனை.

V. சிறு நூல்கள்

1. சீட்டுக் கவி

1. தூது, மாலை, அந்தாதி, மடல், கோவை, பரணி—இவை தமிழில் வழங்கும் 96 பிரபந்த வகையைச் சேர்ந்தவை.

2. சேடாதிபன் - ஆதிசேடன், திரிபதகை - கங்கை, தென்பாலை - தெற்கில் உள்ள பாலக்காடு, செழியன் - பாண்டியன். கந்தருவம், கந்துகம், கோணம், கொக்கு, கோடை, குந்தம், பாடலம், மா, சடிலம், கிள்ளை என்பன எல்லாம் குதிரையைக் குறிப்பன. அன்றியும், அவை தனித்தனி வெவ்வேறு பொருளையும் குறிப்பது கவனிக்கத்தக்கது.

2. கலிங்கத்துப் பரணி

1. இகல் - பகை, இகக்க - மீறிட.

2. வெறுவர - அச்சப்பட, தெறித்த - தொனித்த, நாண் - வில்லின் கயிறு, செரு - போர், தெழித்த - அதட்டிய, தெழி - ஒளி.

3. எறி - (அலை) வீசுகின்ற, திரை - அலை.

4. முனைத்த - எதிர்த்த, கடகரி - மதயானை.

5. சிலைக்க - ஒலிக்க, படர் - படை வீரர், அரி - சிங்கம்.

6. உரும் - இடி.

7. குருதி - இரத்தம், அரக்க - மறைக்க, கரி துணிபடும் உடல் - யானையின் துண்டுபடும் உடல்.

3. திருவிளையாடல் அம்மானை

1. கயற்கண் - மீனாட்சி, சங்கேந்தி - திருமால், பல்சங்கம் - பல சங்குகள்.

2. மாசோதும் - (மாசு + ஓதும்) குற்றம் கூறும், மாசோதியார் - பெரிய சோதி மயமானவர்.

3. மன்றாட்டின் - குறை வேண்டினதால்.

4. காவடிச் சிந்து

வெள்ளி மலை - கைலாயம், வெய்யவன் - சூரியன், பூவை - மைனா, கிள்ளை - கிளிப்பிள்ளை, சீதளம் - குளிர்ச்சி, முகில் - மேகம், சிந்துரம் - யானை, தரளப் பந்தல் - முத்துப் பந்தல், முன்னுகின்ற - நினைக்கின்ற, தென்மலை - பொதியமலை, குறுமுனி - அகத்தியர், சனிக்கும் - தோன்றும், அகழ்க் கிடங்கு - அகழி.

VI. வருணனை

1. இமயமலை

1. குடதிசை - மேற்குத்திசை, குணதிசை - கிழக்குத் திசை, குரை கடல் - ஒலிக்கின்ற கடல்.

2. பகு முகம் - பிளந்த முகம், பகிரதி - கங்கை, முழவு ஒலி - மிருதங்க ஒலி, அளியிசை - வண்டின் ஒலி.

2. யாறு

தாது உகு - மகரந்தம் உதிரும், பூகம் - பாக்கு மரம்.

3. பாண்டி நாடு

நந்து - சங்கு, கமுகு - பாக்கு மரம்.

4. சூரியோதயம்

மீன் - விண்மீன் (நட்சத்திரம்), எயிற்று - பற்களை உடைய, கங்குல் - இருள், கனகன் - இரணியன், தமனியத்தறி - பொன் தூண், மானுட மடங்கல் - நரசிங்கம், வெய்யோன் - சூரியன்.

5. சந்திரோதயம்

ககனம் - ஆகாயம், தாரை - நட்சத்திரம், நிரை நிரை - வரிசை வரிசையாக, வேனிலான் - மன்மதன்.

VII. தனிப்பாடல்கள்

1. உள்வாய் - உட்புறம், குலை - தென்னங்குலை (நாய் குரைத்தல்).

3. நாலெழுத்துப்பூடு - புகையிலை, காலுந்தலையும் கடைச்சாதி - முதலெழுத்தும் கடையெழுத்தும் சேர்ந்தால் ‘புலை’ என்னும் சாதிப் பெயராம், முதலெழுத்தும் மூன்றும் எழுத்தும் விட்டால் கைலை (பரமன் வீடு - சிவபெருமான் இருப்பிடம்) என்றாகும்.

4. கைத்தலத்தில் - கையினிடத்தில், தண்டு - தடி.

உரைநடைப்பகுதி

1. இறையனர் அகப்பொருள் வரலாறு

[மதுரைக் கணக்காயனர் மகனர் நக்கீரனர்]

"கடைச்சங்கமிருந்து தமிழாராய்ச்சி செய்த காலத்தில், பாண்டி நாடு பன்னிரு யாண்டு வற்கடஞ்சென்றது. செல்லவே, பசி கடுகுதலும், அரசன் சிட்டரையெல்லாங் கூவி, 'வம்மின்; யான் உங்களைப் புரந்தரகில்லேன்; என் தேயம் பெரிதும் வருந்துகின்றது; நீயிர் நுமக்கறிந்தவாறு புக்கு, நாடு நாடாயின ஞான்று என்னையுள்ளி வம்மின்,' என்றன். என, அரசனை விடுத்து எல்லாரும் போயின பின்றைக் கணக்கின்றிப் பன்னீரியாண்டு கழிந்தன. கழிந்த பின்னர், நாடு மலிய மழை பெய்தது. பெய்த பின் அரசன், 'இனி நாடு நாடாயிற்றுகலின் நூல் வல்லாரைக் கொணர்க,' என்று எல்லாப் பக்கமும் ஆட்களைப் போக்க, அவர்கள் **எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் யாப்பதிகாரமும்** வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து, '**பொருளதிகாரம்** வல்லாரை எங்கும் தலைப்பட்டிலேம்,' என்று வந்தார். வர, அரசனும் புடைபடக் கவன்று, 'என்னை! எழுத்தும் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின்பொருட்டன்றே? பொருளதிகாரம் பெறேமேயெனின், இவை பெற்றும் பெற்றிலேம்,' எனச் சொல்லாநிற்ப, மதுரை ஆலவாயின் அழனிறக் கடவுள் சிந்திப்பான்: 'என்னை பாவம்; அரசற்குக் கவற்சி பெரிதாயிற்று; அதுதானும் ஞானத்திடையதாகலான், யாம் அதனைத் தீர்க்கற்பாலம்,' என்று சிந்தித்து, '**அன்பினைந்திணை**' என்றற்றொடக்கத்து அறுபது சூத்திரத்தையுஞ்செய்து, மூன்று செப்பிதழகத்து எழுதிப் பீடத்தின்கீழிட்டான்.

இட்ட பிற்றை ஞான்று, தேவர் குலம் வழிபடுவான், தேவர் கோட்டத்தை எங்குந் துடைத்து, நீர் தெளித்துப் பூவிட்டுப் பீடத்தின் கீழ் என்றும் அலகிடான் அன்று தெய்வத் தவக்குறிப்பினன், 'அலகிடுவேன்' என்று உள்ளங்குளிர அலகிட்டான். இட்டாற்கு, அலகினேடும் இதழ்

போந்தன. போதர, கொண்டு போந்து நோக்குவாற்கு, அது வாய்புடைத்தாயிற்றோர் பொருளதிகாரமாய்க் காட்டிற்று. காட்ட, பிராமணன் சிந்திப்பான் : 'அரசன் பொருளதிகாரம் இன்மையிற்கவல்கின்றான் என்பது கேட்டுச் சொல்லாநின்றதுணர்ந்து, நம் பெருமான் அருளிச்செய்தானாகும்,' என்று, தன் அகம் புகுதாதே, கோயிற்றலைக்கடை சென்று நின்று, கடைகாப்பார்க்கு உணர்த்த, கடைகாப்பார் அரசற்குணர்த்த, அரசன், 'புகுதுக,' என்று பிராமணனைக் கூவ, சென்று புக்குக் காட்ட, அதனை ஏற்றுக்கொண்டு நோக்கி, 'பொருளதிகாரம்! இது நம் பெருமான் நமதிடுக்கண் கண்டு அருளிச்செய்தானாகற்பாலது!' என்று, அரசன் அத்திசை நோக்கித் தொழுதுகொண்டு நின்று, சங்கத்தாரைக் கூவுவித்து, 'இது நம் பெருமான் நமது இடுக்கண் கண்டு அருளிச்செய்த பொருளதிகாரம்; இதனைக் கொண்டு போய்ப் பொருள் காண்மின்,' என, அவர்கள் அதனைக் கொண்டு போந்து, கன்மாப்பலகை ஏறியிருந்து ஆராய்வுழி, எல்லாரும் தாந்தாம் உரைத்த உரையே நல்லதென்று சில நாளெல்லாஞ் சென்றன. செல்ல, 'நாம் இங்ஙனம் எத்துணையுரைப்பினும் ஒருதலைப்படாது; அரசனுழைச் சென்று, நமக்கோர் காரணிகனைத் தரல் வேண்டுமென்று கொண்டு போந்து, அவனாற் பொருளெனப்பட்டது பொருளாய், அன்றெனப்பட்டது அன்றாய் ஒழியக் காண்டும்,' என, எல்லாரும் ஒருப்பட்டு அரசனுழைச் சென்றனர்.

அரசனும் எதிர் சென்று, 'என்னை ? நூற்குப் பொருள் கண்டீரோ ?' என, 'அது காணுமாறு எமக்கோர் காரணிகனைத் தரல் வேண்டும்,' என்றார். 'போமின்! நுமக்கோர் காரணிகனை எங்ஙனம் நாடுவேன்? நீயிர் நாற்பத்தொன்பதின்மராயிற்று; நுமக்கு நிகராவார் ஒருவர் இம்மையின் இன்றே!' என்று அரசன் சொல்ல, உடனே போந்து கன்மாப்பலகையில் ஏறியிருந்து, 'அரசனும் இது சொல்லினான்; காரணிகனைப் பெறுமாறு என்னைகொல்?' என்று சிந்திப்புழி, 'சூத்திரஞ் செய்தான் ஆலவாயில் அவிர்சடைக் கடவுளன்றே? அவனையே காரணிகனைத் தரல் வேண்டும்

என்று சென்று வரங் கிடத்தும்,' என்று வரங்கிடப்ப, இடையாமத்து, 'இவ்வூர் உப்பூரிகுடி கிழார் மகனுவான் உருத்திரசன்மன் என்பவன், பைங்கண்ணன், புன்மயிரன், ஐயாட்டைப் பிராயத்தான், ஒரு மூங்கைப்பிள்ளையுளன். அவனை அன்னனென்று இகழாது கொண்டு போந்து, ஆசனமேலிரீஇ, கீழிருந்து சூத்திரப் பொருள் உரைத்தால், கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்க்கும் மெய்யாயின உரை கேட்டவிடத்து; மெய்யல்லா உரை கேட்டவிடத்து வாளா இருக்கும். அவன் குமார தெய்வம்; அங்கோர் சாபத்தினுற்றோற்றினன்,' என முக்கால் இசைத்த குரல் எல்லாருக்கும் உடன்பாடாயிற்ருக, எழுந்திருந்து, தேவர் குலத்தை வலங்கொண்டு போந்து, உப்பூரிகுடி கிழாருழைச் சங்கமெல்லாஞ்சென்று, இவ்வார்த்தையெல்லாஞ்சொல்லி, 'ஐயனுவான் உருத்திரசன்மனைத் தரல் வேண்டும்,' என்று வேண்டிக் கொடு போந்து, வெளியது உடீஇ, வெண்பூச்சூட்டி, வெண்சாந்தணிந்து, கன்மாப்பலகையேற்றிக் கீழிருந்து சூத்திரப் பொருளுரைப்ப, எல்லாரும் முறையே உரைக்கக் கேட்டு வாளா இருந்து மதுரை மருதனிள நாகனுர் உரைத்த போது ஒரோவிடத்துக் கண்ணீர்வார்ந்து மெய்ம்மயிர் நிறுத்தி, பின்னர்க் கணக்காயனுர் மகனுர் நக்கீரர் உரைத்தவிடத்துப் பதந்தோறும் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்ப்ப இருந்தான். இருப்ப, ஆர்ப்பெடுத்து, 'மெய்யுரை பெற்ரும் இந்நூற்கு!' என்ருர்.

2. கலைகள்

[திரு. வி. கலியாண சுந்தரனர்]

பழைய இந்தியாவில் வாழ்வுக்குரிய கலைகள் படிப்படியே பிறந்தன; வளர்ந்தன. அவை தொகையில் ஆறு; வகையில் அறுபத்து நான்கு. அவைகளிற்சிறந்து விளங்குவன சிலவே. அறம் மலிந்த அரசாட்சியில் - வறுமையற்ற ஆட்சி முறையில்—நல்ல கலைகள் அறிஞர் வாயிலாகப் பிறத்தல் இயல்பு. முதற்கால இந்தியாவிலேயே சிறந்த கலைகள் தோன்றின எனில், நம்நாட்டின் தொன்மையை என்னென்று புகழ்வது !

காவியக்கலையில் இந்தியா பேர் பெற்றது. இந்தியக் காவியங்கள் மலையெனக் குவிந்து கிடக்கின்றன; கடலெனப் பரந்து கிடக்கின்றன. பழைய இந்தியக் கவிகள், இயற்கைச் சூழலிடை வாழ்ந்தவர்கள். அவர்தம் புலன்களும் மனமும் இயற்கையில் ஒன்றி இயற்கை வண்ணமானவை. இயற்கை மனத்தினின்றும் சுரக்கும் எண்ணங்கள் இயற்கைப் பாக்களாகுமல்லவோ ?

இந்தியக் காவியத்துக்குக் கால் கொண்டவர் எவர்? **வான்மீகியார்** என்று இந்தியக் காவிய உலகம் கூறும். வான்மீகியார் இயற்கைப் பசுமையிடை—பறவைப் பாட்டிடை வாழ்ந்தவர்; வளர்ந்தவர். அவரே பழைய இந்தியக் காவியத் தந்தையார். அவர் வாயினின்றும் பிறந்த **இராமாயணம்,** காவிய உலகுக்கோர் இலக்கியம்; வாழ்வுக்கோர் எடுத்துக்காட்டு; பழம்பாரதத்தின் உயிரோவியம்; இயற்கை நிலையம்; அறத்தின் உறையுள்; சரித்திரக்கூடம்; காதலின் காதல்; வீரத்தின் வீரம். வான்மீகியார் வழிவழித் தோன்றிய சேய்கள் பல.

கி. மு. ஆரும் நூற்ருண்டிலேயே பதினைந்து வித இலக்கணங்கள் தோன்றின என்று சரித்திர ஆசிரியன்மார் கூறுகின்றனர். அந்நூற்ருண்டுக்கு முன்னரே பல நற்காவியங்கள் நாட்டிடை மலிந்திருத்தல் வேண்டும். இந்தியக் காவிய உலகின் தொன்மையை என்னென்று கூறுவது !

ஓவியம், காவியம் போன்றதே. காவியமும் இயற்கைப்

படம்; ஓவியமும் இயற்கைப் படம்; இயற்கைக் கூறுகள் காவியத்தில் ஒருவிதமாகவும், ஓவியத்தில் வேறு விதமாகவும் இறக்கப்படும். இறக்கப்படும் விதத்தில் இரண்டுக்கும் வேற்றுமையுண்டு. பொருட்பயனில் இரண்டுக்கும் வேற்றுமை இல்லை. ஓவியம் காவியமே; காவியம் ஓவியமே.

பாரதமாதாவே ஓர் ஓவியம். மலை முடியும், ஆற்றணிகளும், பசும்போர்வையும், நீலக் கடலுடையும் கொண்ட ஓரழகிய வடிவம் ஓவியமன்றோ? தாயின் ஓவிய இயல் அவள் கருவிடைத் தோன்றும் சேய்களிடத்திலும் அமைதல் இயல்பன்றோ?

இந்தியா ஓர் ஓவியக்கூடம். எவ்வோவியத்தை ஈண்டு எடுத்துக்காட்டுவது? பல தோன்றித் தோன்றி மறைகின்றன. ஒன்று நினைவில் உறுத்து நிற்கிறது. அஃது எது? அஃது எல்லோரா.

எல்லோரா, இமயக் கொடியில் பொலியும் ஓர் ஒள்ளிய மலரின் ஓவியம். அவ்வோவியத்தைக் காண்போர், 'இது மனிதனால் செய்யப்பட்டதா, தெய்வத்தால் செய்யப்பட்டதா!' என்று ஐயுறுவர். ஒரு பெரும்பாறை, எல்லோரா ஓவியமாய் அமைந்துள்ளது. அதை வடித்த ஓவியரே, அதைப் பார்த்துப் பார்த்து, 'இஃது என்னிடத்தினின்று முகிழ்த்ததா!' என்று ஐயுறுவாராம். இதையொட்டி ஓர் அற்புதக் கதையும் வழங்கப்படுகிறது. 'ஓவியத்தெய்வமே ஒரு சிற்பனுருக் கொண்டு எல்லோராவை அமைத்தது போலும்!' என்று பேசுவோருமுளர்.

எல்லோராவையொத்த ஓவியங்கள் பலப்பல பாரதத்தை அழகு செய்கின்றன. பழைய இந்தியர் கோயில்களில் உயிரோவியங்கள் பல இன்னும் காட்சியளித்துக்கொண்டிருக்கின்றன.

பழைய இந்திய ஓவியங்களை எடுத்த அறிஞர், பள்ளிகளில் பணந்தந்து படித்துப் பட்டம் பெற்றவரல்லர்; பிற நாடு சென்று தேர்ச்சி பெற்று வந்தவரல்லர். ஏட்டுப் படிப்பில் அவர் நாட்டஞ் செலுத்தியதில்லை. முன்னாளில் ஓவியக்கலை எப்படி வளர்ந்தது? அது வழிவழியே வளர்ந்து வந்தது. பழைய இந்தியு ஓவியர் எவ்வழியில் காவியப் புலவோர்க்குக்

குறைந்தவராவர்? முன்னுக. தொழிற்கல்வியின் மாண்பு என்னே! என்னே! மற்றுமுள்ள தொழிற்கல்வித் துறைகள் பலவும் வழிவழிப்பிறந்து வளர்ந்தனவே.

இந்திய இசைக்கு ஒப்பாகவோ, உயர்வாகவோ, வேறு ஒரு நாட்டு இசை இன்னும் தோன்றவில்லை; இனியும் தோன்ருதென்றே கூறலாம். இந்தியாவின் தட்ப வெப்ப இயற்கை நிலை, இசை வளர்ச்சிக்குத் துணை செய்யும் நீர்மையது. அதனுல், இந்திய மக்கள், சரித்திர காலத்துக்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே இசையின் எல்லையைக் காணும் பேறு பெற்ருர்கள்.

நம் முன்னேர் நாதத்தின் இசை நுட்பம் கண்டவராதலின், அவரிடத்திலிருந்து ஏழிசையும், **யாழ்**, **குழல்** என்ற இசைக்கருவிகளும் பிறந்தன. யாழும் குழலும் விலங்குகளையும் வயப்படுத்தும் நீர்மையன; மனிதரிடத்திலுள்ள விலங்கியல்புகளைக் கல்லியொழிக்கும் தன்மையன; **கண்ண பிரானும் ஆனுயரும்** இசை முழக்கிய போது பல வித விலங்குகளெல்லாம் தங்களை மறந்து பகைமை மறந்து, ஒன்ருகி, இன்பம் நுகர்ந்ததை நம் நாட்டு நூல்களிற்காண்க. தஞ்சை **ஆபிரகாம் பண்டிதர்** இயற்றிய '**கருணுமிர்த சாகரம்**' என்னும் நூலில் முற்கால இந்தியரின் இசை நுட்பங்கள் பேசப்பட்டுள்ளன.

நமது நாட்டு இசை, நாத தத்துவத்தினின்றும் தோன்றிய ஒன்ருதலாலும், அத்தத்துவத்துக்குமேல் வேறு தத்துவம் இன்மையாலும், அதைக் கடந்து சாந்தத் தெய்வம் விளங்குதலானும், அது தன்னை முழக்குவோரையும் கேட்போரையும் சாந்தத்தில் திளைக்கச் செய்யும். எத்தனையோ யோகியர், எத்துணையோ யாண்டு தவங்கிடந்தும் அடைய இயலாத சாந்த நிலையை, நமது நாட்டு நல்லிசை எளிதில் கூட்ட வல்லதெனில், அதன் மாண்பை விரித்துக் கூறுதல் வேண்டுங்கொல்?

கிறிஸ்து பிறப்பதற்கு இரண்டு நூற்ருண்டுக்கு முன்னரே முற்கால இந்தியர், 'நாதம் காற்றலையில் தோன்றுகிறதா, ஆகாய அலையில் தோன்றுகிறதா?' என்ற ஆராய்ச்சியில் தலைப்பட்டனரென்று சரித்திரஞ் சொல்கிறது.

நாட்டியம் இசையுடன் தொடர்பு கொண்டது. இசையின் 'உணர்ச்சியை வெளிப்படுத்துவது நாட்டியம். நமது நாட்டுப் பரத நாட்டியத்தால் ஒவ்வொரு நாடி நரம்பும், ஒவ்வோர் உறுப்பும் பயிற்சி பெறும். அந்நாட்டியம் தன்னைப் பயில்வோரிடம் பிணி அணுகாதவாறு காத்துவரும் ; உடலில் அழகொழுகச் செய்யும். இந்திய நாட்டியக்கலை, கி. மு. இரண்டாம் நூற்றாண்டிலேயே பண்பட்டு வளம் பெற்றிருந்தது. இன்னும் அஃது ஆட்சியிலிருந்து வருதல் அதன் மாண்பை உணர்த்துவதாகும்.

இந்தியச் **சோதிடக்கலை** தொன்மை வாய்ந்தது. சோதிடக்கலை இந்தியாவினின்றும் **கிரீஸ்** சென்றதென்றும், கிரீஸினின்றும் இந்தியா வந்ததென்றும் சொல்லப்படுகின்றது. இது பற்றிய ஆராய்ச்சி, இன்னும் முற்றுப்பெறவில்லை. இது வரை எழுந்துள்ள ஆராய்ச்சிகளையும், கண்டுள்ள முடிபுகளையும் சிந்தனை செய்தால், சில நுட்பங்கள் இந்தியாவினின்றும் கிரீஸுக்குச் சென்றிருக்கலாமென்றும், சில நுட்பங்கள் கிரீஸினின்றும் இந்தியாவுக்கு வந்திருக்கலாமென்றும் விளங்குதல் பெறலாம்.

சோதிடக்கலை இந்நாளில் மேல் நாட்டில் நன்கு பெருகி வளர்ந்து வருகிறது. கோள்களின் நிலைகள் செவ்வனே கணிக்கப்படுகின்றன. ஆனால், பலன் சொல்வதில் இன்னும் மேல் நாட்டார் பண்படவில்லை. இக்காலக் கணிதஞானமில்லாத கிராமச் சோதிடன் சொல்லும் பலனில் பெரிதும் தவறுதல் நேராதிருப்பது கருதற்பாலது.

கிறிஸ்து பிறப்பதற்கு எத்துணையோ ஆண்டுகட்கு முன்னரே இந்தியாவில் **மருத்துவக்கலை** மருவலாயிற்று. இந்திய மருத்துவத்தில் சத்திரமும் உண்டு; மருந்தும் உண்டு.

சத்திரவித்தை இந்தியாவினின்றும் மேல் நாட்டுக்குச் சென்றது. இதனை ஜெர்மன் மருத்துவ அறிஞர் சிலர் ஏற்றுக்கொண்டுள்ளனர். ஏறக்குறைய ஆயிரம் ஆண்டாக இந்தியச் சத்திர வித்தை மேலும் ஓங்காதொழிந்தது. பழைய வழியில் சத்திரஞ்செய்வோர் இன்னும் ஈங்கொருவர் ஆங்கொருவராய் இருக்கின்றனர். சுதந்தர மேல் நாட்டில் அவ்வித்தை மேலும் மேலும் வளர்ந்தே செல்கிறது.

மருந்தில் இன்னும் மேல்நாடு இந்தியாவுக்கு ஒப்பாகவும் வரவில்லை என்று கூறலாம். தொழுநோய் (குஷ்டம்), என்புருக்கி (க்ஷயம்), நீரிழிவு (மதுமேகம்) முதலிய பெரு-நோய்களை முற்றும்-அறவே போக்கவல்ல மருந்து, இன்னும் மேல் நாட்டு மருத்துவத்தில் கருக்கொள்ளவில்லை. அப்பெரு-நோய்களை அறவே போக்க வல்ல இந்திய மருந்துகள் இந்நாளிலும் கிடைக்கக் கூடியனவாயிருக்கின்றன. அம்-மருந்துகளைச் செய்யும் மருத்துவர் தொகை நாளுக்கு நாள் சுருங்கி வருவது வருந்தத் தக்கது!

முற்காலத்தில் மருத்துவம், இரு கிளையாய்ப் பிரிந்து நின்றது: ஒன்று, **சித்தமுறை**; இன்னொன்று, **ஆயுள் வேத முறை.** முன்னையது, பெரிதும் முறிந்து பண்பட்ட ரசகந்த பாஷாணங்களால் ஆவது; பின்னையது பெரிதும் மூலிகைகளால் ஆவது. இரண்டும் இன்றியமையாதன.

பழங்கால இந்திய மருத்துவத்தில் ஒரு தனிச் சிறப்-பிருக்கிறது. அது நாடி பார்த்து நோய்களின் தன்மையை அளந்து கூறுவது.

இந்திய மருத்துவம் இன்று உண்டானதன்று; நேற்று உண்டானதன்று. அஃது **அதர்வ வேதத்தில்** விளங்குஞ் சிறப்புப் பெற்றுள்ளது. அதர்வ வேதகாலம் கி. மு. 800 என்று இக்கால ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். முற்கால இந்திய மருத்துவத்தின் தொன்மை, சிறப்பு முதலியன **பி. ஸி. ரே** எழுதிய **ஹிந்தி மருத்துவ நூ**லில் விளக்கப்-பட்டுள்ளன.

கி. மு. நாலாம் நூற்றூண்டிலேயே இந்திய **அரசியற்-கலைகளும், பொருளாதாரக் கலைகளும்** யாக்கப்-பட்டன.

பழங்கால இந்தியரால் **சமயக்கலை** மிக்க ஊக்கத்துடன் வளர்க்கப்பட்டது. அவர் இயற்கை இயலை—உயிர் இயலை—இறை இயலை—ஆராய்ந்தனர்; அவைகளின் உண்மையை-யும் படிப்படியே கண்டனர். இயற்கை-உயிர்-இறை ஆகிய-வற்றின் ஆராய்ச்சியும், தெளிவும் பண்டை இந்தியரிடைச் சமய ஒழுக்கத்தைப் புகச் செய்தன.

பழைய இந்தியர் சமயம் எது? அதன் நிலை எப்படி

இருந்தது? இவை சிக்கலான கேள்விகள். இவைகட்குப் பலர் பலவாறு விடை இறுப்பர்.

சமயம் இந்தியாவின் உயிர்; மற்றவை உடல் உறுப்புக்கள். இந்தியாவின் கல், மண், புல், புழு முதலிய எல்லாஞ் சமயக் காட்சி வழங்கிய காலமுமுண்டு. இந்தச் சமயம் உலகுக்கு இமயமாயிற்று; கங்கையாயிற்று. இமயமும் கங்கையும் சமயக் குறிகள்.

முற்கால இந்தியரின் சமயக் கலைகள் எவை? சித்த நூல்களும், இருக்கு வேதமும் பிறவுமென்க. பழஞ்சித்த நூல்களிற் பல மறைந்தன.

3. உழுதொழில்

[நாவலர், பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார்]

உலகை ஆளும் அரசன் முதல் காட்டிலே திரியும் வேட்டுவன் வரையில் யாவர்க்கும் இன்றியமையாதன உணவும், உடையும் ஆம். சங்கப் புலவராகிய **நக்கீரர்,**

“ தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய வொருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்
கடுமாப் பார்க்குங் கல்லா வொருவற்கும்
உண்பது நாழி ; உடுப்பவை யிரண்டே.”

என்று **புறப்பாட்டி**லே புகன்று வைத்தனர். **ஔவையாரும்** தமது நீதி நூலில்,

“ உண்பது நாழி யுடுப்பது நான்குமுழம்.”

என்று இயம்பினர்.

உணவுக்கும் உடைக்கும் இன்றியமையாத மூலப்பொருள்கள் உழுதொழிலாற்கிடைப்பன. மாந்தர் எஞ்ஞான்று உழுது பயிர் செய்யத் தொடங்கினரோ, அஞ்ஞான்றே நாகரிகம் கால் கொள்ளப் பெறுவதாயிற்று. தமிழ் நாட்டிலே இத்தொழில் என்று தொடங்கியதென இயம்புதல் அரிது. மிகப் பழைய நூலாகிய **தொல்காப்பியத்தில்** உழுதொழில் கூறப்பட்டுள்ளது. மற்றும் அந்நூலிலே **திணைகள்** வகுத்து, அவற்றின்கண் உண்டாகும் **கருப்பொருள்கள்** இவையெனத் தெரிவிக்குமிடத்து, **உணவு, மரம், பூ** என்பனவும், மக்கள் செய்தொழிலும் கருப்பொருளாகக் கணிக்கப்பட்டுள்ளன. மலை நெல், தினை, மூங்கிலரிசி என்பன குறிஞ்சியிலும்; வரகு, சாமை, முதிரை என்பன முல்லையிலும் ; செந்நெல், வெண்ணெல் என்பன **மருதத்தி**லும் விளையும் உணவுப் பொருள்களாம். **கரும்பும்** மருதத்திற்குரியது. வேங்கை, சந்தனம், அகில், தேக்கு முதலியன குறிஞ்சி நிலத்திலும்; உழிஞை, பாலை, ஓமை, இருப்பை முதலியன பாலை நிலத்திலும் ; கொன்றை, காயா, குருந்தம் முதலியன முல்லை நிலத்திலும் ; **காஞ்சி, வஞ்சி,** மருதம் முதலியன மருத நிலத்திலும்; கண்டல், புன்னை,

ஞாழல் முதலியன நெய்தல் நிலத்திலும் வளரும் மரங்களாம். இங்ஙனம் ஒவ்வொரு நிலத்திற்கே உரியவாகாமல், இரண்டு மூன்று நிலங்களில் வளர்ந்து பயன்தரத்தக்க மரம் முதலியனவும் உள்ளன. வாழை, மருதத்திலும் குறிஞ்சியிலும் பயிராதற்குரியது. தெங்கு, மருதம் நெய்தல் இரண்டிலும் பயன் தரும். மாமரம், மருதம், முல்லை, குறிஞ்சி என்னும் மூன்று நிலத்திலும் தளிர்க்கும். பழைய சங்கப் புலவர்கள் இவ்வியல்பினை நன்கறிந்து, திணை வளங்களைக் கூறுமிடத்து அவ்வத்திணைக்குரிய பொருள்களையே கூறியிருக்கின்றார்கள். எனவே, குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம் நெய்தல் என்னும் நிலங்களில் இன்னின்ன பயிர்களும், மரங்களும், மலர் தரும் செடி கொடி முதலியனவும் பயிராகும் என்பதனைப் பண்டைத் தமிழர் அறிந்திருந்தனர் என்பதும், அறிந்து அம்முறையே வேளாண்மை செய்து வந்தனர் என்பதும் புலனாகின்றன. இற்றை நாள் அரசியலார் விவசாயக் கல்லூரிகளால் இன்னமும் பொதுமக்கள் அறியவியலாத இத்தகைய வேளாண்மை நுணுக்கங்களை எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளின் முன் தமிழ் மக்கள் அறிந்திருந்தனர் என்பது வியப்பும் மகிழ்ச்சியும் விளைக்குஞ் செய்தியாம்.

நாட்டின் இலக்கணங்கூற வந்த தெய்வப் புலமைத் திருவள்ளுவனார், தொடக்கத்திலேயே ‘தள்ளா விளையுளும்’ என வேளாண்மையைக் குறிப்பிட்டுப் பின்னரும் அதனை வற்புறுத்துவாராயினர். உணவுப் பொருள்களுக்கு வேற்று நாட்டை எதிர் நோக்கும் நாடு, என்றேனும் பகைவர் முற்றுகையாலோ, பிற தடையாலோ அதனைப் பெற இயலாவிடின், அழிந்தொழிவது திண்ணம். ஆகலின், அக்குறைபாடில்லாத நாட்டினையே ‘நாடு’ எனச் சிறப்பித்துச் சொல்வர் ஆன்றோர். நாட்டில் விளைவு மிகுதற்கு நிலத்தின் தன்மையும், உழவர் முயற்சியும் காரணமாகும். ஆதலின், உழுதொழிலையும் உழவரையும் தமிழ் மக்கள் பெரிதும் பாராட்டிப் போற்றி வந்தார்கள்.

“ சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் ; அதனால்
உழந்தும் உழவே தலை.”

" உழுவா ருலகத்தார்க்கு ஆணி ;அஃ தாற்ருது
எழுவாரை யெல்லாம் பொறுத்து."

என்றிவ்வாருக வள்ளுவஞர் தெள்ளியுரைத்த பாக்கள் அனைத்தையும் பன்முறை சிந்தித்து உண்மை உணர்தல் வேண்டும்.

கல்வியிற்பெரியாராகிய **கம்பர்**, இதனைச் சிறப்பித்தற்கன்றே '**ஏரெழுபது**' என ஒரு நூலியற்றினர் ? ஔவையார் சிறுவர் உள்ளத்தில் இதனைப் பதிய வைக்குங் கருத்துடன்,

" பருவத்தே பயிர்செய்."
" நெற்பயிர் விளை."
" பூமி திருத்தியுண்."

எனவும்,

" சீரைத் தேடின் ஏரைத் தேடு."
" தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது."
" மேழிச் செல்வம் கோழை படாது."

எனவும் முறையே **ஆத்தி சூடி, கொன்றை வேந்தன்** என்னும் நூல்களிற்கூறியுள்ளனர்.

முற்காலத்திருந்த தமிழ் வேந்தர்களும் வேளாண்மையின் இன்றியமையாமையை உணர்ந்து, காடு கொன்று நாடாக்கினர்கள் ; ஏரி குளங்களைத் தோண்டுவித்தார்கள் ; யாற்றினின்று கிளைகளும், கண்ணாறுகளும் வெட்டுவித்தார்கள் ; அணைகளும், மதகுகளும் கட்டுவித்தார்கள் ; இங்ஙனம் உழவுக்குரிய வசதிகளைப் பெருக்கியதன்றி, விளைபொருள்களில் ஆறில் ஒரு கூறே இறையாகப் பெற்றும், அதனையும் தள்ள வேண்டிய வழித் தள்ளியும் பலவாறு உழவர் குடியைப் புரந்து வந்தார்கள். அக்காலத்திலிருந்த புலவர்களும் அரசர்களை நெருங்கி வேளாண்குடியைப் பாதுகாக்கும் கடப்பாட்டினை அவர்களுக்கு எடுத்துக் காட்டித் தெருட்டினர்கள்.

பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாடிய ஒரு புலவர், 'தம் நாட்டிலே நீர்நிலைகளைப் பெருக்கிய அரசரே உடம்பும் உயிரும் படைத்தோராவர் ; அவரே பகைவரை வெல்லவும், மறுமையின்பத்தை நுகரவும், புகழை நிறுத்தவும் வல்லவ-

ராவர்,' என்றியம்பினர். **சோழன் கிள்ளி வளவனைப் பாடிய ஒருவர்,**

"வருபடை தாங்கிப் பெயர்புறத் தார்த்துப்
பொருபடை தரூஉங் கொற்றமும் உழுபடை
ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே."

என்றும்,

"பகடு புறந்தருநர் பாரம் ஓம்பிக்
குடிபுறந் தருகுவை யாயின்நின்
அடிபுறந் தருகுவர் அடங்கா தோரே."

என்றும் அறிவுறுத்தினர்.

பாண்டியன் அறிவுடை நம்பியை நோக்கிப் **பிசி-ராந்தையார்** என்னும் புலவர், 'அறிவுடைய அரசன் இறை கொள்ளும் நெறியை அறிந்து கொள்ளின், அவனது நாடு கோடிப் பொருளை ஈட்டிக் கொடுத்துத் தானும் மிகவும் தழைக்கும்; அவன் அறிவால் மெல்லியனாகி, நாடோறும் வரிசையறியாத ஆரவாரத்தையுடைய சுற்றத்தோடு கூடி, அன்பு கெட்டுக் கொள்ளும் பொருளை விரும்பின், அவனும் உண்ணப்பெறான்; உலகமும் கெடும்,' என்று உரைத்-தருளினர்.

இவ்வாறு புலவர்கள் கூறும் அறிவுரையைச் செவி மடுத்தும், நல்லமைச்சரோடு கூடியும் தமிழ் வேந்தர்கள் உழவர்க்கு உதவி செய்து உழுதொழிலை வளர்த்து வந்தமை-யால், வேளாண்மை வளம் பெற்றது. **'வேலியாயிரம் விளையுட்டாக!'** என்றபடி ஒரு வேலி நிலம் ஆயிரக்கலம் விளைவுடையதாயிற்று. மக்கள் பசியின்றி வாழ்ந்து, பல நலங்களுக்கும் உரியவர்களானார்கள். உழவர்கள் நிலத்-தின் கிழவர்களாயிருந்தார்கள். அதனால், **கிழார்** என்ற பெயரும் அவர்களுக்கு உளதாயிற்று.

இங்ஙனம் முன்னாளில்,

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்."

என்று புகழும்படி பெருமிதத்துடன் உரிமை வாழ்க்கை வாழ்ந்து வந்த வேளாண் மாந்தர் இப்பொழுது எழுச்சி-யின்றி உரங்குன்றி நிற்கின்றனர்; உழுதொழில் வெறுக்கத்-

தக்க நிலையை அடைந்துள்ளது. இதன் காரணம் ஆராய்வதற்குரியது.

பண்டை நாளிலே இந்நாட்டில் வேளாண்மை செழித்திருந்ததுபோன்றே பல வகைக் கைத்தொழில்களும் வாணிபமும் மேன்மையுற்றிருந்தன. கைத்தொழில்களுள் நெய்தற்றெழில் எய்தியிருந்த மேன்மை யாவர்க்கும் இறும்பூது விளைப்பதொன்ரும். பழைய தமிழிலக்கியங்களை ஆராயின், இவ்வுண்மை புலனுகும். பழைய நாளில் இந்நாட்டுக்கு வந்து சென்ற யவனுசிரியர்களாகிய தாலமி, பிளினி, பெரிபுளூஸ் முதலானவர்கள் எழுதியுள்ள குறிப்புக்களாலும் இதனை நன்கு அறியலாம். இந்நாட்டின் விளைபொருள்களும் செய்பொருள்களும் வேற்று நாடுகளில் மிகுதியான விலைக்கு விற்கப்பட்டமையால், இந்நாட்டின் செல்வம் மேன்மேற் பெருகுவதாயிற்று. வாழ்க்கைக்கு வேண்டும் இன்றியமையாத பொருள்கட்குப் பிற நாட்டினர் கையை எதிர்பார்க்காமலே இங்குள்ளவர் வாழ்ந்து வந்தனர். உழுதொழில் செய்வார் தம் விளைபொருள்களைக் கொண்டே வேண்டும் பண்டங்களை மலிவாகப் பெற்று வாழ்க்கை நடாத்தினர் ; விருந்தோம்பல் முதலிய அறங்களை மேற்கொண்டு ஏனையோர்க்கும் உதவி புரிந்து வந்தனர். அதனுல், உழுதொழிலுக்கே தனியான பெருமை இருந்து வந்தது.

இந்நாளிலோ, இந்நாட்டுக் கைத்தொழில் வாணிகமெல்லாம் நசித்துவிட்டமையால், உடை முதலிய இன்றியமையாத பொருள்கட்கும் பிற நாட்டுத் தொழிலாளரையும் வணிகரையும் எதிர் நோக்க வேண்டியதாயிற்று. வேற்று நாட்டவர்களின் கூட்டுறவு, வாழ்க்கையின் இயல்புகளை மாற்றிச் செலவினை மிகுவித்து வருகிறது. மகளிர் தம் கையாற்செய்து வந்த அடுக்களைத் தொழில்களையும் இயந்திரங்கள் கவர்ந்துகொண்டன. ஊறு கறிகளும் தின்பண்டங்களுங்கூட வேற்று நாட்டிலிருந்து வருவிக்கப்படுகின்றன.

இங்ஙனம் மக்களின் முயற்சி சுருங்கவும், செலவு பெருகவும் பல வழிகள் உண்டாயின. இந்நிலையில் வேளாண்மை செய்வோர்க்கு வரிப்பளுவும் நாளுக்கு நாள் மிகுவதாயிற்று. அவர்கள் வரி செலுத்தி எஞ்சிய பொருள்

கொண்டு வாழ்க்கை நடத்த இயலாதவர்களாகிவிட்டார்கள். அதனால், உழுதொழிலுக்கும் போதியவளவு செலவு செய்ய ஆற்றல் அற்றார்கள். இயல்பிலே உரங்குன்றி வருகின்ற நிலங்கள், தக்கவாறு பண்படுத்தப்படாமையாலும், விளைவு குறைவனவாயின. அன்னோர் என் செய்வர்? மேலும் மேலும் கடன்வாங்குவாராயினர்; நிலங்களை விற்பாராயினர். இப்பொழுதுள்ள நிலங்களெல்லாம், வாங்குவார் இன்மையின் விற்கப்படாதவையே தவிர, வேறில்லை. இந்நிலையில் விட்டிருப்பின், சின்னாளில் உழுதொழில் என்பது ஒழிந்துவிடும். தேச நலத்திற்கருத்துடைய பெருமக்கள் இப்பொழுதே இதற்கு ஏற்ற செயல் முறைகளைக் கையாண்டு, இத்தொழிலைச் சிதைய விடாது பாதுகாத்தல் வேண்டும்.

இந்நோய்க்கு முதலாவதாகச் செய்ய வேண்டிய மருத்துவம், நிலங்களின் பண்புகளை உள்ளவாறு சோதித்து உணர்ந்து, நிலையான குறைந்த வரியை விதித்தலாகும். குறைந்த வட்டிக்குக் கடன் கொடுத்தல், வேளாண்மை நுட்பங்களை யாவரும் நன்கு அறியும்படி செய்தல் முதலியன அடுத்துச் செய்தற்குரியன. இவை ஓரளவு செய்யப்பட்டு வரினும், இன்னும் மிகுதியாகவும் விரைவாகவும் செய்யப்பட வேண்டும். மற்று, கல்வி கற்றுப் பட்டம் பெற்றவர்களுக்கும் உழுதொழில் செய்ய முற்பட்டு, தொழில் செய்வதைக் குறைவாக மதிக்கும் எண்ணத்தை மாற்றுதல் வேண்டும். இத்தகைய செயல்களில் அரசாங்கத்தினரும், நாட்டு நன்மக்களும் கருத்து வைத்தால், நாடு நலம் பெறும்.

4. தேசீயக் கவி பாரதியார்

[பேராசிரியர் ச. சோமசுந்தர பாரதியார், M.A., B.L.]

புலவர் திலகர் **ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியாரைத்** தமிழகமேயன்றிப் பிறிதுலகும் சிறிதறியும். இவர் புகழ் எம்மனோர் போற்றும் சிறுமையுடையதன்று. இவர் புகழிற்போலவே, வயதிலும் நண்பகல் எய்தாக் காலை ஞாயிறே ஆவர்; நாடு மூடிய கால மேகங்களிலும், நடுவு நிலைமை இறந்த ஓர் உணர்ச்சி இருளிலும் மறைந்து, மாசற்ற விண் பெறாத தற்காலத் தமிழ் நாட்டில் வெயில் செய வெள்கி, இவர் பெரிதும் ஒளிந்தொழிந்தார்.

ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் மதித்தற்கு உரியவும் அரியவுமாம் குணம் பல உடையவர். இவரை நயப்பார் பலர்; வெறுப்பார் சிலர். இவர்மாட்டு இவ்விரு திறத்தாரும் வியக்குங் குணமும் பலவாம். இவரைத் தமிழ் நாடு செய்த தவமென்பார் உளர்; வாணாளை வீணாக்கி, பல கற்றும், உலகத்தோடு ஒட்டவொழுகும் நலம் கல்லாராகக் கருதும் பிறரும் உளர். பலர் இவரைத் தமிழகத்தே தலை நின்ற தேச பத்தராக வந்திப்பர். இவரைத் 'தந்நலம் பேணாதார்; பிறர் நலமும் அறியவொண்ணார்,' என்று நிந்திப்பாரும் உளர். 'அறிவை அடிமைப்படுத்தி, உணர்வைக் கொள்ளை கொண்டு, நெஞ்சையள்ளும் அருங்கவி விரைந்தியற்ற வல்ல அமுதவாய்ப் புலவர் இவர்,' எனப் பலர் பாராட்டுவர்.

சென்ற பதினைந்தாண்டுகளாக நானும் பாரதியாரும் சிறிதுஞ் சல்லாபத்திற்கு இடமின்றி அறப் பிரிந்தோமாயினும், அதற்கு முன், இளமையில் தொடர்ந்த நெருக்கமும், சிறிது இடை பிரிந்து, பின் இடையறாது உடன் பயின்று சோராது வளர்ந்த் நேசமும் எனக்கு இவரிடத்துண்டு. இவர் சென்னையில் வசிக்கச் சென்ற காலமுதற்றான், இவர் வாழ்க்கை அத்துணையாக நான் நேரில் அறியாததாயிற்று. இவ்வாறு பிரிந்த இப்பின்காலத்தும் வெளி வந்த இவர் பாடல்களும், பத்திரிகை வியாசங்களும் பெரும்பாலும் நான் படியாதன இரா. இவர் சமுதாய வாழ்வையும் இயன்ற வரை கவனித்து வந்துளேன். உழுவலன்பு காரணமாக இவர்

தம் விழுமிய நூல்கள் பற்றி இடையிடையே எனக்கு எழுதுவதும் உண்டு. ஆகவே, இவை கொண்டு ஒருவாறு இப்புலவர் திலகர் வாழ்வில் பிறர் அறிய விரும்புவனவும் தகுவனவும் ஆய சிலவற்றை ஈண்டு விளக்கத் தொடங்குகிறேன் :

இவர் தந்தையாரை யான் அறிவேன். அவர், 'முயற்சி திருவினையாக்கும்,' என்ற முதுமொழிக்கு இலக்கியமானவர். எட்டையபுரம் சம்ஸ்தானத்தில் உத்தியோகஸ்தரும், வித்துவானுமாயிருந்து சிறந்த **ஸ்ரீ சின்னசாமி ஐயரவர்களை,** அவர் காலத்தில் திருநெல்வேலி ஜில்லாவில் அறியாதவர் இலர். அக்காலத்திலேயே அவர் கலாசாலை உதவியின்றி ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றிருந்தார்; தமிழில் சிறந்த பண்டிதர்; மேல் நாட்டுக் கணித முறையில் கைகண்ட நிபுணர்; தருக்கத்தில் தந்நிகரற்றவர். இத்தகைய அறிவு ஆற்றல் நிறைந்திருந்த ஸ்ரீ சின்னசாமி ஐயரவர்கட்கு, அவர்களின் முதல் மனைவியார் வயிற்றுதித்த புத்திரரே நம் வரகவிஞர். பாரதியாரின் அன்னையாரை நான் நேரில் அறியேன். அந்த அம்மையாரை அறிந்த அனைவரும் அவர் அழகிலும் அருளிலும் தம் இயற்பெயரொப்ப லக்ஷ்மியே என்பர். இத்தம்பதிகளின் தவப்பயனைப் **பாரதியார் 1882-ஆவது வருஷம், கார்த்திகை மாதத்தில், சுப தினத்தில்,** நல்ல வேளையில், **எட்டையபுரத்தில்** பிறந்தார். பெற்று மகிழ்ந்த தாயார், இவர் புகழ் கேட்டுப் பின்னும் மகிழ்பெறு முன்னே, இவர்தம் ஐந்தாம் ஆண்டிலேயே பரமபதம் எய்தினர். அது முதல் இவர் தந்தையாரே தாயுமாயிருந்து பாந்திப் பரிந்து பராமரிக்க, இவர் அறிவிலும் உருவிலும் ஒப்புயர்வற்று வளர்ந்து, ஊர் உவலை சொல்ல, யாவரும் அதிசயிக்கத் திகழலானார்.

நம் மகா கவிஞரின் தந்தையார், ஐந்தாம் ஆண்டில் இவருக்கு அக்ஷராப்பியாசம் செய்து வைத்தார். பாரதியார் தமது ஏழாம் பிராய முதலே அருமையான தமிழ்க் கவிகளை விளையாட்டாக விரைந்து இயற்றுவதைக் கண்ட வித்துவான்கள், நம் கவிஞரின் தந்தையாரைப் புகழ்ந்திருப்பதை நான் நேரில் அறிவேன். இவர் தம் எட்டு ஒன்பதாம்

ஆண்டுகளில் சர்வ சாதாரணமாய், கொடுத்த கருத்துக்களை வைத்து, அற்புதமான கவிகளைப் பூர்த்தி செய்து, பெரிய புலவர் கூட்டங்களைப் பிரமிக்கச் செய்த பல காலங்களிலும் நான் கூட இருந்திருக்கிறேன். **காளிதாசன், கம்பன்** முதலிய வரகவிகளுக்குக் காளி வாக்கில் எழுதிய காலமுதல் அநாயாசமாய்க் கவி சொல்லல் வாய்ந்தது என்று கேட்கும் கதைகளையும், **குமரகுருபரர்** ஐந்தாம் ஆண்டில் அரும்பாக்கள் இயற்றினர் என்ற கதையினையும் அபூர்வக் கற்பனைகள் என்று புறக்கணித்த நான், பாரதியார் ஏழாம் வயது முதல் எளிதில் பாடல் இயற்றித் தமிழ் வாணர்கள் மெச்சுமாறு காட்டிய திறமையை நேரிற்கண்ட பொழுதுதான், கவித்திறம் பிறப்பிலேயே அமைய வேண்டும் என்பதை அறிந்தேன். பாரதியார் இளமையில் புலவர் கூடியதோர் பெருஞ்சபையில் புதிது புதிதாகக் கொடுத்த அடிகளைக் கொண்டே பூர்ண கவிகளை விரைந்தியற்றிச் சபையோரை வியப்பித்த போது இவருடைய கவித் திறமையையும் அமிர்த வாக்கையும் கண்டு சந்தோஷப்பட்ட புலவர்கள், முதன்முதல் '**பாரதியார்**' என்ற பட்டத்தை இவருக்கு அளித்தார்கள். அன்று முதல் அனைவரும் இவரைப் பாரதியார் என்றே வழங்க ஆரம்பித்தனர். இக்கால முறைப்படி இவர் ஆரம்ப முதல் ஆங்கிலக் கலாசாலைகளில் படிப்பிக்கப் பெற்றுரேயன்றித் தனித் தமிழ் ஆசிரியர்களிடத்தில் தமிழ்ப் பாடம் கேட்கவில்லை. இவர் தந்தையார் இவருடைய கல்வியில் விசேஷ கவனம் செலுத்தியதுண்டு. இவர் இளம்பருவத்திலேயே பாஷையிலும், கணிதம் முதலிய சாஸ்திரப் பாடங்களிலும் சமமாகச் சிறந்து விளங்கினர்; அதிகமாகப் பேசுகிறதில்லை; குழந்தைகள் எல்லாரோடும் சேர்ந்து விளையாடுவதிலும் பிரியப்படார்; தமக்குற்ற தோழராகிய இரண்டொரு சகபாடிகளோடு மட்டும் பெரும்பொழுதைப் போக்கி வருவார். தேகப் பயிற்சியில் இவர் குழந்தை முதலே இலட்சியமில்லாதவர்; ஒழிந்த நேரமெல்லாம் ஜனப் பழக்கம் குறைந்த கோவில் மூலைகளிலும், தோட்டங்களிலும், குளக்கரைகளிலுமே, தனித்தும் தம் உற்ற தோழரோடும் கழித்து வந்தார். இராமாயணம்,

பாரதம் முதலிய இதிகாசக் கதைகளில் இவர் அதிகப் பிரேமையுள்ளவர். இவ்விதம் பதினைந்தாம் ஆண்டு வரையில் இவர் காலம் எட்டையபுரத்தில் கழிந்தது.

1897-ஆம் வருஷம், ஆனி பதினைந்தில் கடையத்தில், பாரதியாருக்கும் ஸ்ரீ செல்லப்பா ஐயரவர்கள் குமாரத்தி ஸ்ரீமதி செல்லம்மாளுக்கும் விவாகம் நடந்தது. அங்கு வந்திருந்த அரிகேசவநல்லூர் முதலிய பலவூர்த் தமிழ் வித்துவான்களும் இவர் புலமை கண்டு அளவற்ற சந்தோஷம் அடைந்தார்கள். விவாகமான மறு வருஷமே இவர் தந்தையார் தேக வியோகமானார். அதன் பயனாகப் பாரதியார் 1898-ஆம் வருஷம் காசி வாசியாக நேர்ந்தது. இடையில் திருநெல்வேலியில் ஹிந்து கலாசாலையில் சுமார் மூன்று வருஷ காலம் இவர் மாணாக்கராய் இருந்தார்; அப்பொழுது ஏற்பட்டிருந்த வகுப்பு முறைப்படி மூன்று முதல் ஐந்து பாரம் வரையில் அக்கலாசாலையில் படித்தார். அக்காலத்தில் கலாசாலைத் தமிழாசிரியருடனும், காலம் சென்ற ஸ்ரீ நெல்லையப்பன் கவிராயரவர்கள் வீட்டில் ஓயாது கூடும் வித்துவான்களுடனும் இவர் இட்ட தமிழ்ப் போர்களின் தொகைக்கு அளவில்லை. இவர் சல்லாபத்தை மிகவும் விரும்பிய கவிராயரவர்கள் இவரை மிகவும் பரிவாக ஆதரித்து வந்தார்கள். அந்தக் காலங்களில் இவருடைய அருமையான கவிதா சத்தியையும், மாற்றலரை வாயடக்கும் நுண்ணறிவையும், பேச்சு வன்மையையும் காட்டக் கூடிய கதைகள் பல உள. ஒரு சந்தர்ப்பத்தில், எதிர் பாராத வண்ணம் இவர் தம்மை ஏளனம் பண்ணிய வயது முதிர்ந்த ஒரு தமிழ் வாணரைத் தலை குனியச் செய்தார். அது வருமாறு :—யப். ஏ. (Junior) வகுப்பில் படித்துக்கொண்டிருந்தவரும், தமிழ்ப் பழக்கமுள்ள சோணாசலம் பிள்ளையவர்கள் குமாரருமாகிய காந்திமதிநாத பிள்ளை என்பவர், முருகநாத சுவாமிகளின் பழக்கமுள்ளவரும், விசேஷமாகத் தமிழ்ப் பயிற்சி உள்ளவருமாய் இருந்தார். அது பற்றி அடிக்கடி பாரதியாரும் நானும் அவர்கள் வீட்டிற்குப் போவதுண்டு. ஒரு சமயம் பலர் கூடியிருக்கும் பொழுது, கூடியவர்கள் எல்லோருள்ளும் இளைஞராகிய

பாரதியாரை அடக்க நினைத்துக் காந்திமதி நாதப் பிள்ளை-யவர்கள், **'பாரதி சின்னப் பயல்'** என்ற கடையடி கொடுத்து, அதை வைத்து ஒரு வெண்பாவைப் பூர்த்தி செய்யும்படி நம் புலவரைக் கேட்டார். அவர் சொல்லி வாய் மூடு முன், கேட்டவர் வியக்க, காந்திமதி நாதப் பிள்ளை தலை குனிய, அங்குள்ள யாவரும் இவர் என்ன சொல்லப் போகிறார் என்று யோசித்துக்கொண்டிருக்கும் போதே, தமக்குக் கொடுத்த அடியைக் கடையடியாக வைத்து, வெண்-பாவைப் பூர்த்தி பண்ணினார் பாரதியார். இதன் மூன்று மடியின் இறுதியைக் 'காந்திமதி நாதனை' என்று அமைத்து,

" …………காந்திமதி நாதனைப்
பாரதி சின்னப் பயல்."

என்று பாட்டை முடித்தார். அனைவரும் அதிக ஆச்சரியம் அடைந்தனர். இப்படியே, பல சமயங்களிலும் தம்மை எதிர்த்த புலவர்களை இவர் அதிசமர்த்தாய் அடக்கிய சந்தர்ப்பங்களெல்லாம் இவருடைய ஆச்சரிய புத்தியையும், தமிழ்த்திறத்தையும் நன்கு விளக்கக் கூடியவை.

தந்தையார் இறந்த பிறகு பாரதியார், தமக்கு ஆதரவும் துணையும் இல்லாமல், தம் தகப்பனாருடன் பிறந்த அத்தையார் அழைக்க, 1901-ஆம் வருஷம் காசிக்குப் போனார்; அங்கு ஒரே வருஷம் இருந்தார்; அந்தச் சர்வகலாசாலையில் தமிழ்ப் பாடம் இல்லாமை பற்றி, அங்கே இவர் வடமொழியைப் புதி-தாக எடுத்துப் படிக்க நேர்ந்தும், அந்த ஒரு வருஷத்திலேயே மேற்படி சர்வகலாசாலையில் பிரவேசப் பரீக்ஷை எழுதி, முதல் வகுப்பில் வெற்றி பெற்றார். சில அசௌகரியங்களால் இவர் அங்கிருந்து மேற்படிக்க முடியாமல் திரும்ப எட்டைய-புரத்துக்கு வர நேர்ந்தது. வந்த பிறகு, 1904-ஆம் வருஷம் வரை, கலாசாலையில் சென்று படிக்க மார்க்கமின்றி, அப்-பொழுது எட்டையபுரத்தில் யுவராஜாவாயிருந்த அரச வித்துவானுடன் தமிழ்ச் சல்லாபம் செய்தும், அரண்மனையில் அபிமானித்துக் கொடுத்து வந்த சொற்பப் பணத்தைக்-கொண்டு காலம் கழித்தும் வந்தார். அக்காலங்களில் எட்-டையபுரம் சம்ஸ்தானாதிபதியின்மேலும், அவர்கள் முன் கூடும் புலவர் சபைகளில் எழும் போட்டி காரணமாகப் பல

வேறு விஷயங்களைப் பற்றியும் பாரதியார் பாடிய பாடல்களுக்கு அளவில்லை. முக்கியமாக ஒரு சந்தர்ப்பத்தை நான் மறக்க முடியவில்லை :

ஒரு நாள் காலையில், சில புலவர்கள், "பாரதியார், விழுமிய கருத்துக்களடங்கிய தமிழ்க் கவிகளைப் புலவர்கள் மெச்ச விரைவாக இயற்றினாலும், **அண்ணாமலை ரெட்டியாரைப்** போலப் பாமரரும் ரசிக்கும்படியாகச் சங்கீத அமைப்புடன் சிந்துகள் முதலிய இசைத் தமிழ்ப் பாக்களை இயற்ற முடியாது," என்று கூறினார்கள். அப்பொழுது அரசரும் அதை ஆமோதித்து, "தமிழுலகிலேயே அண்ணாமலை ரெட்டியாரைப் போல இனி யாரும் கவி சொல்ல முடியாது," என்று கூறினர். அதைக் கேட்டுக்கொண்டிருந்த நம் வரகவிஞர் சிரித்தார். உடனே அந்தச் சபையார், "இவர் ரெட்டியாரைப் போலக் கவி சொல்ல முடியுமானால், செய்து காட்டுவதன்றி, வீணாகச் சிரிப்பது பெருமையன்று," என்று ஏளனம் பண்ணினார்கள். பாரதியார், அன்றே ஒரு சிந்து இயற்றிக்கொண்டு வருவதாகச் சொல்லி, விடை பெற்று வீடு சென்றார். அன்று மாலை பாரதியார் அரண்மனைக்குப் போன பொழுது வித்துவான்களுள் ஒருவரும் வரவில்லை. ஆனால், இவர் தாம் பாடிக்கொண்டு வந்த நூலை அரசர்முன் சமர்ப்பித்தார். உடனே ஆளனுப்பி, புலவர்கள் அழைக்கப்பட்டார்கள். வந்தவர்கள், பாரதியார் காலையில் சொன்னபோது விளையாட்டுப் பேச்சாக நினைத்ததுமன்றி, குறைந்த ஒரு வாரத்திற்குள் யாராலும் எவ்வித நூலும் செய்ய இயலாதென்று நினைத்ததனால் திரும்பத் தாங்கள் வரவில்லை என்று சொன்னார்கள். அப்போது நம் பாரதியாரின் சிந்து படிக்கப்பட்டது. அஃது அச்சாகாததால், அநேகர் அதனைக் கேட்டிருக்க மாட்டார். அந்தச் சிந்தைப் படிக்கக் கேட்டவர்கள் ஒரே அபிப்பிராயந்தான் சொன்னார்கள். "ரெட்டியார் காவடிச் சிந்து, பாமரர் பாட்டுத்தான் ; ஆனால், பாரதியார் சிந்தோ, அதன் சுவைகளுள் ஒன்றும் குறையாத, மிக மேன்மையான ஒரு தமிழ்ப் புலவரின் பாட்டு," என்று எல்லோரும் நம் பாரதியாரை மெச்சி வாயாரப் புகழ்ந்தார்கள்.

1904-ஆம் வருஷத்தில் பாரதியார் எட்டையபுரம் அரசருடன் சிறிது ஒற்றுமை குறைந்து, ஊரையும் உற்ருரையும் விட்டு வெளியேறக் கருதி, மதுரைக்குச் சென்ருர்; அங்கே சுமார் மூன்று மாத காலம் **சேதுபதி உயர்தர வித்தியாசாலையில்** தமிழ்ப் பண்டிதராயிருந்தார்; பின் சென்னைக்குச் சென்ருர்; அங்கே '**சுதேச மித்திரன்**' உதவி ஆசிரியராய் இருந்ததும் '**பால பாரதம்**', '**இந்தியா**' முதலிய தேசீயப் பத்திரிகைகளுக்குத் தாமே அதிபரும் ஆசிரியருமாய் இருந்து மிகவும் செவ்வை பெற அவற்றை நடத்தியதும் தமிழ் நாட்டில் தேசீய உணர்ச்சியையும் ஒரு புது ஆதரிசத்தையும் முதன்முதல் உண்டு பண்ணித் தேசபத்தராய் விளங்கியதும், அதியற்புதமான ஆவேசப் பாட்டுக்களை இயற்றி வெளியிட்டுப் புகழ் நிரப்பியதும் யாவரும் அறிந்த விஷயம். **ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையவர்கள்** சிறையிடப்பட்ட போது நம் பாரதியாரவர்களுக்கும், கலெக்டருக்கும் நடந்த சம்வாதமாகச் சில புதிய கருத்துக்களுடன் கீர்த்தனைகள் இயற்றி, தமிழ் மக்கள் மனத்தில் தூங்கிய ஒற்றுமையுணர்ச்சியையும், தேச நேசத்தையும் உயிர்ப்பித்து எழுப்பி உலவச் செய்ததை உலகம் அறியும்.

'**ஜன்ம பூமி**' முதலிய வெளியில் வந்த சில பாட்டுக்களேயன்றி, அச்சேருமல் இவர் பாடிப் பயின்று பரப்பிய தேசப்பாட்டுக்கள் பலவும் தமிழில் ஒரு புது நடையும், புதிய ஆவேசமும் உருவெடுக்கச் செய்தன. ஆயிரக் கணக்கான இளைஞரும் மாணுக்கரும் இவர் பாட்டுக்களையே பாடத் தலைப்பட்டனர். இவரது தேசாவேச ஓசை தமிழ் நாட்டில் ஆரம்பித்த போது, தேச பத்தி தமிழ் மக்களாலேயே அவமதிக்கப்பட்டதாயிருந்தது. 1908-ஆம் வருஷம் பிறந்த அரசாங்கத்தாரினது வெறியாட்டின் பயனுக அநேகர் சிறைப்பட நேர்ந்தது கண்டு, பாரதியார், 'நமக்கும் சிறைவாசம் நேரும்!' என்றஞ்சிப் **புதுச்சேரிக்குப்** போயினர். அங்கே பத்து வருஷம் அரணில்லாது தாமே சுமத்திக்கொண்ட சிறையில், விலங்கற்ற கைதியாய், வறுமை நோய் முதலிய துன்பங்களுக்கு ஆளாய், வெளியில் புகழ்பவரன்றி, நெஞ்சில் நேசிப்பாரும் அன்புடன் ஆதரிப்பாரும் இன்றிப்

பலவாறு வருந்தினர். துன்பம் நிறைந்த அக்காலத்திலேதான் இவர் அளவற்ற நூல்களை இயற்றிக் குவித்து வைத்தார் ; அழகிய வசன நூல்களும், சிறு கதைகளும் பல செய்துள்-ளார். இவர் வசன நடை இனிய எளிய நடையாயும், வடித்த சுவை நிறைந்ததாயும், ஒப்பற்ற கவிகளென்று சொல்-லும்படி அதிமாதுரியமாயும் இருக்கும். இரவீந்திர நாதரின் சிறு கதைகளுக்கு இவர் செய்துள்ள தமிழ் மொழி பெயர்ப்பு, படிக்கும்பொழுது மொழி பெயர்ப்பாய்க் காணுமல், தானே முதனூலும், இரவீந்திரர் ஆங்கிலமே மொழி பெயர்ப்பாயும் தோன்றும்படி அத்துணை அழகு பெற்று அமைந்துள்ளது. இவரது '**ஞானரதம்**' என்னும் வசன நூலைப் படித்தவர்-களுக்குத் தமிழ் நடையில் இவருக்குள்ள ஆதிக்கமும், நடைச் சிற்பத்திறமும் இனிது விளங்கும். கடைசியாக, 1918-ஆம் ஆண்டு இவர் தாமாகப் புதுச்சேரிக்குப் போனது போலவே, அங்கிருந்தும் தாமாகவே வெளியேறினர். எல்லை கடந்ததும், இவரைப் போலீஸார் கடலூரில் பிடித்துக் கைதியாக்கினர். ஆனல், யாதொரு குற்றமும் இவர் மேல் வெளியாகாத நிலையில் விரைவில் விடுதலை செய்யப்பட்டு, மனைவி மக்க-ளுடன் இவர் **கடையம்** சென்றார். அது முதலே இவரது உடல் நிலை, இவர் நண்பர்களுக்கு மிகுந்த வருத்தத்தை விளைத்தது. இவர் மிக மெலிந்து, வலி குறைந்து, நைந்த உருவத்தோடு மனவலியும் எய்த்து வந்தது, நாள்தோறும் சிநேகிதர்களுக்குக் கவலை தந்தது.

இறுதியாக, மறுபடியும் இவர் 1920-ஆம் வருஷத்தில் சென்னைக்குச் சென்று, 'சுதேச மித்திரன்' பத்திரிகைக்கு மீண்டும் துணையாசிரியராய் அமர்ந்தார். பத்திரிகையில் இவர் பாக்களும் தேசீய வியாசங்களும் அடிக்கடி வெளி வந்-ததை அனைவரும் அறிவர். ஆனல், நாள்தோறும் இவர் தேகபலம் குறைந்துகொண்டே வந்து, கடைசியாக, 1921-ஆம் வருஷம், செப்டெம்பர் மாதம், 11-ஆந் தேதி, சென்னை-யிலுள்ள **திருவல்லிக்கேணி**யில் உயிர் துறந்தார். இனி எவ்விதத்திலும் இவர் உதவி வேண்டாதார் ஆயினவுடன், இவர் இருக்கும் வரை இவரை அலட்சியஞ் செய்த தமிழுலகம், திடீரென்று இவர் புகழில் மோகமுற்று மூழ்கியிருக்கிறது.

5. தம்பிக்கு

[டாக்டர் மு. வரதராசனார், M.A., M.O.L., Ph.D.]

அன்புள்ள எழில்,

அறிஞர் பெர்னாட் ஷா சாவதற்குச் சில மாதங்களுக்கு முன்பு பிரிட்டனுக்குக் கூறிய அறிவுரை நினைவிலிருக்கிறதா? அது தமிழர் போற்ற வேண்டிய அறிவுரையாகவும் விளங்குகிறது.

பிரிட்டன் எவ்வளவோ நல்ல அரசியல் சீர்திருத்தங்களைச் செய்துள்ளது. ஆனாலும், சில கட்சிகள் அதை எதிர்த்துப் போராடிக் கெடுக்க முயல்கின்றன. அதற்காகத்தான் பெர்னார்ட் ஷா அந்த அறிவுரையைக் கூறினார். பிரிட்டன் செய்துள்ள சீர்திருத்தங்களையும் செய்ய எண்ணியுள்ள முற்போக்குத் திட்டங்களையும் உள் நாட்டாரும் வெளி நாட்டாரும் அறியும்படி விளம்பரப்படுத்த வேண்டும் என்றும், அதுவே எதிர்க்கும் பகையை வெல்வதற்கு வழி என்றும் கூறினார். ஒன்றுபடுத்தல், ஒழுங்குபடுத்தல், உணர்ச்சியூட்டுதல் இவை மட்டும் போதா என்றும், விளம்பரப்படுத்துவதே சிறந்த கடமை என்றும் கூறினார். 'விளம்பரப்படுத்துக, விளம்பரப்படுத்துக, விளம்பரப்படுத்துக,' என்று மூன்று முறை அடுக்கிக்கூறி வற்புறுத்தினார்.

தமிழ் நாட்டுக்கு இந்த அறிவுரை வேண்டாவா? இன்றுள்ள நிலையில் தமிழ் நாட்டுக்குத்தான் சிறப்பாக வேண்டும் என்று சொல்வேன். ஏன்? தமிழரின் அரசியல் தேவைகளை இன்று மற்ற மாகாணங்கள் அறியச் செய்ய வேண்டும்; உலகறியச் செய்ய வேண்டும். ஆனால், அந்தத் தேவைகளைப் பற்றித் தமிழ் நாட்டில் உள்ள தமிழ் மக்களுக்கே நன்றாகத் தெரியாதே! 'மொழிவாரி மாகாணம் என்பது என்ன? அது அமைந்தால் தமிழ் மொழிக்கும் தமிழர்க்கும் ஏற்படக்கூடிய நன்மைகள் என்ன? தமிழ் மாகாணத்தின் எல்லைகளாக வரையறுக்க வேண்டுபவை எவை? சென்னை நகரம் தமிழ் நாட்டின் தலை நகரமாக

அமையவேண்டிய பொருத்தம் என்ன ?' என்பவை எல்லாம் தமிழ் மக்களுக்கே நன்ருகத் தெரியாவே! மற்ற நாட்டு மக்களுக்கு விளம்பரப்படுத்துவது எங்கே?

நாம் ஏன் இவ்வளவு பிற்போக்கான நிலேயில் இருக்கிரும், தெரியுமா? நான் கண்ட காரணம் இதுதான்: வளர்ச்சியிலேயே நாம் பிற்போக்கானவர்கள் என்று சொல்வேன். மோட்டார் லாரிகள் பெருகிய இந்தக் காலத்தில் சென்னேயில் பெரிய நெடுந்தெருக்களில் கட்டை வண்டிகளில் மூட்டை ஏற்றி முன்னும் பின்னுமாகத் தமிழ்க் கூலியாட்கள் இழுத்துக்கொண்டு போவதைப் பார்த்திருக்கிருயே, அது போன்றது இது. யந்திரக் கருவிகள் அமைந்து பெருகிய பிறகும், மனிதன் மிருகம்போல யந்திரம்போல உழைத்தால், முன்னேற முடியுமா? உணவு விடுதிகள் (ஓட்டல்கள்) மூலே முடுக்கெல்லாம் பெருகிவிட்ட பிறகும், பழங்காலத்து விருந்தோம்பும் அறத்தை நாள்தோறும் போற்றிக்கொண்டு சிலர் வாழ்கிருர்களே, அது போன்றது இது. படித்து அறிவை வளர்க்கவும் எண்ணிக் கடமையைச் செய்யவும் நேரமே இல்லாமல், பொழுதெல்லாம் சமையல் அறையிலேயே கழித்து நாளுக்கு நான்கு உலே வைத்துக்கொண்டிருந்தால், கட்டிய மனேவி வாழ்க்கைத்துணே ஆகாமல் சமையற்காரியாய் நின்றுவிட்டால், முன்னேற முடியுமா? சமுதாயத்திலிருந்து ஒன்றும், குடும்பத்திலிருந்து ஒன்றுமாக எடுத்துக்காட்டினேன். அரசியலிலும் தமிழன் அதே பிற்போக்கில் இருக்கிருன். பத்திரிகைகளும் வானெலியும் பெருகிக் கருத்துப் பரப்பும் கருவிகளாகச் செல்வாக்குப் பெற்றுவிட்ட பிறகும், தமிழன் மேடை ஏறி ஐந்நூறு ஆயிரம் பேர்க்கு இடையில் பேசிவிட்டால் போதும் என்று எண்ணுகிருன். அதனுல், எதிரிகள் பேசாமல் பெரிய பெரிய பத்திரிகைகளே வைத்துக்கொண்டு, தமிழ் நாட்டின் சிறப்பியல்புகளும் தேவைகளும் வெளி நாடுகளுக்குத் தெரியாதபடி தமிழ் மக்களே மண்டைமேல் அடித்து அடக்கிக்கொண்டிருக்கிருர்கள். இந்த நிலேயில் '**விளம்பரப்படுத்துக, விளம்பரப்படுத்துக, விளம்பரப்படுத்துக,**' என்று ஷா கூறிய அறிவுரையின்படி நடப்பதற்கு வழி ஏது? நெடுங்காலமாகச்

செய்து வந்த குற்றம்; இன்று பயன் விளைகிறது. இது அரசியல் துறையில் உள்ள குறை.

கலைத்துறையிலும் இந்தக் குறை இருந்து வருகிறது. காரணம், நாம் மட்டும் அல்ல; நம் முன்னோர்களும் காரணமே. யாழ், தமிழரின் தனிச் சிறப்பான இசைக் கருவி என்று கூறுவோர், உணர்வோர் எத்தனை பேர்? நூற்றுக்கு ஐந்து பேருக்குமேல் இல்லை. போதுமா விளம்பரம்? நெடுங்காலத்திற்கு முன்பே யாழ் செத்துவிட்டது. விளம்பரம் இல்லாத குறையாலேதான் செத்தது. 'அது பத்திரிகை இல்லாத காலம் அல்லவா?' என்றும், 'விளம்பரத்திற்கு இடமே இல்லையே!' என்றும் கேட்கலாம். அந்தக் காலத்தில் பெரும்பாலான மக்கள் அறியும்படியாக அந்த யாழின் இசையைப் பரப்பவில்லை. மூவேந்தர்களின் அரண்மனையில் யாழ்ப்பாணர்கள் பாடினார்கள்; வள்ளல்களின் வீடுகளில் பாடினார்கள்; செல்வர்களின் வாயிலில் நின்று பாடினார்கள்; போதுமா? தமிழ் மக்கள் என்பவர் இந்த மூன்று வகையார் மட்டுமா? இவர்கள் தொகை நூற்றுக்கு ஒரு பங்கும் ஆகாதே! நூற்றுக்கு ஒரு பங்காகிய இவர்களை மட்டும் நம்பி வாழ்ந்த காரணத்தாலேதான் யாழ் செத்தது. பெரும்பான்மையோராகிய மற்றத் தமிழ் மக்களுடைய வாழ்விலும் யாழ் தொடர்பு கொண்டிருந்தால், அந்த அருமையான இசைக் கருவி செத்திருக்க முடியுமா? யாழின் இசை இல்லாமல் திருமணம் நடப்பதில்லை என்றுவது வேறு வகையிலாவது ஏற்பாடு செய்து, பொதுவாக எல்லாருடைய வாழ்விலும் கலந்திருந்தால், யாழ் வாழ்ந்திருக்கும்; யாரும் அதை அழித்திருக்க முடியாது. மின்சார விளக்கு மிளிர்கின்ற காலம் வந்த பிறகும் குத்து விளக்கு அழியா வாழ்வு பெற்று விளங்குகிறது. மரத்தால் மட்டும் அன்றி வெள்ளியாலும் பொன்னாலும் குத்து விளக்கு, அழியா வாழ்வு பெற்று வீடுதோறும் விளங்குகிறது! திருமணப் பந்தலில் இதற்கு எவ்வளவு மதிப்பு! இந்தக் குத்து விளக்குக்குப் பிழைக்கத் தெரிந்தது; தெரிகிறது. யாழுக்குப் பிழைக்கத் தெரியவில்லை. அது செத்தது. காரணம், விளம்பரம் இன்மை; அதாவது, பலர் அறிந்த பெருவாழ்வு இன்மை. சிலரிடம்

மட்டும் ஒண்டி ஒதுங்கி வாழ்ந்தால் போதும் என்ற சிற்றறிவு அதை அழித்தது.

இலக்கியத் துறையிலும் இது உண்மைதான். இங்கிலாந்தில் **ஷேக்ஸ்பியரின்** பெயர் தெரியாத குடும்பம் இருக்க முடியாது. ஆனல், தமிழ் நாட்டில் **கபிலர், நக்கீரர், திருவள்ளுவர், இளங்கோவடிகள்** முதலான பெரும்புலவர்களின் பெயர்கள் தெரியாத குடும்பங்கள் எத்தனையோ இருக்கின்றன. இங்கிலாந்தில் ஷேக்ஸ்பியரைப் படிக்க முடியாதவர்களும் அவரைப்பற்றி அறிந்துகொள்ளும்படி விளம்பரப்படுத்துகிறர்கள்; எல்லாரும் படிக்கக்கூடிய வகையில் மிக எளிய சிறு நூல்கள் எழுதிப் பரப்புகிறர்கள். ஆனல், நம் நாட்டில், யார் அப்படிச் செய்கிறர்கள்? **பரிமேலழகரும்** அவருக்கு அடுத்தபடியாக இன்னும் ஒரு சிலருமே திருக்குறளைப் படிக்க முடியும் என்றும், **அடியார்க்கு நல்லாரும்** வேறு ஏழெட்டுப் பேரும் தவிர மற்றவர்களுக்குச் **சிலப்பதிகாரம்** எட்டாது என்றும் சொல்லிச் சொல்லி, பெரும்பான்மையான தமிழ் மக்கள் மறந்து போகும்படியான தொண்டுதான் நடைபெற்றது. அதனுலேதான் சிலப்பதிகாரம் தமிழர் பலர் அறியாத நூலாக ஒதுங்கிவிட்டது. எல்லாருடைய வீட்டையும் தேடிக்கொண்டு விளம்பரத்துடன் வந்த வெளி நாட்டுக் கதைகள் செல்வாக்குப் பெற்றுவிட்டன. வெளி நாட்டுக் கதைகள் வேண்டா என்று சொல்லவில்லை. உலகம் ஒரு குடும்பமாகும் காலத்தில் அவ்வாறு பேச முடியுமா? ஆனல், தன் நாட்டுக் காவியங்களை மறந்துவிட்டு வெளி நாட்டுக் கதைகளைப் போற்றுவது அறமாகுமா? **பரந்த அரசியல் நோக்கம் உடைய தலைவர் நேருவும் காஷ்மீரத்தை மறப்பதில்லையே! ஷேக்கு அப்துல்லா சென்னைக்கு வந்து தமிழ் மக்களிடையே பேசிய போதும் காஷ்மீரத்தின் இயற்கையழகைப் பற்றி ஓயாமல் விளம்பரப்படுத்திக்கொண்டிருந்தாரே! முதலில் என் தாய், என் குழந்தை—அடுத்தபடி ஊராரின் மக்கள்—அதுதான் உலக ஒருமை போற்றும் வழி!**

தமிழ் மக்கள் கலை வகையில் குறைபட நடந்தது மட்டும் அன்றித் தங்கள் தாய் மொழியிடத்திலும் அவ்வாறே நடந்-

தார்கள். 'தமிழ் மொழி இப்படிப்பட்டது, அப்படிப்பட்டது, ஈடற்றது, எடுப்பற்றது' என்றெல்லாம் தமிழறிஞர் ஒருவர் மற்ருெருவரிடம் சொல்லிக்கொண்டிருந்தனரே தவிர, மற்றவர்களுக்கு விளங்கும்படியாக ஏதாவது செய்தார்களா? புலவர்கள் புலவர்களுக்காகவே நூல்களை எழுதிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் தமிழ் மொழியைப் பரப்பவேண்டும் என்று நானூறு ஆண்டுகளுக்கு முன் சேரநாட்டில் தொண்டு செய்திருந்தால், **மலையாளம்** என்று ஒரு மொழி தோன்றியிருக்காது; அங்கெல்லாம் தமிழே இருந்திருக்கும். **நாஞ்சில் நாடு** மட்டும் அன்றி, **கேரளம்** முழுதுமே தமிழ் நாட்டின் பகுதியாயிருக்கும். அதே தொண்டை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் **மைசூர்ப்** பகுதியிலும் **நெல்லூர் கடப்பை** முதலிய வட்டாரங்களிலும் செய்திருந்தால், **கன்னடம், தெலுங்கு** என்ற மொழிகள் தோன்றியிருக்காமல், அங்கெல்லாம் தமிழே பரவியிருக்கும். மைசூர்ப் பகுதியில் அக்காலத்தில் பேசிய கன்னடம் முக்காற்பகுதி தமிழோடு ஒத்திருந்தது. முயற்சி செய்து தமிழைப் பரப்பியிருந்தால், மற்றக் கால் பகுதியையும் அப்போது மாற்றியிருக்கலாம்; முழுதும் தமிழாகிவிட்டிருக்கும். அந்தக் காலத்துத் தமிழரசர்களும் தமிழறிஞர்களும் தூங்கிய தூக்கத்தால், கடமையை மறந்த காரணத்தால், இன்று கன்னடம் முக்காலே அரைக்கால் பகுதி மாறிவிட்டது. **பாம்பு** என்பது, 'பாமு' ஆகி, '**பாவு**' ஆகி, '**ஹாவு**' ஆகிவிட்டது. தெலுங்கும் அப்படியே. **மரம்** என்பதைப் பழங்காலத்தில் **மரன்** என்று எழுதியிருக்கிருர்கள். **மரனு, மரானு** என்று பல நூற்ருண்டுகளுக்கு முன் நெல்லூர் கடப்பைப் பகுதிகளில் சொல்லி வந்தார்கள். அப்போது தமிழறிஞர்கள் அங்கே போய்த் தொண்டு செய்யவில்லை; **மரானு** என்பது **ம்ரானு** ஆகி **மானு** ஆகிற வரையில் விட்டுவிட்டார்கள். தெலுங்கும் முக்கால் பகுதிக்குமேல் வேறுபட்டுவிட்டது. அந்த நிலையில் வடமொழி படித்தவர்கள் வந்து, கன்னடத்திற்கும் தெலுங்கிற்கும் தொண்டு செய்து, இலக்கணமும் எழுதிவிட்டார்கள். இப்படித் தங்கள் மொழி இருந்த இடத்திலேயே போய்த் தொண்டு செய்யத்

தவறினார்கள் ; மெல்ல மெல்ல மாறி மாறி வேறு மொழி-களாகத் திரிந்து போகும்படியாக விட்டுவிட்டார்கள் ; தமி-ழுக்கே பகை தேடிக்கொண்டார்கள். இல்லையானால், இன்று தமிழ் மொழி விந்தியமலை வரையிலும் தென்னிந்தியா முழுதும் பரவிய மொழியாய் இருந்திருக்கும் ; இந்தியாவில் பெரும்பாலோர் பேசும் மொழியாகவும் இருந்திருக்கும் ; அந்தக் காரணத்தால் இந்தியாவின் பொது மொழியாக வட-நாட்டாரும் ஏற்றுக்கொள்ளும் நிலைமையில் இருந்திருக்கும். மொழியையும் கலையையும் மற்றவற்றையும் சிலருடைய தனிச்சொத்தாக வைத்திருந்து பலர்க்கும் பரப்பாத குற்றம் இன்று இப்படி விளைந்திருக்கிறது. பலர்க்கும் தெரியப் பரப்ப வேண்டும். தம்பி, மொழி வழி அரசியலிலாவது அதை இனிமேல் செய்தால்தான் வாழ முடியும்! விளம்பரப்-படுத்தினால்தான் உய்யும் வழி உண்டு! இல்லையானால், இன்னும் ஒரு நூற்றாண்டில் **தமிழ், தமிழர், தமிழகம் இந்த மூன்றும் யாருக்கும் தெரியாத சொற்களாகி-விடும்.**

தம்பி, என்னவோ எழுதினேன்! எண்ணிப் பார்க்-கிறேன். என் மனநிலை எனக்கே தெரிகிறது. பிறரிடம் குறை காணும் வழக்கம் எனக்கு மிகுதியாய் இல்லை; என்-னிடம் ஏதாவது குறை அதற்குக் காரணமாய் இருக்கும் என்று எண்ணுவதே அடிக்கடி வழக்கமாகிவிட்டது. ஆமாம்! கடிக்கும் கொசுவின்மேல் சீறி விழுதல் போதுமா ? வீட்டின் தோட்டத்தில் சாக்கடை நீரைத் தேங்க விட்ட என் குற்றத்தை மறந்துவிட எனக்கு உரிமை உண்டா ?

அன்புள்ள,

வளவன்.

6. வெள்ளித்திரையில் வியப்பென்ன?

[திருவாட்டி ஈ. த. இராசேசுவரி அம்மையார், M.A., L.T.]

சினிமாக் கோயில் :

தேரும் திருநாளுமாகத் திருவிழாக்கள் கொண்டாடுவது நமது பழைய வழக்கம். அதுதான் நமது பழங்காலப் பொழுது போக்கு. வீட்டுத் தொல்லையையும் அலுவல் அலைச்சலையும் அடியோடு மறந்து, ஆய் என்று ஓய்வு எடுத்துக்கொள்ளும் வழி பழைய நாளில் ஒன்றுதான். இவ்வாறு ஆண்டுக்கு ஒரு முறையோ, அல்லது இருமுறையோ நடக்கலாம். அது அந்தக் காலம். இன்றோ, தினந்தோறும் தேரும் திருநாளுமாக வீட்டை விட்டும், பள்ளிக்கூடத்தை விட்டும், அலுவலகத்தை விட்டும் மக்கள் திரள் திரளாகப் போகின்றார்கள். எங்கே? **சினிமாக் கோயிலுக்குத்தான்.** திரைப் படங்கள் நமது அன்றாட வாழ்க்கையில் புகுந்து, நமது வாழ்க்கையையும் வாழ்க்கைக்கு அடிப்படையான மனத்தினையும் உருப்படுத்தி வருகின்றன. இதனைச் சிறுவனும் நன்றாக அறிவான். நம்முடைய நாட்டில் ஏறக்குறைய முப்பது கோடி மக்கள் வாழ்கிறார்கள். ஒரு வாரத்தில் ஏறக்குறைய உலக முழுதும் திரைப்படத்தைக் காணச் செல்பவரின் தொகை ஏறக்குறைய முப்பது கோடிதான். போருக்கு முன்னே கணக்கெடுத்து இருபத்தைந்து கோடி என்று புள்ளி போட்டார்கள். இப்போது புள்ளி போட்டால், முப்பத்து முக்கோடி தேவர்கள் என்ற எண்ணிக்கைக்குச் சரியாகப் போயிருக்கலாம்.

தெய்வக் காட்சி :

ஆம்! தேவர்கள்தாமே இத்தகைய காட்சிகளைக் காணக்கூடும்? கண் எதிரே பார்க்கிறோம்; நடந்தது நடந்தபடி பார்க்கிறோம்; பல வித நிறங்களோடு பகட்டாகக் காண்கிறோம். காலாடுவது கையாடுவது எல்லாம் அப்படியே தோன்றுகின்றன. பேசுகிற பேச்சும், பாடுகிற பாட்டும், எழுகிற இயற்கை ஒலியும் அவ்வப்போது உடனுக்கு உடனே கேட்கின்றன. இதற்கும் மேலாக எத்தனைதான் நம் மனம் காண விரும்பும்?

பழைய புராணமே :

.திரைப்படக் கலை இந்நாளைய கலை ; பொது மக்கள் கலை. ஐம்பது ஆண்டுக்குள் எல்லாத் துறைக்குள்ளும் இது புகுந்துவிட்டது. மக்கள் மனத்தை அவ்வளவு தூரம் இது கவர்ந்துவிட்டது. ஆனால், இதனுடைய அடிப்படைத் தத்துவம் இரண்டாயிரம் ஆண்டுகளாக உலகுக்குத் தெரியும். கீழ் நாட்டுச் சீன தேசத்தாரே இந்த உண்மையை முதன்-முதல் கண்டு பயன்படுத்திக்கொண்டவர் ஆவர். ஆனால், அந்தப் பழங்காலக் காட்சி எல்லாம் இன்று குழந்தை விளை-யாட்டாகும்.

அசையும் படம் :

'படம்' என்பது என்ன? ஒரு நிலையான காட்சியைக் காட்டுவதேயாகும். 'சித்திரம் போல அசையாது இருக்-கிறான்,' என்று பேசுவது உண்டல்லவா? படம் பிடிக்கும் போது அசைந்தால் என்ன ஆகும்? படமே கலைந்து போய்-விடும். 'அசையும் படம்' என்று இன்று பேசுகின்றோம். ஆனால், அது இந்தக் காலம். அந்தக் காலத்திலோ, 'அசை-யும்படம்' என்பது முன்னுக்குப்பின் முரணான உளறலாம். 'இயக்கத்தை நேரே படத்தில் காட்ட முடியாது ; ஆனால், பாட்டில் பாடலாம்,' என்று பாவாணர் தம்மைத் தாமே புகழ்ந்துகொண்டனர். **துஷ்யந்தன்** வேட்டை ஆடிய மானின் படத்தை எழுதலாம். ஓடுகின்ற போது ஓர் இமைப் போது அது எவ்வாறு இருந்தது என்பதனை மட்டுமே எழுத முடியும். அந்த நிலையிலிருந்து மற்றவைகளை எல்லாம் நம் மனம் கணக்கண்டு நிரப்பிக்கொள்ளுகிறது. அசையும் படம் காண்கிற நாமும் இயக்கத்தினை எழுதிக் காட்டும் புதிய வழி-யினைக் கண்டு பிடிக்கவில்லை. சினிமாப் பட்த்தின் சிதைந்த துண்டுகளைப் பலரும் பார்த்திருக்கலாம். அதிலேயும் ஒவ்-வொரு படமும் ஒவ்வொரு நிலையைத்தான் படம் பிடித்-திருக்கக் காண்கிறோம். ஆனால், திரைப்படத்தில் மோட்டார் ஓடுவதைப் போலவே தோன்றுவது எப்படி ? நல்லிளமங்கை சுழன்று சுழன்று நாட்டியமாடுவதாகத் தோன்றுவது எப்படி ? சந்திரன் வானிடையே ஊர்ந்து செல்வதையு-

மல்லவா நாம் திரைப்படத்தில் காண்கிறோம் ? அங்கே காற்றில் கொடி பறக்கின்றதே ! இலைகள் அசைகின்றனவே ! அவை என்ன ? கண் கட்டு வித்தையா ? இந்திரஜாலமா ?

கண் கட்டு வித்தை :

கண் கட்டு வித்தைதான் ! நம்முடைய குறைவே நிறைவாய் விளங்குகிற ஓர் இந்திரஜாலம் அது. அந்தக் கண் கட்டு வித்தையின் மர்மத்தை அதற்குள் புகுந்து சிறிது ஆராயலாம். சொல்வதைக் கவனி ; பிறகு அவ்வாறே செய்து பார். ஒரு கனமான வெள்ளை அட்டை - அதன் இரு புறங்களின் மத்தியில் நாடாக் கட்டி இருக்கிறது. அட்டையின் ஒரு புறத்தில் நரியின் படம் இருக்கிறது. அதன் பின் புறத்தில் ஒரு வலையின் படம். அதே போல நாடாக் கட்டிய மற்றோர் அட்டை—அதன் முன் புறத்தில் ஒரு கிளியின் படம்—பின் புறத்தில் கிளிக்கூட்டின் படம் ; மூன்றாவது அட்டையில் ஒரு புறம் பூனை—மற்றொரு புறம் எலி ; நான்காவது அட்டையில் முன்னே மீன்—பின்னே தண்ணீர்த் தொட்டி—இவ்வாறு தோன்றுகின்றன. நாடாக்களைக் கையில் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு அட்டையைச் சுழற்றுகிறோம். நரியும் வலையும் எழுதிய அட்டை இது. என்ன நிகழ்கிறது ? அட்டை மெதுவாகச் சுழலும்போது நரியும் வலையும் மாறி மாறிக் காட்சி அளிக்கின்றன. மிகவும் விரைவாகச் சுழற்றுகிறோம். இப்போது இவை தனித்தனியே தெளிவாகக் காட்சி அளிக்கவில்லை. இன்னும் விரைவாகச் சுழற்றுகிறோம். கடிகாரத்தை வைத்துக்கொண்டு எண்ணிப் பார்க்கிறோம். ஒரு விநாடிக்கு 16 படம் தோன்றும்படி அவ்வளவு விரைவாகச் சுழற்றுகிறோம். ஆ ! என்ன புதுமை ! வலையோ நரியோ தனியாகவும் காணோம் ; குழம்பி நின்ற காட்சியும் காணோம் ! வலைக்குள் நரி அகப்பட்டுக்கொண்ட காட்சி நம் கண்ணுக்குப் புலனாகிறது. ஏதாவது புதிய படம் வந்துவிட்டதா ? கண்ணைத் துடைத்து அட்டையைத் திருப்பித் திருப்பிப் பார்த்தால், பழைய நரியும் பழைய வலையும் தனித்தனியேதான் இருக்கின்றன. கிளியும் கூண்டும் எழுதிய அட்டையை எடுத்துச் சுழற்றிப் பார்க்கிறோம். விநாடிக்குப் பதினாறு படம்

தோன்றுகின்ற விரைவில் சுழற்றும் போது கூண்டில் கிளி அடைபட்டுத் தோன்றக் காண்கிறோம். பூனையும் எலியும் தனித்தனி எழுதிய அட்டையும் இந்த வேகத்தை எட்டிப் பார்க்கும் பொழுது புதிய கதையையே பாடுகிறது. அங்கே பூனை எலியைத் தாவிப் பிடிக்கிறது. மற்ற அட்டையும் இந்த வேகத்தில் சுழலும்போது தனியே இருந்த மீன் இன்பமாகத் தண்ணீர்த் தொட்டியிலே புகுந்து விளையாடுகிறது.

மாவலி விஞ்ஞானம் :

இதனைக் கண் கட்டு வித்தை என்று கூறுமல் என்ன என்று கூறுவது? அட்டை இங்கு ஒன்றும் மாறவில்லை. காண்கின்ற கண்ணே இங்கு ஒரு புதிய காட்சியைக் காண்கிறது. நமது கண்ணே இரண்டு படங்களையும் ஒன்று சேர்த்துவிடுகிறது. இது ஒரு பழைய விளையாட்டுத்தான். உலர்ந்த பனங்காயில் துளைகள் செய்து, ஆணங்காய்க் கரித்தூளை உப்போடு அந்தத் துளைக்குள் நிறுத்தி நெருப்பைப் பற்ற வைத்துக் கயிறு கோத்து நாட்டுப்புறங்களில் சிறு பிள்ளைகள் **மாவலி** சுழற்றுவார்கள். முதலில் தனித்தனி சுடர்களாகத் தோன்றுகின்றவை மிக விரைவாகச் சுழற்றும் போது தொடர்ந்த தீ வளையமாகச் சக்கராயுதம் போலச் சுழலக் காண்கிறோம். இதிலிருந்து புத்தர் ஒரு பெரிய உண்மையை நிலை நாட்ட முயன்றூர்: க்ஷணந்தோறும் மாறி மறைகின்ற பொறி எவ்வாறு தொடர்ந்து சக்கரமாகத் தோன்றுகிறதோ, அவ்வாறே க்ஷணந்தோறும் மாறி மறைவதே தொடர்ச்சியாய் நிலைபெற்று இருக்கும் உலகமாகக் காட்சி அளிக்கிறது என்று ஆலய விஞ்ஞானம் பேசினர்.

குறைவில் ஒரு நிறைவு :

இல்லாத தோற்றத்தைக் கண் எவ்வாறு காண்கிறது? அதுதான் கண்ணின் குறைபாடு. எல்லா உறுப்பினும் சிறந்தது கண்ணன்றோ? ஆனல், அந்தக் கண்ணும் ஜடந்தானே! அதனல் மிக வேகமாகப் பொருள்களைப்

பார்த்துக்கொண்டு போக முடியாது. ஒரு பொருளை விட்டு இன்னொரு பொருளைப் பார்ப்பதற்கு ஏறக்குறைய வீசம் விநாடி வேண்டும். இந்த வேகத்திற்குமேல் வேகமாய்ப் பொருள்கள் வந்தால், அவற்றைத் தனித்தனி பொருளாக நமது கண் காண முடியாது. இதுதான் கண்ணினுடைய நொண்டி நடை. காட்சி இவ்வாறு காலந்தாழ்த்து நிற்கின்றது. சிறிது நேரம் வரை நமது கண் காண்கின்ற காட்சியை விடாது பற்றிக்கொண்டு கிடக்கிறது. இதுதான் **காட்சியின் பற்று விடா நிலை** (Persistence of vision). வலை தோன்றுகிறது. அது மறைந்தாலும் $\frac{1}{16}$ விநாடி வரை தோன்றிக்கொண்டே இருக்கிறது. அதற்குள் நரி தோன்றுகிறது. காட்சியின் பற்று விடா நிலை காரணமாகக் கண் இவற்றைத் தனித்தனியே பார்க்க முடிவதில்லை; இரண்டையும் ஒன்றாக்கிக் காண்கிறது. வலையில் நரி விழுவதாகக் காண்கிறது. திரைப்படத்தில் நிழலிலும் **புகைப்படத் தகடுகளைப்** (Photo Films) பார்த்தால் பல படங்கள் இருக்கக் காண்கிறோம். விநாடிக்குப் பதினாறு படம் வருகிற வேகத்தில் இந்தத் தகட்டினைச் (Film) சுழற்றி வரும் போது மனிதன் நடப்பதும், நங்கை சுழல்வதும், கொடி பறப்பதும், இலைகள் அசைவதும் ஆகிய எல்லாம் கண் கட்டு வித்தையாய்க் கண் எதிரே தோன்றுகின்றன. மனிதன் நடப்பதை இரண்டு கால்களையும் சமமாய் வைத்தல், இடக்காலைத் தூக்குதல், இடக்காலை முன் வைத்தல் என்று பல பிரிவாகப் படம் பிடிக்கலாம். ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிலையின் படமேயாம். இப்படங்களை ஒன்றன்பின் ஒன்றாய் வரிசையாக விநாடிக்குப் பதினாறு படம் வருமாறு சுழற்றினால், மனிதன் நடக்கின்ற காட்சி தோன்றும். மனிதன் நடப்பது, ஒரு பெண் பந்தாடுவது, மின்சார விசிறியின் இலைகள் சுழல்வது ஆகிய இவற்றைப் பதினாறு நிலைப்படங்களாக எழுதி வட்டமான டப்பி போன்ற உருளையின் மேற்புறத்தில் ஒட்டிவிடலாம். அது சுழல்வதற்கு ஓர் இருசும் அமைத்துவிட வேண்டும். விநாடிக்கு ஒரு சுழல் சுழலும்படி அந்த உருளையைச் சுழற்றினால், மனிதன் நடக்கக் காண்போம்; பெண் பந்தாடக் காண்போம்; விசிறி சுழலக்

காண்போம். இவ்வாறு நேராகச் செய்து பார்த்தால்தான் இந்தக் கண் கட்டு வித்தை நன்கு விளங்கும்.

பின் என்ன புதுமை ?

இரண்டாயிரம் ஆண்டுகளாக இந்த வித்தை தெரிந்-திருந்தும் ஏன் இந்த வித்தை இருபதாம் நூற்ருண்டிலேதான் தோன்றியது? இப்போது ஒரு கதை என்ருல், அதைப் புகைப்படத் தகட்டின் நீளம் எண்ணுயிரம் அடி, பதினுயிரம் அடி என்று பேசிக்கொள்கிருர்கள். அப்படியாளுல், ஒரு கதையில் ஒரு லட்சம் படங்கள் வரும். ஒரு லட்சப் படத்தினையும் யார் எழுதிக்கொண்டிருப்பது? புகைப்படம் பிடிப்பதனை மக்கள் உணர்ந்தபின், எழுதவேண்டியதொல்லை தீர்ந்தது. அப்போதும் ஒரு லட்சம் கண்ணுடிகளை எவ்வாறு மேலே சொல்லிய வேகத்தில் விரைந்து வரச் செய்வது? இந்தத் தொல்லை எல்லாம் தீர, அமெரிக்க நாட்டிற்பிறந்த **ஜார்ஜ் ஈஸ்ட்மன்** (George Eastman) என்பவர் புகைப்-படத் தகடுகளைக் கண்டு பிடித்தார். பல நூறு அடிகளை ஒரு சுழலாகச் சுற்றிக்காட்ட இப்போது முடியும். அந்தத் தகட்டிலேயே நூற்றுக்கணக்கான படங்களை நிலைநிலையாகப் பிடித்துக்கொண்டே போவதும் இன்று எளிது. அதனுலேயே ஜார்ஜ் ஈஸ்ட்மன் பிறப்பதற்கு முன்னர்த் திரைப்படம் பிறப்பதற்கு இல்லை. திரைப்பட விஞ்ஞானமோ, இப்போது எவ்வளவோ முன்னேறி இருக்கின்றது. வெறும் புகைப்-படமா காண்கிருேம்? நிறப்படங்களையும் காண்கிருேம். இது மட்டுமா? பேசவும் பாடவும் கேட்கிருேம். பெரியதைச் சிறியதாக்கிப் பார்க்கிருேம்; சிறியதைப் பெரியதாக்கிப் பார்க்கிருேம். விரைந்து போவதை மெல்லப் போவது போல இணுக்கு இணுக்காகப் பார்க்கலாம். மெல்லப் போவதை விரைந்து போவதைப்போலச் செய்து காலத்தை வீணுக்-காமல் பார்க்கலாம். இன்னும் எத்தனையோ சித்துக்களை விளையாடி வருகின்ருேம்.

7. இலக்கிய ஓவியங்கள்—முத்தொள்ளாயிரம்

[திரு. ஆறுமுக முதலியார், M.A., B.O.L., L.T.]

அறிவின்பம் :

இப்பரந்த நிலவுலகின்கண் விளங்கும் உயிர் இனங்கள் அனைத்தினும் பகுத்தறிவு படைத்த மனித இனமே தலைசிறந்து விளங்குகிறது. ஏனைய உயிரினங்களுக்கில்லாத மனமும் அறிவும் விளக்கமும் மனிதனுக்கிருப்பதே மக்களை விலங்குகளினின்றும் வேறு பிரித்தறிவதற்கு உரியதாயிருக்கின்றது. இது பற்றியே 'மாவும் மாக்களும் ஐயறிவினவே,' என்றும். 'மக்கள்தாமே ஆறறிவுயிரே,' என்றும் ஒல்காப் புலமைத் **தொல்காப்பியனார்** மக்களின் இலக்கணம் வகுத்தார்.

இங்ஙனம் அறிவு விளக்கம் பெற்ற மனிதன், ஏனைய உயிர்கள் நுகரும் ஐம்புல இன்பத்தைவிடச் சிறந்ததும், என்றும் அழிதலில்லாததும், மேலும் மேலும் நுகர வேண்டும் என்னும் ஓர் ஆர்வத்தினை ஊட்ட வல்லதும் ஆகிய ஓர் அறிவின்பத்தை மனத்தால் நுகர முடிகிறது. அத்தகைய ஓர் இன்பத்தை இலக்கியச் சுவையிலீடுபடுவதால் நுகரலாம். இலக்கியத்தில் சிறந்த உயிர்நிலைப் பகுதியாகிய கவிதையிலிருந்து நுகரும் இன்பத்தைப் போன்ற இன்பம் வேறு எங்கும் இல்லையென்று சொல்லலாம். இலக்கிய நயமுணர்ந்து சுவைத்து இன்புறும் நோக்கமே இலக்கியப் பயிற்சியின் தலையாய நோக்கமும் பயனுமாகுமென்பர் இலக்கிய ஆராய்ச்சியாளர்.

உயர்ந்த ஆசிரியர்களால் எழுதப்பட்ட நூல்கள், 'தொட்டனைத்தூறும் மணற்கேணி' போல, இன்பமூறும் ஊற்றுக்களாம்; இலக்கியங்கள் நம் முன்னோர்களாகிய தெய்வப் புலமைச் சான்றோர்கள் தங்கள் வாழ்நாட்களில் கண்டறிந்து வைத்த உண்மைகளாகிய விலை மதிக்கவொண்ணு மணிகள் நிரப்பி வைத்திருக்கிற பொற்பேழைகளாம். அப்புலவர்கள் தங்கள் வாழ்க்கை நுகர்வுகளிலிருந்தும், பட்டு அறிந்தவற்றிலிருந்தும் எழும் உணர்ச்சிகளையும் உயர்கருத்-

துக்களேயும், ஓசையினிமை, சொல் .நயம், பொருள் நயம் முதலியவற்ருேடு வெளிப்படுத்துவது செய்யுளாகும். ஒன்பான் சுவைகளே ஒருங்கேயமைத்து, பத்து வித அழகுகளும் பாங்குடன் பொருந்த, மனம் ஈடுபடுவதற்குரிய பொருளினிமை, சுருக்கம், செறிவு முதலியன விளக்கமுறுவது செய்யுளிலேயாம்.

சொல்லோவியங்கள் :

தமிழில் எழுந்த பண்டைய புலவர்களின் வாக்குக்களில், சிறப்பாகச் சங்ககாலச் சான்ருேர் செய்யுட்களில், அவ்வச்செய்யுள் எழுந்த காலத்தில் வாழ்ந்த மக்களின் பழக்க வழக்கங்கள், நடை உடை எண்ணங்கள், அவ்வந்நிலத்துத் தெய்வம், உணவுப் பொருள்கள், விலங்குகள், மரங்கள், பறவைகள், பறை, தொழில், யாழ், ஊர்கள், நீர் நிலேகள், பூக்கள், செடி கொடிகள், மரங்கள் முதலியவற்ருேடு அந்நிலத்திற்குரிய மாந்தரின் ஒழுக்க நிலே, நாகரிகம், பண்பாடு முதலிய வாழ்க்கை நிலே அனேத்தையும் நாம் கண்டு களிக்கலாம். ஒரு களங்கமற்ற நீர்நிலேயானது தன் கரை மருங்கிலுள்ள செடி கொடிகள், மரங்கள் முதலியவற்றைத் திரைச் சீலேயில் தீட்டிய ஓவியமென்ன எடுத்துக் காட்டுவது போல, அப்புலவர்களின் செய்யுட்களும், புனேந்துரைகளும் உயர்வு நவிற்சிகளுமின்றி, உள்ளதை உள்ளவாறே எடுத்துரைக்கின்றன. இயற்கை அமைப்புக்களேயும், இயற்கைப் பொருள்களேயும் அவர்கள் நுனித்து நோக்குகின்ருர்கள். இன்னும் மக்கள் இயற்கையையும், அவர்களின் பல இயல்புகளேயும் ஆராய்ந்து அதன் பயனுய்த் தோன்றி எழும் உணர்ச்சிகளேயும் மனவெழுச்சிகளேயும், இன்ன நடையில் இன்ன சொற்களில் எழுத வேண்டும் என்னும் முன்னெண்ணம் இல்லாமலே அவர்களின் கருத்துக்கள் அவர்களே அறியாமலே வெளிப்பட வேண்டிப் பீரிட்டுக்கொண்டு புறப்பட, அவற்றைக் குறிக்குஞ் சொற்களும், தொடர்களும், அணிகளும் தாங்களே வந்தடைந்து நிற்க, அவர்கள் பாடுகிருர்கள்.

இயற்கையின் எழிலேயும் உண்மையையும் ஆங்காங்குத் திரிந்து நேரிற்கண்டு அப்புலவர்கள் பெருங்களிப்பும் பெரு-

கிய மனவெழுச்சியும் உடையவர்களாய், வலியும் வருத்தமு-மின்றி, பொருள்களுக்கு ஏற்ற சொற்கள் தாங்களே வந்-தடையப் பாடினூர்களாதலின், இவற்றில் அமைந்த சொற்-றெடர்கள், பொருள்களை நாம் நேரிற்கண்டு களிப்பது போன்ற சொல்லோவியங்களாய்த் திகழ்கின்றன.

சிறந்த புலவர்களின் செய்யுட்கள் வாழ்க்கையின் இயல்புகளை எடுத்துக் கூறுவதில் ஒரு தனி அழகுண்டு. வாழ்க்கையில் அழகையும் உண்மையையும் அவர்கள் கற்-பனைக் கண்கொண்டும் பார்க்கின்றுர்கள்; அவற்றைச் செய்யுளில் புதியதொரு கவினுறு கவிதையாக வகுக்கின்றுர்-கள். இவற்றைத்தான் '**ஆக்கல்**' அல்லது '**படைத்தல்**' என்பர். இவற்றைப் படிப்போருக்கும் ஒரு சிறந்த மனக் காட்சியாக வாழ்க்கைச் செயல்களும் நிகழ்ச்சிகளும் காட்சி அளிக்கின்றன. இத்தகைய கவிதைகளைப் படித்து, இவற்-றில் இலை மறை காய்களாய்ச் செறிந்து கிடக்கும் பொருள் நயங்களையும் வெளித் தோற்றங்களாகிய சொல் நயங்களை-யுங் கண்டுணர்ந்து, சுவைத்து இன்புறுதலே கல்வியின் மிகச் சிறந்த நோக்கமாகும்.

கவியமுதம் :

உலகத்து நாம் பல்வேறு மக்களோடு பழகும் போதும், வயிற்றுப் பிழைப்புக்காகப் பல துறைகளிலும் கிடந்துழன்று ஓடி ஆடித் திரிந்து உழைத்து அலுத்துப் போகும் போதும் தோன்றக்கூடிய வெறுப்பையும் சலிப்பையும் போக்கவல்லன இலக்கியங்களே. சிற்றினம் சேரல், மடி, வீண் காலப் போக்கு, பயனில் கருத்தையும் சொல்லையும் பாராட்டுதல் முதலிய பல குறைகளைப் போக்கிப் பெரியோர் தொடர்பு, முயற்சி, காலத்தை நல்வழிகளிற்செலவிடல், பயனுள்ள கருத்தையும் சொல்லையும் பாராட்டுதல் முதலிய பல நிறைவு-களை அவற்றினிடத்தில் நிறுவ வல்லது இலக்கியப் படிப்பு. இது பரந்த அறிவையும், விரிந்த நோக்கத்தையும் நல்கும். வாய் ஆருக, வயிறு களஞக உணரப்படும் வாய்ச்சுவையோ, சிறிது நேரமே நிலைத்து நின்று பிறகு மறைந்தொழிவதோடு,

தெவிட்டும் தன்மையும் வாய்ந்தது. அஃது அளவுக்கு விஞ்சினுல், நோய்க்கு இடந்தரும்.

ஆனுல், செவி ஆருகச் சிந்தை களனுகச் சென்று உணரப்படும் கவிச்சுவையோ எனின், தெவிட்டாத தெள்ளமுதமாய், மேலும் மேலும் வளர்ந்து, நினைக்கும் போதெல்லாம் புதிய இன்பம் பயப்பதாய், என்றும் நம்முள்ளத்தை இன்பத்தில் ஆழ்த்த வல்லதாயிருக்கிறது.

> "கவிப்பா அமுதம் இசையின் கறியொடு கண்ணற்குண்ணக்
> குவிப்பான்."

என்ற அடியில் **கம்பர்** பெருமானும் கவிப்பா இன்ப அமிழ்தமாகுமாற்றைச் சுருங்கச் சொல்லி விளங்கவைத்தமை காண்க. செய்யுட்சுவையில் இன்புறும் ஒருவர், எவ்வளவில் அதில் ஈடுபடற்குரியர் என்பதைக் கவிதையோடு ஊனும் உயிரும் ஒன்றிக் கலந்த அந்நிலையை,

> "வான்கலந்த மாணிக்க
> வாசக! நின் வாசகத்தை
> நான்கலந்து பாடுங்கால்
> நற்கருப்பஞ் சாற்றினிலே
> தேன்கலந்து, பால்கலந்து,
> செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
> ஊன்கலந்து, உயிர்கலந்து,
> உவட்டாமல் இனிப்பதுவே!"

என்னும் **இராமலிங்க அடிகளது** தீஞ்சுவைப்பாடலே தெளிவாய் உரைக்க வல்லது.

கவி நயத்திலேயே ஆழ்ந்து அமிழ்ந்து வள்ளுவரும் பண்புடையார் தொடர்பு பயில்தொறும் இன்பம் மிகுவதை விளக்க,

> 'நவில்தொறும் நூல்நயம் போலும்'

என்னும் சிறந்த உவமை வழங்கியுள்ளார்.

> 'செவியிற் சுவைஉணரா வாயுணர்வின் மாக்கள்,
> அவியினும் வாழினும் என்?
> 'செவிக்குண வில்லாத போழ்து சிறிது
> வயிற்றுக்கும் ஈயப் படும்.'

என்னும் குறள்களில் செவிச்சுவை மக்களின் பிறப்புரிமை-

யாகும் என்றும், அஃதில்லார் மக்கட்பிறப்பினரே ஆயினும், மாக்களேயாவார் ,என்றும் அவர் கூறுவன காண்க. சுருங்கக் கூறின், பசி, நீர் வேட்கை, அவலக் கவலே, முதுமை, தளர்ச்சி முதலியவற்றைப் போக்கி, மட்டில்லா மகிழ்ச்சியைத் தந்து என்றும் இளமையராக்க வல்லது இவ்வின்பமேயாம் எனக் கூறலாம்.

இத்தகைய இன்பத்தைச் சிறந்த செந்தமிழ்க் கவிதை-யாகிய **முத்தொள்ளாயிரத்**தில் வரும் மூன்று சொல் ஓவியங்களைச் செவி மடுத்து அடைவோம். முதலில் பாண்-டியனது போர்க்களச் சிறப்பியல்பைப் படம் பிடித்துக் காட்-டும் ஒரு காட்சிக்குப் போவோம் :

கண் புதைத்தல் :

பாண்டியன் படைகளும், மாற்ருர் சேனைகளும் போர்க்-களத்து எதிர்த்தன. யானைப்படை, யானைப்படையோடு பொருதது. காலாட்கள் காலாட்களைத் தாக்கிஞர்கள். எதிரி-யின் சார்பில் கணக்கற்ற போர் வீரர் விண்ணுலகெய்தினர். தம் காதலர் போரிற்பொன்றினர் என்பதைக் கேள்வியுற்ற வீரப்பெண்டிர், போர்க்களம் புக்கு, ‘‘இனி உயிர் வாழோம்!’’ என்று உறுதி கொண்டு, தீ வளர்த்து, அதிற்புகுந்தனர். இச்சமயத்து, வேப்பந்தார் புரளும் மார்பினையுடைய பாண்-டியன், களிறேறிப் போர்க்களம் பார்க்கப் புறப்பட்டான். அவன் அப்போது கண்ட காட்சி—பெண்டிர் தீப்பாயும் காட்சி —பொறுக்கலாற்ருத காட்சி, அவன் உள்ளத்தைப் பிடித்து அறுத்தது. அதற்கு மேலும் அதைக் காணப் பொருத மாறன் தன் மேலாடையின் முன்ருனையில் தன் கண்களைப் புதைத்-துக்கொண்டான். கண்களினின்றும் வழிந்தோடிய நீரையும் அப்படியே துடைத்துக்கொண்டுமிருக்கலாம். புலவர் தீட்-டிய இச்சொல் ஓவியம் ஒரு காட்சியாக நம் உள்ளத்திரையில் படிகின்றது. இதை ஓவியமாகவும் மாணவர்கள் தீட்டி மகிழலாம். இதோ இருக்கிறது அக்காட்சிப் பகுதி :

‘‘ ஏனைய பெண்டிர் எரிமூழ்கக் கண்டுதன்
தானையாற் கண்புதைத்தான் தார்வழுதி.’’

என்பது அது. இனி இக்காட்சியின் மற்ருெரு பகுதியும்

பார்க்கத் தகுந்தது. அரசனது துயரம், அவனோடு விட்ட-பாடில்லை; அஃறிணைப் பொருளாகிய யானையையும் பற்றிய-தாம். களிற்றியானையின் செய்தி என்ன? அரசன் ஏறி வந்த களிறும் பிற களிறுகளும் போர்க்களத்தைப் பார்த்தன. மாற்றாரின் களிறுகள் மாய்ந்து கிடப்பதைக்கண்டு ஆற்றாத அவ்ற்றின் பிடிகள், பொலிவிழந்தனவாய்ப் புன்மை நிறைந்து புலம்ப, அதனைக் கண்ட களிறுகளும் தம்மரசனைப் போலவே பொறுக்கலாற்றாது தங்கள் கண்களை மூடிக்கொண்டன. போரில் வெற்றி என்பது ஒன்று கிடைத்தாலும், அதனைக் கூர்ந்து பார்க்கும்போது, துயரம் என்பது உள்ளூறத் தங்கிக் கிடக்கும் என்பதை இச்செய்யுள் தெற்றெனக் காட்டுகிறது. அவலச்சுவை வழிந்தோடுமாறு யானை கண் புதைப்பதில் ஆசிரியர் அமைத்துள்ள நயம் வியத்தற்குரியது. பாட்டு முழுவதையும் இப்போது பார்ப்போம்:

“ ஏனைய பெண்டிர் எரிமூழ்கக் கண்டுதன்
தானையாற் கண்புதைத்தான் தார்வழுதி ;—யானையெலாம்
புல்லார் பிடிபுலம்பத் தாங்கண் புதைத்தவே
பல்யானை அட்ட களத்து.”

புறங்கடை நின்றது:

இனி அடுத்துச் சோழனது ‘**யானை மறத்தை**’ப் பார்ப்போம்: மலை போன்று பருத்துத் திரண்டு வலிமை-யுடையனவாய் விளங்கும் தோள்களையுடையவன் **கிள்ளி**. அவனது களிறு போர்க்களத்தினின்று மீண்டது. போரி-லிருந்து மீண்ட வீரரெல்லாரும் வரும் வழியைப் பார்த்துக்-கொண்டு, ‘வருவார் கொழுநர்,’ எனக் கதவம் திறந்து வைத்துக்கொண்டிருக்கும் அவர்தம் காதலியர், வரவேற்று மகிழ்ந்தனர். ஆனால், சோழனது களிற்றை வரவேற்று அதன் பிடி காத்துக்கொண்டிருந்தும், களிறு கோட்டைக்-குள்ளேயே வரவில்லை; புறங்கடையிலேயே நின்றுவிட்டது. ஏன் உள்ளே போகவில்லை? தன் அருமைக் காதலியின் முகத்தில் விழிப்பதற்கும் நாணிப் புறங்கடையிலேயே நின்றுவிட்டது. ஏன் நாணவேண்டும்? பிடியினது கண்ணை-யும் கருத்தையும் கவர வல்ல கட்டழகோடு களிறு விளங்-

கிற்று, போருக்கு முன். போருக்குப் பின்னே, முடியை நோக்கினல் முன்னைய பொலிவில்லை. கொடிகள் தூக்கிய மாற்றார் மதில்களைக் கோடு கொண்டு குத்தித் தகர்த்ததால் நுனி சிதைந்து முறிந்தன கொம்புகள். அடியை நோக்கினல் அங்கேயும் முன்னைய அழகில்லை. ஏன்? முடி சூடிய மன்னர்களையும் தன் அடிகொண்டு இடறித் தேய்த்த காரணத்தால், எண்ணற்ற முடிகளோடு உராய்ந்து, நகங்களும் தேய்ந்து உருவிழந்தன. இவை காரணமாக, பிடியின் முன் செல்ல, அழகழிந்து தோன்றும் பொல்லாமைக்கு நாணி, புறங்கடையிலேயே நின்றுவிட்டதாம்!

'கோடும் நகமும் பொலிவிழந்தன,' என இழிவாகக் கூறினும், புலவர், அவையே வீரக்களிற்றின் வெற்றிச் சின்னங்கள் என்பதை உய்த்துணர வைத்து, களிற்றின் அழகையும் வீரத்தையும் கிள்ளியின் தோள் வலியோடு சேர்த்துப் பாராட்டி, காதலையும் உடன் கூட்டி, இழிவில் வைத்துச் சொன்ன நயத்தை வியவாது என் செய்வது! இயல்பாகவே புறங்கடையில் யானை நின்றதை, 'உள்ளே செல்ல நாணியது,' என்ற தம் குறிப்பை அதன்மேல் ஏற்றிப் புலவர் புனைந்துரைத்த தற்குறிப்பேற்ற அணி நயமும் பாராட்டற்பாலது. பாட்டையே முழு உருவத்தில் பார்ப்போம்:

"கொடுமதில் பாய்ந்திற்ற கோடும் அரசர்
முடியிடறித் தேய்ந்த நகமும்—பிடிமுன்பு
பொல்லாமை நாணிப் புறங்கடை நின்றதே
கல்லார்தோட் கிள்ளி களிறு."

என்பதே அச்செய்யுள்.

முத்தமிழ் வேந்தரில் மாறனது மறத்தைக் கண்டோம். செம்பியனது சீரையறிந்தோம். சேரனது சிறப்பையும் ஒரு செய்யுளில் பார்ப்போம். இயற்கை வளம் செறிந்து விளங்கும் சேரநாட்டினது சிறப்பை, புலவர் தீட்டியுள்ள ஒரு சொல் ஓவியத் துணைகொண்டு காண்போம்: செவ்வாம்பற்பூக்கள் செக்கச்செவேரென்று பூத்துக் கிடக்கின்ற நீர் வளமிக்க வயல் ஒன்றில் அன்னம் முதலிய நீர்ப் பறவைகளும்

நீந்திக்கொண்டிருக்கின்ற சேரநாட்டின் ஒரு காட்சியைப் புலவர் கண்கொண்டு பார்ப்போம் :

வெள்ளம் தீப்பட்டது !

மாற்ருர் மனத்தில் நச்சுப்போல் அச்சத்தை விளைவிக்கக்கூடிய இலை வடிவு கொண்ட வேற்படையைக் கையில் ஏந்திய சேரனது நாட்டில் பகைவர் படையெடுத்து வருவர் என்று குடிகள் நடுக்குற்று அஞ்சிக் கூக்குரலிட வேண்டிய இன்றியமையாமையில்லை. அவ்வளவு பாதுகாவல் உண்டு அங்கு. எனினும், ஓர் ஆரவாரம் மட்டும் கேட்கின்றது. அது என்ன? சிறகுகளாகிய தம் கைகளாலே தம் இளங்குஞ்சுகளை நீர்ப்பறவையினங்கள் அணைத்துக்கொள்ளுகின்ற ஆரவாரம் மட்டும் இருக்கின்றது. ஏன் தம் குஞ்சுகளை அவை அணைத்துக்கொள்ள வேண்டும்? தண்ணீர்ப் பரப்பு முழுவதிலும் தீப்பிடித்துவிட்டது என்று கருதி, அஞ்சி, தம் உயிர் கொடுத்தேனும் தம் இளங்குழவிகளைக் காக்கவேண்டும் எனக் கருதியமையால், அங்ஙனம் அணைத்துக்கொண்டன. தீ எப்படிப் பிடித்தது? தண்ணீரில் தீப்பிடிக்குமா? தீயுமில்லை, ஒன்றுமில்லை. சேறு சிறக்கும் அவ்வயலில் செந்நிறம் பொருந்திய ஆம்பல்கள் இதழ்விரிந்து மலர்ந்திருக்கின்றன. மிகுதியாகப் பூத்திருத்தலால் தண்ணீர்ப் பரப்பு முழுவதிலும் செந்நிறம் பரவியிருப்பதை, வெள்ளம் முழுவதும் தீப்பரவியது போல, பகுத்தறிவு அற்றவையும், குஞ்சுகளின்பால் தாய்மையருள் உற்றவையும் ஆகிய இப்பறவைகள் கருதிவிட்டன. அவ்வளவே! இதைத்தான் புலவர் கற்பனைக் காட்சியாக நமக்களிக்கின்ருர்.

மேலும், ‘பறவையின் கவ்வை தவிர வேருெரு கவ்வையும் எழக் காரணமில்லை கோதை நாட்டில்,’ என ஒழித்துக்காட்டணியின் வாசமும் இதில் வீசுகிறதல்லவா ?

“ செஞ்ஞா யிற்றுத் தெறலல்லது
பிறிதுதெறல் அறியார்நின் னிழல்வாழ் வோரே ;
திருவில் லல்லது கொலைவில் லறியார் ;
நாஞ்சில் அல்லது படையு மறியார்.”

என்னும் புறப்பாட்டு அடிகளை இதனோடு ஒப்பிடுக. சேர-

நாட்டின் நீர் வளமும், நிலவளமும், சேரனது வீரமும், அதோடு நகையும் வெளிப்படுகின்ற ஒரு கலவைச் சுவையை அல்லவா இதில் நாம் சுவைக்கின்றோம்? இயல்பாகவே செந்நிறம் படர்ந்திருக்கின்ற சிறப்பில், பறவைகள் தீப்பிடித்ததாகக் கருதின என்னும் தம் குறிப்பையேற்றிப் புலவர் வைத்திருக்கும் தற்குறிப்பேற்ற வாசமும் இதில் கலந்து வீசுகிறது. பறவையின் சிறகுகளை, அருமைத்தாய் சேயினை அணைக்கும் செங்கைகளாகச் சிறப்பித்ததில் உருவக நயமும் காண்க.

இதோ இருக்கிறது முழுப் பாட்டும் :

“ அள்ளற் பழனத் தரக்காம்பல் வாயவிழ
வெள்ளந்தீப் பட்ட தெனவெரீஇப்—புள்ளினந்தங்
கைச்சிறகாற் பார்ப்பொடுக்குங் கவ்வை யுடைத்தரோ
நச்சிலைவேற் கோக்கோதை நாடு.”

இவ்வழகிய பாட்டின் சொல்லும் பொருளும்

“ வழகிதழ்க் காந்தள்மேல் வண்டிருப்ப ஒண்தீ
முழுகியதென் றஞ்சிமுது மந்தி—பழகி
எழுந்தெழுந்து கைந்நெரிக்கும் ஈங்கோயே, திங்கட்
கொழுந்தெழுந்த செஞ்சடையான் குன்று.”

என்ற **திருவீங்கோய் மலை எழுபது** பாடலிற்பயில்வதை ஒப்புநோக்கிச் சுவைத்தல் சிறந்த இன்பம் பயப்பதொன்றும். இத்தகைய சொல்லோவியங்கள் நிறைந்த செந்தமிழ்க் கவிதையே, ‘ **முத்தொள்ளாயிரம்** ’ ஆம்.

8. ரேடார்

[திரு. வி. சு. அங்கப்பனுர், B.A., B.Sc. (Hons.), Dip. in Geog.]

அன்றிரவு நல்ல இருட்டு ; அதோடு அடர்ந்த மூடுபனி. பிரெஞ்சுக் கரையிலிருந்து கிளம்பிய விமானங்கள் இலண்டனை நோக்கிப் பாய்ந்து வந்தன. மொத்தம் நாற்பத்தெட்டு விமானங்கள். ஒவ்வொன்றிலும் சுமக்க முடியாத வெடி குண்டுகள். அந்த விமானப் படைக்குத் தலைவன், பேப்பன் என்னும் ஒரு ஜெர்மானிய இளைஞன். அன்று அவனுக்கு அளவற்ற நம்பிக்கை. தன் வரவை எதிரி எப்படி அறிய முடியும் ? அறிந்தாலும், எப்படித் தடுக்க முடியும் ? அந்த மூடுபனியைத் தொலைப்பதற்கு எதிரியிடம் விளக்கேது ?

தனக்கு வரவிருக்கும் படுநாசத்தை அறியாதது போல, இலண்டன் நகரம் தூங்கிக்கொண்டிருந்தது. அதை நினைக்கும்போது பேப்பனுக்கு 'ஐயோ பாவம் !' என்றிருந்தது. அந்த நகருக்கு அழிவுதான் எவ்வளவு நிச்சயம், எவ்வளவு சமீபம் !

எந்த இருட்டிலும், எந்த மூடுபனியிலும் இலண்டன் நகரை அறிந்துகொள்வதில் பேப்பனுக்குக் கஷ்டமில்லை. பறக்க வேண்டிய தூரத்தையும் திசையையும் கணக்கிட்டு, குறி தவருமல் தன் இலக்குமீது குண்டுகளை எறிய முடியும். பேப்பனின் நெஞ்சு படபடவென்று அடித்துக்கொண்டது. இன்னும் சில நொடிகளில் அவனுடைய வேலை முடிந்துவிடும். ஹிட்லர் தன்னைப் பாராட்டும் காட்சி அவன் கண் முன் வந்து வந்து மறைந்தது. ஆனல், இது என்ன சத்தம் ? விமான எதிர்ப்பு வெடிகள் அல்லவா ? ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு......விண்மீன் அறுந்து விழுவது போல எரிந்து சுற்றிச் சுற்றிக் கீழே பாய்ந்தது அவனுடைய விமானம்.

'ஐந்து, ஆறு, ஏழு,—' என்று தொடர்ந்து எண்ணிக்கொண்டே போனுள் ஓர் ஆங்கிலப் பெண். ஓர் அறையில் அவள் ஏதோ இயந்திரத்தின் முன் உட்கார்ந்திருந்தாள். வட்டமான கண்ணுடி ஒன்று. அதில் ஒரு பச்சைக் கோடு, கடியார முள் போலச் சுற்றி வருகிறது. சில இடங்களில்

அது பளிச்சுப் பளிச்சென்று மின்னியது ; அதைப் பார்த்-துக்கொண்டுதான் அவள் அம்மாதிரி எண்ணினுள்.

கடைசியாக, "ஐந்து விமானங்கள் தப்பித்துக்-கொண்டுவிட்டன. நாற்பத்தெட்டு விமானங்களில் நாற்பத்து-மூன்று பலி," என்று சொல்லிச் சிரித்தாள் அப்பெண்.

1940-ஆம் வருஷம் பிரிட்டனிடம் அதிக விமானங்கள் இருக்கவில்லை. ஜெர்மனியிடம் அவை பன்மடங்கு அதிகமாய் இருந்தன. ஆனுல், பிரிட்டனைத் தாக்கிய விமானங்கள் எல்லாம் நாசமடைந்தன. இருட்டில் ஒளிந்து வந்தாலும், மேகத்தில் மறைந்து வந்தாலும், பிரிட்டிஷ் பீரங்கிகள் குறி தவருமல் சுட்டன. ஜெர்மன் விமானங்கள் எங்கே சென்ருலும் ஆங்கில விமானிகள் சொல்லி வைத்தாற்போல எதிர்ப்பட்டார்கள். பிரிட்டன்மீது ஹிட்லர் தொடுத்த விமான யுத்தம் படுதோல்வியில் முடிந்தது.

பிரிட்டனைக் காப்பாற்றிய அந்த மாயக் கருவியைப் பற்றிய செய்தி, பரம இரகசியமாக வைக்கப்பட்டு வந்தது. இப்போது வெளிவந்துள்ள விவரங்களைக் கொண்டு, அதன் நுட்பத்தை நாம் சுலபமாய் அறிந்துகொள்ளலாம்.

ரேடார் உபயோகத்துக்கு வருவதற்கு முன், எதிரி விமானத்தை அறிவதற்குச் சோதனை விளக்குகளை உபயோ-கித்தார்கள். அதிக பிரகாசமான சோதனை விளக்குகளின் கிரணங்களை வானத்தில் செலுத்தி, அந்த வெளிச்சத்தில் தட்டுப்படும் விமானங்களை நோக்கி, பீரங்கியால் சுடுவார்கள். இதில் உள்ள சிரமம் வெளிப்படையாகும். எதிரி விமானிகள் வந்திருப்பதை அறிந்தால், ஆகாயம் முழுவதையும் ஒளிக் கிரணங்களைக் கொண்டு தேடி, பீரங்கிக் குண்டுகளால் நிரப்ப வேண்டும். மூடுபனியோ, மேகங்களோ மறைக்கும் போது, இதுவும் சாத்தியமில்லை. ஆனுல், இந்த ஒளிக் கிரணங்கள் செய்யும் வேலையை நாம் அறிந்துகொண்டால், ரேடாரின் இரகசியத்தையும் தெரிந்துகொள்ளலாம்.

ஒரு விளக்கை ஏற்றுவதும், அதன் வெளிச்சம் பரவு-வதும் ஒரே சமயத்தில் நடப்பதாக நாம் கருதுகிருேம். உண்மை அதுவன்று. சூரிய வெளிச்சம் பூமிக்கு வந்து சேர எட்டு நிமிஷங்கள் ஆகும். ஒளிக் கிரணங்கள் நொடிக்கு

நூறு லட்சத்து எண்பத்தாறுயிரம் மைல் பாய்கின்றன. சில நட்சத்திரங்களின் வெளிச்சம் பூமிக்கு வந்து சேர ஆயிரக்கணக்கான வருஷங்கள்கூட ஆகும். ஆகவே, ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்பு இருந்த நிலையிலேதான் அந்த நட்சத்திரங்களை இன்றும் நாம் காண்கிறோம். ஒளியானது அலை உருவத்தில் இருப்பதுதான் இதற்குக் காரணம்.

எத்தனையோ விதமான அலைகளை நாம் பார்க்கிறோம். ஒரு கயிற்றை நிலத்தில் எறிந்துவிட்டு, அதன் ஒரு நுனியைக் கையில் பிடித்து இப்படியும் அப்படியுமாக ஆட்டினால், கயிறு பாம்புபோல நெளிகிறதல்லவா ? அலைகள் உண்டாகும் விதம் இதுதான். நிலத்தைச் சங்கிலிகொண்டு அளப்பதைப் பார்த்திருப்பீர்கள். சங்கிலி நிலத்தின் ஓரத்தில் நீளமாய்க் கிடக்கும். அதன் இரண்டு நுனியையும் இறுகக் கெட்டியாய்ப் பிடித்து இழுப்பார்கள். சங்கிலி விறைப்பாய் இருக்கும் போது ஒருவர் தாம் பிடித்திருக்கும் நுனியை வெடுக்கென்று ஒரு முறை மேலும் கீழுமாக அசைப்பார். மாட்டின் திமில்போன்ற ஒரு வளைவு சங்கிலியில் உண்டாகும். அதன் வளைவு அவர் பிடித்த நுனியிலிருந்து மறு நுனிக்கு வெகு அவசரமாகப் பிரயாணம் செய்யும். தொடர்ந்து அவர் நுனியை மேலும் கீழுமாக அசைத்துக்கொண்டேயிருந்தால், அலைமேல் அலையாக வளைவுகள் மறு நுனிக்குச் சென்றுகொண்டேயிருக்கும். ஒரு திமிலும் அதை அடுத்துள்ள பள்ளமும் சேர்ந்தது ஓர் அலை. இதன் நீளத்தை **அலை நீளம்** என்பார்கள்.

ஒளியலைகள் ஏற்படுவதும் இப்படித்தான். ஆனால், இந்த அலைகள் ஏதாவது பதார்த்தத்தில் நிகழ்வனவல்ல. காந்த மின்சார சத்திகள் குறைந்தும் வளர்ந்தும் மாறிமாறித் தோன்றி மறையும் போது, எல்லாத் திசைகளிலும் சத்தி அலைகள் பரவுகின்றன. அவற்றைக் காந்த மின்சார அலைகள் என்று கூறலாம். வெப்பம், ஒளி, ரேடியோ யாவும் இந்த மாதிரிக் காந்த மின்சார அலைகளே. இவையெல்லாம் ஒரே காலத்தில் பாய்கின்றன. ஆனால், இவற்றில் ஒவ்வொன்றுக்கும் அலை நீளம் வெவ்வேறாகும். ரேடியோ அலைகள், சில அங்குல நீளத்திலும் உண்டு; பல நூற்றுக்கணக்கான அடி

நீளத்திலும் உண்டு. ஆனால், ஒளி அலைகளோ, ஓர் அங்குல நீளத்தில் ஒரு கோடி அடங்கும்.

வெவ்வேறு நீளமுள்ள அலைகளை உண்டாக்கும் விதமும் உணரும் விதமும் வெவ்வேறாகும். விளக்கு முதலியவை, ஒலியலைகளை உண்டாக்குகின்றன. கண் அந்த அலைகளை உணர்கிறது. ரேடியோ அலை பரப்பியை விளக்குக்கும், ரேடியோ சேடு என்று வழங்கும் அலைப்பொறியைக் கண்ணுக்கும் ஒப்பிடலாம்.

சூரிய வெளிச்சம் நேராக நுழையாத இடங்களிலும், வஸ்துக்களை நாம் எப்படிக் காண முடிகிறது? ஒளி அலைகள் தரை சுவர் முதலியவைமீது பட்டுச் சிதறுகின்றன. இப்படிச் சிதறிய அலைகள் எல்லாத் திசைகளிலும் பரவுவதால், மூலை முடுக்குகளிலும் வெளிச்சம் உண்டாகிறது. ஒரு பொருளின்மேல் படும் ஒளி அலைகள் சிதறி வந்து நம் கண்ணில் படும்போது அந்தப் பொருள் இருப்பதை நாம் உணர்கிறோம்.

இப்போது 'எதிரி விமானத்தை அறியும் வழி யாது?' என்பதைப் பார்ப்போம்: ஒளிக்கிரணங்களை ஆகாயத்தில் செலுத்துவதாக வைத்துக்கொள்ளுங்கள். வழியில் ஒரு வஸ்துவும் தட்டுப்படாவிட்டால், அந்தக் கிரணங்கள் திரும்பி வருவதில்லை. கண்ணாடி போன்ற பொருள்களிருந்தாலும் அவற்றை ஊடுருவிச் சென்றுவிடும். ஆனால், விமானம் அந்தக் கிரணங்களின் பாதையில் வந்தால், ஒளி அலைகள் சிதறுகின்றன. சில அலைகள் வந்த வழியே திரும்புகின்றன. இப்படித் திரும்பும் அலைகள் நம் கண்ணில் படும்போது, அந்த விமானத்தைக் கண்டு உணர்கிறோம். ஆனால், இந்த ஒளி அலைகள் மூடுபனியை ஊடுருவிச் செல்வதில்லை; மேகத்தில் பட்டாலும் சிதறிவிடுகின்றன. ஆகவே, விமானம் மேகத்துக்கும் மேலே இருந்தால், விளக்குகளைக்கொண்டு மேகத்தைத்தான் பார்க்க முடியும்; விமானம் மேகத்துக்குப் பின்னால் மறைந்துவிடுகிறது.

இந்த விஷயத்தில் ரேடியோ அலைகள் சாமர்த்தியசாலிகள். இரண்டு மூன்று அடி நீளமுள்ள ரேடியோ அலைகளைப் பரப்பினால், அவை மூடுபனி, மேகம் எல்லா-

வற்றையும் தாண்டிச் சென்றுவிடுகின்றன. அது போலவே, விமானம்போன்ற வஸ்துக்களையும் அந்த அலைகள் தாண்டிச் சென்றுவிடுவதாயிருந்தால், அவற்றால் நமக்குப் பலனில்லை. நல்ல வேளையாக, அவை அப்படிச் செய்வதில்லை. விமானம் போன்ற திடப்பொருள்கள்மீது பட்டால், அந்த ரேடியோ அலைகள் சிதறுகின்றன. அந்த அலைகள் ஜலத்தில் பட்டாலும் சிதறிவிடுகின்றன. ரேடியோ அலை பரப்பி ஒன்றைக் கொண்டு அலைகளால் ஆகாயத்தை நிரப்புகிறார்கள். அந்த அலைகளை உணர்வதற்கு **அலைப்பொறி** ஒன்றும் வைத்திருக்கிறார்கள். வானம் சுத்தமாயிருக்கும் வரை, அலைப்பொறி தூங்குகிறது. விமானம் ஒன்று தோன்றியவுடன், அதன்மீது பட்டுச் சிதறிய அலைகள் திரும்பி வந்து அலைப்பொறியை இயக்குகின்றன. ஆகவே, அலைப்பொறி இயங்கும் போதெல்லாம், விமானம் ஒன்று வானில் தோன்றிவிட்டது என்பதை உணர்ந்துகொள்ளலாம்.

விமானம் ஒன்று வருகிறது என்பது தெரிந்தால்மட்டும் போதாது. ‘அது எந்தத் திக்கிலிருந்து வருகிறது? எவ்வளவு உயரத்தில் வருகிறது?’ என்பனவெல்லாம் தெரிய வேண்டும். இவையும் சாத்தியமே.

அலைப்பொறிக்கு வரும் அலைகள் எந்தத் திசையிலிருந்து வருகின்றன என்பதை அறிவது சுலபம். வீடுகளில் வைத்திருக்கும் ரேடியோ செட்டுகளுக்கு, ஏரியல் என்ற ஒரு கம்பியை வீட்டின்மீது உயரக் கட்டி, அதை ரிசீவருடன் இணைப்பதை அறிவீர்கள். துணி காயவைக்கும் கொடிபோல அந்தக் கம்பியைக் கட்டாமல், சதுரமாக வளைத்து, அலைப் பொறியுடன் இணைத்தால், அதைக்கொண்டு, அலை பரப்பி இருக்கும் திக்கை அறிந்துகொள்ளலாம். அந்தச் சதுரத்தை ஒரு புறமாகச் சுற்றினால், ஒரு நிலையில் அலைப்பொறி பலமாகவும், ஒரு நிலையில் இயக்கமே இல்லாமலும், மற்ற நிலைகளில் இயக்கம் குறைவாகவும் இருக்கும். அலை வரும் திக்கைச் சதுரத்தின் தளம் நோக்கும்போதுதான், அலைப்பொறி பலமாக இயங்குகிறது. ஆகவே, ஒரு முறை இந்தச் சதுரத்தைச் சுற்றுவதால் அலை வரும் திக்கை அறிந்துகொள்ளலாம்.

இப்போது விமானம் இருக்கும் தூரத்தை அறியும் வழி என்னவென்று பார்ப்போம்: ஒரு மலைக்குச் சற்றுத் தூரத்தில் நின்று துப்பாக்கியை வெடித்தால், ஒலியலைகள் மலைப்பக்கம் சென்று மோதிப் பிறகு திரும்பி நம் காதுக்கு வருகின்றன. ஆதலால், துப்பாக்கி வெடிக்கும் சத்தமும் அதன் எதிரொலியும் அடுத்தடுத்து நிகழ்கின்றன. இந்த இரண்டு சத்தங்களுக்கும் இடையில் நிகழும் நேரத்தையும் ஒலியின் வேகத்தையும் வைத்துக்கொண்டு, நமக்கும் மலைக்குமுள்ள தூரத்தைக் கணக்கிடலாம். ஒலி ஒரு நொடிக்கு ஆயிரத்து நூறு அடி வீதம் செல்கிறது என்று அறிவோம். துப்பாக்கியின் சத்தத்துக்கும், இதன் எதிரொலிக்கும் இடையே நான்கு நொடி கழிந்ததானல், நமக்கும் மலைக்கும் இடையிலுள்ள தூரம் இரண்டாயிரத்து இருநூறடி என்று சொல்லிவிடலாம். இந்தத் தூரத்தை இரண்டு முறை (போக வர) ஒலி தாண்டுவதால், நான்கு நொடிகள் ஆகின்றன.

இதே வழியை, விமானத்தில் பட்டு வரும் ரேடியோ அலைகள் விஷயத்தில் கையாளலாம். ஆனல், இந்த அலைகள் நொடிக்கு இலட்சத்து எண்பதினுயிரம் மைல் தூரம் செல்கின்றன என்று முன்பு சொன்ளேம். இதனல், ரேடியோ அலைகளை அனுப்புவதற்கும் அவை திரும்பி வருவதற்கும் இடையிலுள்ள நேரம், ஒரு நொடியில் இலட்சத்தில் ஒரு பங்கு போல இருக்கும். இதைக்கொண்டு விமானத்தின் தூரத்தைக் கணக்கிட முடிகிறது.

எதிரி விமானம் நூறு மைலுக்கப்பால் இருக்கும் போதே, அது வரும் திசை, வேகம், தூரம் எல்லாவற்றையும் ரேடார் அறிவித்துவிடுகிறது. ருடால்ப் ஹெஸ் கடலைத் தாண்டி, ஸ்காத்துலந்தில் இறங்கும்வரை, அவர் விமானத்தை பிரிட்டிஷ் ரேடார் கவனித்துக்கொண்டேயிருந்தது.

நெடுந்தூரத்தில் நீர்மூழ்கிகள் இருந்தபோதிலும், அவை ரேடாரின் பார்வையிலிருந்து தப்புவதில்லை. கடலில் ஒரு சிறு மிதப்பு இருந்தாலும், ரேடார் அதைப்பற்றிக் கோள் சொல்லிவிடுகிறது.

இவற்ருேடு ரேடாரின் வேலை முடிந்துவிடுவதில்லை.

இந்தக் கருவியைக்கொண்டே, நாம் விமானங்களைக் குறிப்பிட்ட இடத்துக்கு அனுப்ப முடிகிறது. எதிரியின் வரவை அறிவதும், அவனைத் தாக்குவதற்கு ஆள் அனுப்புவதும் ரேடார். இதனால், ஜெர்மன் விமானப்படையின் பலம் ஒடுங்கியது ; ஜெர்மன் நீர் மூழ்கிகள் பயனற்றவை ஆயின ; பிரிட்டன்மீது படையெடுக்கும் எண்ணத்தையே ஹிட்லர் கைவிட வேண்டியதாயிற்று.

விமானப் போரிலும் கடற்போரிலும் புரட்சியை உண்டாக்கிய ரேடார், வருங்காலத்தில் பல துறைகளில் உபயோகிக்கப்படும். இதன் பார்வை சந்திர மண்டலம் வரை எட்டிவிடும் என்று சொல்கிறார்கள். மக்களின் சௌகரியங்களை அதிகப்படுத்திக்கொள்வதில், ரேடார் இனி எந்தெந்தவகையில் உபயோகிக்கப்படும் என்பதைப் பார்க்க வேண்டும்.

9. திருக்குறள்

[திருவாட்டி ஆர். இராசரத்தினம் அம்மையார், M.A., L.T.]

"பூவிற்குத் தாமரையே ; பொன்னுக்குச் சாம்புநதம் ;
ஆவிற் கருமுனியா ; யானைக் கமரரும்பல் ;
தேவிற் றிருமா லெனச்சிறந்த தென்பவே
பாவிற்கு வள்ளுவர்வெண் பா." —திருவள்ளுவமாலை, 36.

'திருக்குறள்' என்னும் சொல்லானது, மேன்மையுற்றதும் குறுகிய அடிகளால் ஆனதுமான ஒரு நூலைக் குறிக்கும். இந்த நூலின் அருமையை உணர்ந்தே நம் முன்னோர், **'நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி,'** என்றனர். தமிழ் மொழியானது, என்றும் நின்று நிலவுதற்குக் காரணமான பல சிறந்த நூல்களைப் பெற்றுள்ளது. எனினும், அவை அனைத்தினும் சிறந்து விளங்குபவை **கம்பராமாயணமும் திருக்குறளும்** என்பது சிலருடைய துணிபு. இக்கருத்தினை அடிப்படையாகக் கொண்டே தமிழுக்குக் **'கதி'** ஆவார் இருவரென்றும், **'கதி'** என்ற சொல்லிலேயே **'கம்பர், திருவள்ளுவர்'** என்ற இரு புலவர்களுடைய பெயர்களும் அடங்கியிருக்கின்றன என்றும் பெரியார் கூறுவர்.

இந்நூல் இவ்வளவு சிறப்புடன் போற்றப்படுவது, இது உலகுக்குரிய ஒரு நூலாய் இருப்பதனாலேயாகும். இந்நூலில் பல பகுதிகளில் **'உலகு'** என்ற சொல் காணப்படுகிறது. வள்ளுவப் பெருந்தகையாரின் பரந்த உள்ளமானது தமிழ் நாட்டளவிலும் பரத கண்டத்திலும் நில்லாது, விரிந்து சென்று உலகமனைத்திலும் பரவியிருக்கிறது. உள்ளமானது குறுகி நில்லாது பரந்து சென்றதாலேயே உலகுக்கொரு நீதி நூல் வகுக்க முடிந்தது.

அறிவு ஆற்றலோடு கூடிய அவருடைய அன்புள்ள நெஞ்சில் ஆண்டவனும் இடம் பெற்றான். உயர்ந்த ஆத்திக வாதியாகிய நாயனார், கடவுளைப் பெயரினாற்சுட்டாது, அவனுடைய குணங்களால் குறிக்கின்றார். **ஆதிபகவன், வாலறிவன், மலர் மிசை ஏகினான், தனக்குவமையில்லாதான், அறவாழி அந்தணன், இறைவன், வேண்டுதல்**

வேண்டாமையிலான், பொறிவாயில் ஐந்தவித்தான், எண்குணத்தான் என்ற குண நலன்களாலேயே அப்பற்றற்றவனைக் குறித்துள்ளார். இவ்வாறு அகப்பற்றும் புறப்பற்றும் நீக்கிச் செய்த காரணத்தினலேயே இந்நூலானது எக்காலத்தவராலும், எந்நாட்டவராலும் போற்றிப் பாராட்டிப் படிக்கப்பட்டு வருகிறது. இது உலக இயலை உள்ளவாறு எடுத்தியம்பும் ஒரு நூலாகும். உண்மையானது என்றும் நின்று நிலவுதல் திண்ணம். நூல் மட்டுமா போற்றப்படுகிறது? இந்நூல் எழுவதற்குக் காரணமாய் இருந்த தமிழ் மொழியே போற்றப்படுகிறது.

> ' வள்ளுவன் தன்னை உலகினுக் கேதந்து
> வான்புகழ் கொண்ட தமிழ்நாடு '

என்ற பாரதியார் வாக்கு இதனை வலியுறுத்துகின்றது. தமிழ் நாடு மட்டுமா? தமிழனும் உயர்வடைந்தான். இந்நூலின் அருமையை உணர்ந்த அந்நிய நாட்டுச் சான்ருேர், இதனைத் தம் மொழிகளில் பெயர்த்து எழுதலாயினர். அது மட்டுமா? மேலான பல நூல்களையுடையோர் என்று கூறப்படும் ஆங்கிலேயரும், இதன் பெருமையையுணர்ந்து, தம் வேத புத்தகத்திற்கு அடுத்த இடத்தை இந்நூலுக்குக் கொடுத்திருக்கின்றனர். ஆகையால், தமிழர்களாகிய நாம் இதனைத் **' தமிழ் வேதம் ', ' உத்தர வேதம் '** என்றெல்லாம் சொல்லிக்கொள்வதைவிட அந்நியநாட்டினர் இந்நூலுக்குக் காட்டிய மரியாதை மிகவும் போற்றற்குரியது. எங்கே வைக்கப்பட்டாலும் அறிவானது ஒளி வீசிப் பிரகாசிக்கும் அல்லவா? இத்தகைய கிடைத்தற்கரிய பொக்கிஷம் கிடைக்கப்பெற்றும் நாம் இதனைப் பயன்படுத்தாமல் இருக்கிருேம். ஏனென்ருல், நம் நாட்டவருள் பெரும்பாலாருக்குக் கல்வியறிவு இல்லை. படித்துத் தெரிந்த சிலரும், ' இது நம்முடைய நூலாகையால் எப்பொழுதாவது படித்துக்கொள்ளலாம்,' என்று அசட்டையாய் இருக்கிருேம். **' முற்றத்து முல்லைக்கு மணமில்லை,'** என்பது போல, ' நம் தமிழ் நூலில் அரிய கருத்திருக்கப் போகிறதா!' என்ற அசட்டையும் சிலருக்கு உண்டு. ஆகையால், திருக்குறளைப் படிப்பதற்கு உரியவர் தமிழ்ப்

பண்டிதரேயாவர் என்னும் எண்ணமும் இருந்தது. ஆனால், அவ்வெண்ணமானது இப்பொழுது மாறி வருகிறது.

வள்ளுவரை அறிதல் மட்டும் போதாது. அவருடைய கருத்தினைச் சிந்தித்து அவர் செலுத்துகின்ற நெறியில் சென்றால், நம் வாழ்க்கையானது நிறைவுற்றதாவதுடன் பயனுடையதாகவும் அமையும். வள்ளுவனார் மிக எளிய வாக்கில் நீதி போதிக்கின்றார். இருந்த போதிலும், அவற்றை-யெல்லாம் நன்றாக அறிவதற்குத் தக்க திறவு கோல்களைப் போன்ற சிறந்த உரைகளும் எழுதப்பட்டிருக்கின்றன. அவைகளுள் மிகவும் விரும்பிப் படிக்கப்படுவது **பரிமே-லழகர் உரையாகும்.** முழுநூலையும் வாங்கிப் படிப்பதற்கு வசதியற்றவர்களுக்கு உதவுவதற்காகவே சிறு சிறு பகுதி-களாகவும் இது அச்சிடப்பட்டுள்ளது. சில ஆன்றோர்கள் **'திருக்குறள் நீதிக்கதைகள், திருக்குறள் குமரேச வெண்பா'** முதலியவற்றையும் எழுதி உதவியுள்ளார்கள்.

நம் நாட்டு மக்கள் இந்நூலின் பெருமையை நன்றாக உணர வேண்டுமென்று பலரும் பல துறைகளில் ஈடுபட்-டுள்ளனர். பள்ளிக்கூடங்களிலும் திருக்குறளானது சிறு குழந்தைகள் முதல் பெரியோர் வரையில் கற்பிக்கப்பட்டு வருகிறது. இனி வருங்காலத்தில் படித்து அறிந்த ஒவ்-வொருவரும் திருக்குறள் ஓதி உணர்ந்திருப்பார் என்பது திண்ணம். உலக வாழ்க்கையின் எத்துறையில் ஈடுபட வேண்டுமாயினும், திருக்குறளைப் பற்றிய அறிவானது இன்றியமையாததாகும். சிறப்பாக இல்லறத் துறையிலே ஈடு-பட விரும்புபவர் யாவரும் திருக்குறளை ஓதியுணர்தல் வேண்-டும் என்பது திருவள்ளுவருடைய கருத்தாகும். இச்சீரிய நோக்கத்துடனேயே நூலின் பெரும்பகுதியில் இல்லறத்-தாரின் இயல்புகளையும் கடமைகளையும் விரிவாகவும் தெளி-வாகவும் விளக்கியுள்ளார். ஆகையால், மனிதர் மனிதராக வாழ வேண்டுமானால், திருக்குறளைப் படித்து, அதற்கேற்ப ஒழுகுதல் இன்றியமையாததாகும். பெருநாவலராகிய இவர், உலக மக்களின் இயல்புகளை நன்றாக அறிந்திருந்ததோடு அவர்களுடைய உள்ளக்கிடக்கையைப் படம் பிடித்துக் காட்டுவதிலும் தலை சிறந்தவராவர். ஒரு நாட்டிலுள்ள மக்-

களுள் சிறந்தவன் அரசனுவன். அவனது கடமையைப் பற்றிக் கூறுங்கால்,

> “ கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
> உடையானும் வேந்தர்க் கொளி.”

என்றியம்பினர். வறுமையினுல் பொருள் இல்லை என்று இரப்பவருக்குத் தன்னிடத்திலிருப்பதைக் கொடுப்பதும், தக்காருக்கு அருளோடு உபசாரஞ் செய்வதும், நீதி வழுவாமல் செங்கோல் செலுத்துவதும், தன் குடி மக்களுக்குத் தீங்கு நேராமல் பாதுகாப்பளிப்பதும் அரசனுடைய சிறந்த கடமையாகும் என்கிருர். இவ்வாறு ஆராய்ச்சி செய்து திறம்படக் கூறியதிலிருந்து இவர் ஒரு சிறந்த ராஜதந்திரி என்பது விளங்குகிறது. அரசருக்குரிய நீதியைக் கூற வல்ல இவர், இரந்து வாழ்வதையே தொழிலாகக் கொண்டுள்ள பிச்சைக்காரர்களுக்கும், அவர்களுடைய தர்மம் இப்படிப்பட்டது என்று கூறுவதைக் காண வியப்புண்டாகிறது. அதையும் சற்றுப் பார்ப்போம்:

> “ இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்
> உள்ளுள் உவப்ப துடைத்து.”

என்ற வாக்கால், தம்மிடத்தில் ஒன்றுமில்லை என்று கூறி நம்பால் யாசிப்பவரிடம் ‘பொருள் தரமாட்டேன்,’ என்று மறுத்துரைக்காமல் தருவதோடு, அவருடைய தொழிலின் இழிவு தோன்ற இடித்துரைக்காமலுமிருந்தால், வசைக்குரிய பிச்சை எடுக்குந்தொழிலும் மகிழ்ச்சிக்கு உரியதாகும். ‘ஈயென இரத்தல் இழிவுடையது,’ என்று உள்ளுணர்வு கூறினும், உடலை வருத்தி முயற்சி செய்தற்கு விரும்பாதவர் யாசிக்க முற்படுகின்றனர்; அவ்வாறு யாசித்துப் பொருள் கிடைக்கப் பெற்ருர், அகம் மிகவும் மகிழப்பெற்றுத் திருத்தி அடைவர். அப்பொழுது அவர்களுடைய முகம் அழகு பெற்றுப் பிரகாசமடையுமென்று ஒரு சிறந்த ஓவியத்தைத் தீட்டிக் காட்டுகின்ருர் நம் முதற்பாவலர். மேலும்,

> “ அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை ; அஃதும்
> பிறன்பழிப்ப தில்லாயின் நன்று.”

என்று கூறியதால், ‘அறம்’ என்ற பெயருக்கு உரியது இல்லறமேயாகும். அந்த இல்லறமும் பிறரால் போற்றக்

கூடிய நிலையிலிருந்து, பகைவராலும் பழிக்கப்படாததாயின், உண்மையான அறமாகும் என்பது விளங்குகிறது. இவ்வாறு இல்லறத்தைச் சிறப்பித்த புலவர், துறவறத்தைப் பற்றி யாது கூறுகிருர் என்பதைப் பார்ப்போம் :

"அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை ; விடல்வேண்டும்
வேண்டிய வெல்லாம் ஒருங்கு."

யாவரும் போற்றும்படி இல்வாழ்வில் ஈடுபட வேண்டுமென்று பணித்த தெய்வப் புலவரே, யாவற்றையும் துறந்துவிட வேண்டுமென்றுங் கூறினர் ; அதாவது, ஐம்பொறிகளால் நுகரப்படும் இன்பங்கள், அவ்வின்பங்களை ஊட்ட வல்ல பொருள்கள் முதலியவற்றை நீக்குவதுதான் உண்மையான துறவு என்ருர்.

நம்முடைய **பொய்யில் புலவர்** தாயுள்ளமும், தந்தையுள்ளமும், நட்பு உள்ளமும், ஒழுக்க உள்ளமும், இரக்க உள்ளமும் ஒருங்கே அமையப் பெற்றவராவர். இவரது நூலை ஆழ்ந்து படித்தால், நாம் உயர்வடைவது திண்ணம். படிப்பது மட்டுமன்றி, படித்தவாறு ஒழுகுதலும் வேண்டும். அதற்காகப் பல கழகங்களை ஏற்படுத்தி, முறையாகப் பாடஞ்சொல்லவோ, அல்லது சொற்பொழிவுகள் நிகழ்த்தவோ வசதியளித்தல் நம் கடமையாகும். 1330 குறள்களையும் கல்லாவிடினும், அதிகாரத்துக்கு ஒன்று வீதம் .கற்றலும் போதுமானது. அவ்வாறு கூறப்படும் 133 குறட்பாக்களின் கருத்தறிந்து ஒழுகினல், நாம் நல்வாழ்வு எய்துதல் திண்ணம்.

"பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ ? பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ ?—நூலிற்
பரித்தவுரை யெல்லாம் பரிமே லழகன்
தெரித்தவுரை யாமோ ? தெளி."

10. கொதிநீர்ப் பீச்சுக்கள், ஊற்றுக்கள்

[திரு. G. R. தாமோதரனூர், B.Sc., Elec., B.Sc., Mech. (Durham) A.M.I.E.E. (London), M. P.]

யுனேட்டெட் ஸ்டேட்ஸில் இயற்கை அன்னே விளே-யாடுகிருள். பல்வகை இயற்கைக் காட்சிகள் காணப்படு-கின்றன. கண்களுக்கு இனிமையானவை, அறிவை வளர்ப்-பவை, வியப்பை ஊட்டுபவை ஆகிய பல காட்சிகளேக் காணலாம். **கொலராடோ** ஆற்றின் மாபெருங்குடைவு, கல், மரங்கள், **நயகாரா** அருவி முதலியவை ஒரு சில உதார-ணங்களாகும். அமெரிக்காவில் நான் கண்ட காட்சிகளுள் மிக்க அற்புதமானவையாயும், அச்சத்தை உண்டுபண்ணு-பவையாயும் இருப்பன **கொதிநீர்ப் பீச்சுக்கள்.** இவை நிலத்திலிருந்து கொதிக்கும் நீர் ஊற்றுக்களாய்க் கிளம்பி வருகின்றன.

நம் நாட்டிலும் இத்தகைய ஊற்றுக்கள் இருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிருேம். இமயமலே மிக்க உயரத்தில் உள்ள **கைலாசம்** எனப்படும் **கேதாரிநாத்து, பதிரிநாத்து** என்ற கோயில்களுக்குச் சென்று வந்த யாத்திரிகர்கள், தாங்கள் அவைகளேக் கண்டதாக விவரிக்கிருர்கள். எங்கும் பனி உறைந்து குளிர் அதிகமாய் இருக்கும் இமயமலேச் சாரலில் கொதிநீர் ஊற்றுக்கள் தோன்றுவது வியப்புத்தான். கேதாரிநாத்திற்குப் போகும் வழியில் ஓர் ஏரிக்கு அருகில் இத்தகைய ஊற்று ஒன்றிருக்கிறதாம். அது குளிரையும் பொருட்படுத்தாமல் தன்னே நாடிவரும் பத்தர்களுக்கு இறை-வன் எங்கும் குளிர்ச்சியாய் இருக்கும் இடத்தில் வெந்நீரை அளித்துத் தேற்றுவது போலக் காணப்படுகிறது. இமய மலேயிலுள்ள கொதிநீர் ஊற்றைப் பார்க்கும் வாய்ப்பு ஒரு சிலருக்குத்தான் கிடைக்கும். இறைவன் உறையும் இடத்தை நாடித் தங்கள் உயிரையும் துச்சமாக எண்ணிச் செல்லும் துறவிகளாலேதான் கேதாரிநாத்திற்குப் போய் வருவது சாத்தியமாகும்.

இத்தகைய ஊற்றுக்களே எளிதாகப் பார்க்கும் வாய்ப்பு அமெரிக்காவில் எனக்குக் கிடைத்தது. யுனேட்டெட் ஸ்டேட்-

ஸின் வடமேற்கில் 'எல்லோ ஸ்டோன் நேஷனல் பார்க்கு' (Yellow Stone National Park) என்ற பகுதியில் இவை மிகுதியாய் உள்ளன. இவ்விடத்தின் பரப்பு, சுமார் 3500 மைல் இருக்கிறது. நடுவில் ஒரு பெரிய பீடபூமி, கடல் மட்டத்திற்கு 8000 அடிக்கு மேலிருக்கிறது. சுற்றிலும் மலைத்தொடர்கள் இருக்கின்றன. நேஷனல் பார்க்கு எல்லைக்குள் துப்பாக்கி முதலியவை எடுத்துச் சென்று யாரும் வேட்டையாடக் கூடாது என்ற நிபந்தனை இருக்கிறது. துப்பாக்கி வைத்திருப்பவர்கள் எல்லை வாயிலில் ஒப்படைத்துவிட்டுத்தான் உள்ளே நுழைய வேண்டும். இந்தக் கட்டுப்பாட்டினால் அக்காட்டில் வசிக்கும் உயிர்கள், மனிதனுடைய வேட்டை விளையாட்டிற்கு இரையாகாமல், இன்பமாக வாழ்கின்றன. பல ஆண்டுகளாக இக்கட்டுப்பாடு அனுசரிக்கப்பட்டு வருவதால், அங்குள்ள மிருகங்கள் இதனை உணர்ந்துகொண்டு மனிதர்களையும் மோட்டார்கார்களையும் கண்டு அஞ்சி ஓடாமல், உல்லாசமாக நடமாடுகின்றன. காரில் செல்லும்போது அங்கு வாழும் பல வகையான மிருகங்களின் கூட்டங்களைப் பார்க்கலாம். மான்களில் பல இனங்கள் சாலைக்கு அருகே புல் வெளிகளில் குதித்துக்குதித்து விளையாடிக்கொண்டே மேய்ந்துகொண்டிருப்பதைப் பார்த்தேன். அவைகளின் கம்பீரமான பார்வை அக்காட்டிற்குத் தாங்களே அதிகாரிகள் என்பதை அறிவிப்பது போன்றிருந்தது. காட்டு எருமைகள், ஆடுகள், கரடிகள் ஏராளமாயிருந்தன. மிருகங்கள் வேட்டையால் சேதமுறாமல், மிகவும் அக்கறையுடன் கண்காணிக்கப்படும் வனங்களில் 'எல்லோ ஸ்டோன் நேஷனல் பார்க்கு' மிகச் சிறந்ததாகக் கருதப்படுகிறது. நம் நாட்டிலும் நம் அரசாங்கத்தார், வனங்களும் வனங்களில் வாழும் அரிய உயிர்களும் அழிவுறாமலிருக்கப் பல விதிகளை விதிக்க வேண்டுவது அவசியமாய் இருக்கிறது.

'எல்லோ ஸ்டோன் பார்க்கு' அற்புதமான ஒரு சிறு உலகம் என்று கூறப்படுகிறது. இங்குக் காணும் இயற்கை அற்புதங்களைப் போன்றவற்றை வேறெங்கும் காண முடியாது என்பர். அழகான ஏரிகள், ஒளிரும் ஆறுகள், ஓடைகள், கண்ணைக் கவரும் பல அருவிகள் (நீர்வீழ்ச்சிகள்),

கொதிநீர்ப் பீச்சுக்கள் (Geyser), ஊற்றுக்கள் (Hot springs) முதலியவை இங்கு நிறைந்துள்ளன.

எல்லாவற்றிலும் மிக்க வியப்பைத் தரும் காட்சி எவை எனில், கொதிநீர்ப் பீச்சுக்களும், ஊற்றுக்களுமாகும். கொதிநீர்ப் பீச்சுக்களுக்கும் கொதிநீர் ஊற்றுக்களுக்கும் வேற்றுமை உண்டு. பீச்சுக்களில் (Geysers) குறித்த இடை நேரங்களில் கொதிநீர் பீறிக்கொண்டு மேலே எழுகிறது. ஊற்றுக்களில் நீர் கொதித்துக்கொண்டு சலசலவென்று ஊறுகிறது. பார்க்கில் உயிருடனுள்ள பீச்சுக்கள் 200க்கு மேலிருக்குமென்று கணக்கிடப்பட்டிருக்கின்றன. உயிரற்று மங்கிப்போன பீச்சுக்கள் சில இருக்கின்றன. இவைகளில் இப்பொழுது கொதிநீர் பீச்சப்படுவதில்லை. கோப்பைகள் போன்ற திட்டுக்கள் மட்டும் எஞ்சி இருக்கின்றன.

பீச்சுக்களில் பல வகையைக் கண்டேன். நீராவியும் கொதிநீரும் வெளி வரும் அளவிலும், மேலெழும் உயரத்திலும், பீச்சு நீடிப்பு நேரத்திலும் வேறுபடுகின்றன. சில பீச்சுக்களில் 5 அல்லது 6 அடி உயரத்திற்குக் கொதிநீர் மேலெழுகின்றது. எல்லாவற்றிலும் பெரியதொரு பீச்சில் சுமார் 200 அடி உயரத்திற்குக் கொதிநீர் எழுகிறது. ஒவ்வொரு பீச்சும் 2 அல்லது 3 மணி நேரம் நீடிக்கிறது. சில பீச்சுக்கள் சில நிமிடங்களும், சில விநாடிகளுமே நீடிக்கின்றன. நான் பார்த்த வரையில் மிகப் பிரபலமானது 'ஓல்டு பெயித்புல்' (Old Faithful) எனப்படும் பீச்சு. இப்பெயரின் பொருள் இப்பீச்சின் பண்பாய் அமைந்திருக்கின்றமையால், இதற்கு இப்பெயர் வழங்கப்பட்டிருக்கிறது; நீண்டகாலமாகத் தவறாமல் ஒழுங்காகக் குறித்த காலங்களில் நன்றியுடன் பீச்சிக்கொண்டிருப்பதால், 'பழமையான நன்றியுள்ள பீச்சு' என்று வழங்கப்படுகிறது. இங்குச் சென்றபோது பீச்சின் வாய் அமைதியுடன் காணப்பட்டது. அதன் வாய் ஒரு சிறிய தடாகமாய் அமைந்துள்ளது. அதில் நீர் சிறிதும் கலங்காமல் தெளிவுடன் தென்பட்டது. பீச்சுத் தோன்றி 35 நிமிடங்கள் ஆயிற்றென்று அங்கிருந்தவர்கள் கூறினர்கள். அடுத்த முறை தோன்றுவதற்கு இன்னும் அரை மணி நேரமாகுமென்பதை அறிந்தேன். ஏனெனில்,

இப்பீச்சு 65 நிமிடங்களுக்கு ஒரு முறை தவறாமல் தோன்றுகிறது. இதனைப் பார்க்க வேண்டுமென்று ஆவலுற்று இங்கு அரை மணி நேரம் காத்திருந்தேன். பீச்சுக் கிளம்பும் நேரம் நெருங்கக் குமுறல் சத்தம் அதிகரித்து, வெடிச் சத்தத்துடன் கொதிநீர் ஆவியுடன் மேலெழுந்தது. என் மனம் திடுக்கிட்டது. அதன் தோற்றம் கொடிய அரக்கன் தண்ணீர் ரூபமாக ஆவேசத்துடன் நிலத்திலிருந்து வெளி வருவது போன்றிருந்தது. என்னே இயற்கையின் ஆற்றல்! தன்னைக் காட்டிலும் மிக்கோர் யாருமில்லை என்பதைப் பெருமையுடன் நிரூபிப்பது போல அப்பீச்சு விளங்கியது. பீச்சு நான்கு நிமிடங்கள் வரைதான் நீடித்தது; பிறகு அடங்கிவிட்டது. சுமார் 150 அடி உயரத்திற்கு வெண்மையான நீர் ஓர் உருவம் போன்று காட்சி அளித்தது. நீரின் கொதிப்பு 200°F இருக்கும். ஒரு பீச்சில் சுமார் 10000 காலன் நீர் வெளி வருகிறதென்று கணக்கிட்டிருக்கிறார்கள். பீச்சு அடங்கியவுடன் தடாகம் போன்ற பீச்சின் வாய் தெளிவு பெற ஆரம்பித்தது. பீச்சின் நீரில் **சிலிகா** (silica) என்ற மணலும், அதனுடன் சம்பந்தப்பட்ட பொருள்களும் கலந்திருக்கின்றன. ஒவ்வொரு பீச்சிலும் சிறிதளவு ஸிலிகா வெளி வந்து, வாயில் தங்கிவிடுகிறது. நாளடைவில் இவ்வாறு தங்கிய ஸிலிகா ஒரு திட்டுப்போல அமைந்துவிடுகிறது. இத்திட்டுக்கள் ஒவ்வொரு பீச்சிலும் பல வகையான உருவங்களைப் பெற்றிருக்கின்றன; அந்த அந்த உருவத்திற்கேற்றவாறு அந்தந்தப் பீச்சிற்குப் பெயரிடப்பட்டிருக்கிறது. தேன் கூட்டினைப் போன்ற திட்டினை உடைய பீச்சுத் **தேன்கூட்டுப் பீச்சு** (Beehive geyser) என்றும், கோட்டையைப் போன்றது **கோட்டைப் பீச்சு** (Castle geyser) என்றும் வழங்கப்படுகின்றன.

பீச்சுக்களின் **திட்டுக்களுடைய வாய்** (craters) பல நிறங்களில் மிளிர்கின்றது. ஒரு பீச்சின் திட்டு வானவில்லைப் போன்று பல நிறங்களில் ஒளிர்ந்தது. அந்நிறங்கள் பார்ப்பதற்கு மிகவும் அழகாய் இருந்தன. சில திட்டுக்கள் உயரமாகவும் சில அகலமாய்க் கோப்பைகள் போன்றும் உள்ளன. பீச்சுக்களைப் பார்த்த வண்ணம்

அவைகள் எவ்வாறு உண்டாகின்றன என்பதைச் சிந்தித்தேன். ஆறுகளுக்கும் ஏரிகளுக்கும் அருகில் பீச்சுக்கள் தோன்றுகின்றன. ஆற்றின் குளிர்ந்த நீரும் ஏரியின் நீரும் நிலத்தினுள் சிறு சிறு துவாரங்களின் வழியாகக் கீழே இறங்குகின்றன. நிலத்தின் மேல் பக்கத்திலிருந்து கீழே ஆழமாக ஒரு வாய்க்கால் உண்டாகிறது. ஏரியிலிருந்தும் ஆற்றிலிருந்தும் வடியும் தண்ணீர் இந்த வாய்க்கால் வழியாகக் கீழே இறங்குகிறது. இந்த வாய்க்கால் மிக்க ஆழத்திலுள்ள கற்பாறை வரையில் செல்லும். அங்குக் கற்பாறை மிகவும் சூடாய் இருக்கும். வாய்க்காலின் வழியாக வடியும் தண்ணீர் சூடான கற்பாறையை அணுகியதும் சூடாக்கப்படுகிறது. முதலில் அடிப்பாகந்தான் சூடாக்கப்படுமேயன்றி மேற்பாகம் சூடாக்கப்படாது. கீழ்ப் பாகத்திலுள்ள நீர் சூடு அதிகரிக்க அதிகரிக்கக் கொதிக்க ஆரம்பிக்கும். கொதிக்கக் கொதிக்க ஆவி தோன்றும். இந்த நீர் ஆவி வாய்க்காலின் மேல் பாகத்திலுள்ள நீரை மேலே உந்தும். இவ்வாறு உந்தப்பட்டு வாய்க்காலின் தண்ணீர் தரை மட்டத்திற்கு மேலே வழியும். மேல் பாகத்திலுள்ள நீர் வழிய வழிய, ஆழமான வாய்க்காலிலுள்ள நீரின் பாரம் குறையும். பாரம் குறையவே, கீழ்ப்பாகத்திலுள்ள நீர் இலகுவில் ஆவியாய் மாறும். ஆவி பெருகப் பெருக, வெடித்து மேலெழுகின்றது. வாய்க்காலின் நீரும் ஆவியும் இவ்வாறு வெளியே தள்ளப்படுகின்றன. அமுத்தத்திற்கு ஏற்றவாறு பீச்சும் உயரமாக மேலெழும். வாய்க்காலின் நீர் வெளியே வழிந்தவுடன் ஏரியிலிருந்து வடியும் தண்ணீர் அவ்வாய்க்காலை நிரப்பும். அது மீண்டும் சூடாகி வெளியே பீச்சும். இவ்வாறு முறையே வாய்க்காலின் ஆழத்திற்கு ஏற்றவாறும் அமுக்கத்திற்கேற்றவாறும் வேறுபட்ட இடைக்காலங்களில் கொதிநீர்ப் பீச்சுக்கள் தோன்றும். கொதிநீர்ப் பீச்சிற்கும் எரிமலைக்கும் வேற்றுமை உண்டு. எரிமலையில் கற்களும் உருகி மேலே எறியப்படுகின்றன. ஆனால், கொதிநீர்ப் பீச்சில் பல உப்புக்கள் கலந்த நீர் மட்டும் வெளி வருகின்றது. தோன்றும் முறைகளில் இரண்டிற்கும் வேற்றுமை இல்லை.

எல்லோ ஸ்டோன் பார்க்கில் கொதிநீர் ஊற்றுக்களை

ஆயிரக்கணக்கில் எங்கும் காணலாம். அவை சுமார் 4000 இருக்குமென்பது கூறப்படுகிறது. அந்த ஊற்றிலிருந்து வெளி வரும் நீரின் கொதிநிலை 200°F இருக்கும். சில ஊற்றுக்களில் நீர் பொங்குகின்றது. சிலவற்றில் ஆவி குமிழிகளாய்த் தப்பி வெளி வருவதைப் பார்க்கலாம். அவைகளில் மிகப் பிரபலமானவை **'மாபேரூற்றுக்கள்'** (Mammoth Art Springs) எனப்படுகின்றன. அவற்றில் சுண்ணும்பு கலந்த நீர் வெளி வருகிறது. வெளியே வந்த சுண்ணும்பு ஒரு மலைபோலக் குவிந்துவிட்டது. அம்மலை அழகாகப் படிப்படியாக மாடிகளைப் போல அமைந்திருக்கிறது. உயரம் 300 அடி இருக்கிறது. மாடிகள் வெவ்வேறு நிறங்களில் காணப்படுகின்றன. நீரில் வளர்ந்திருக்கின்ற **நுண்ணிய தாவரங்கள்** (Algae) காரணமாகத்தான் இந்நிறங்கள் உண்டாயிருக்கின்றன. வெந்நீரில் நுண்ணிய தாவரங்கள் வளர்ந்திருப்பது விந்தையினும் விந்தையாய் இருக்கிறது.

இம்மாபெருங்கொதிநீர் ஊற்றுக்களுக்குப் போகும் வழியில் ஆச்சரியமான ஒரு சம்பவம் நிகழ்ந்தது: அந்தி நேரத்தில், மாபெருங்கொதிநீர் ஊற்றுக்களுக்கருகில் உள்ள ஹோட்டலில் இரவு தங்கிவிடலாமென நினைத்தேன். கார் விரைவாகச் செலுத்தப்பட்டது. சாலை ஓர் ஏரியின் கரையில் அமைந்திருந்தது. ஏரிக்கு அப்பால் ஒரு மலை தென்பட்டது. வானம் மப்பும் மந்தாரமுமாய் இருந்தது. கார்மேகங்கள் அம்மலையின் சிகரத்தைத் தாக்கின. பளிச்சுப் பளிச்சென்று ஒளி தோன்றியது. அது மின்னலின் ஒளி என்பது புலனாயிற்று. அம்மகத்தான ஒளி என்மனத்தைப் பரவசப்படுத்திற்று. அதனைப் பார்க்கக் காரை நிறுத்தி, காரிலிருந்து இறங்கினேன். ஒளி நீல நிறமாய் இருந்தது. மின்னல் காரணமாகத் தீப்பிடித்துக்கொண்டுவிட்டது என்று முதலில் எண்ணினேன். அது தவறு என்பதைப் பின்னர் அறிந்தேன். மலையிலிருந்து மங்கலான நீலநிற ஒளி மெதுவாய் இறங்கி ஏரியைச் சுற்றிலுமுள்ள சமவெளிக்கு வந்தது. அவ்வொளிக்குமேல் ஒரு மேகம் தாழ்வாகக் கூடவே தவழ்ந்து வந்தது. ஏரியின் கோடியிலுள்ள சதுப்பான நிலத்திற்கு அவ்வொளி வந்தது. அங்கு அமர்ந்திருந்த நீர்ப்பறவைகள்

திடுக்கென்று சிறகுகளை அடித்துக்கொண்டு கிளம்பின. நான் நின்றுகொண்டிருந்த பக்கம் அவ்வொளி வந்தது. அச்சமுற்றேன். என் அருகிலிருந்த நண்பரும், கார் ஓட்டியும் இத்தகைய காட்சிகள் இப்பகுதியில் சர்வசாதாரணமென்று கூறித் தேற்றினர்கள். இவ்வாறு கூறப்படாமலிருந்தால், நான் பயந்து தப்பி ஓட முயன்றிருப்பேன். ஒளி சில கெஜதூரத்துக்கு அருகில் வந்ததும் ஒரு வித வாடை வீசிற்று. அவ்வாடை ஸோன் (Zone) எனப்படும். அது ஒரு வகைப் பிராணவாயுவினைப் போன்றிருந்தது. அந்த வாடையை மோந்ததும் அது நில மின்சாரத்தின் திருவிளையாடல் என்று தைரியம் செய்துகொண்டேன். அந்நில மின்சாரம் தாழ்வாகப் பரந்து வந்த மேகத்தினுல் கட்டுப்படுத்தப்படுகிறதென்பதை உணர்ந்தேன். அந்த ஒளி எங்கெல்லாம் படர்ந்ததோ, அங்கெல்லாம் பிரகாசமாய் விளங்கின. புல்லும், செடியும் ஒளி பட்டவுடன் பிரகாசித்தன. ஒளி என் காரையும் என்னையும் சிறிது நேரம் சூழ்ந்துகொண்டது. ஒரு கல்லை எறிந்தேன். அக்கல் எங்கெல்லாம் உராய்ந்ததோ, அங்கெல்லாம் பளிச்சுப்பளிச்சென்று ஒளி வீசிற்று. அந்த ஒளி மெதுவாகப் பள்ளத்தாக்கைத் தாண்டி எதிரிலுள்ள ஒரு மலைச் சிகரத்திற்குச் சென்று மறைந்தது. அப்பகுதியில் அடிக்கடி கார்மேகங்களால் மின்னொளி தோன்றுவதால், அச்சிகரத்திற்கு **மின் சிகரம்** என்று பெயரிடப்பட்டிருக்கிறது. காருக்குள் ஏறி **ஹாரனைத்** (Horn) தொட்டேன். **மின் அதிர்ச்சி** உண்டாயிற்று. தரையுடன் தொடர்பில்லாமல் ரப்பர்ச் சக்கரங்களின்மீது கார் நின்றுகொண்டிருந்ததால், ஒளி படர்ந்தபோது எதிர் மின்சாரத்தைப் பெற்றுவிட்டது. நான் தரையின்மீது நின்றுகொண்டிருந்ததால், என் உடல் நேர் மின்சாரத்தைப் பெற்றுவிட்டது. இது காரணமாகத்தான் நான் ஒலியிடும் கருவியைத் (Horn) தொட்ட போது மின் அதிர்ச்சி உண்டாயிற்று.

மாபெருங்கொதிநீர் ஊற்றுக்களின் (Mammoth Hot Springs) மேல் மாடியில் செடி கொடிகள் நிறைந்து அழகாய் அமைந்திருக்கின்றன. பச்சைப் புல் படர்ந்து நிழலுடன்

குளிர்ச்சியாய் இருக்கிறது. அதன் மத்தியில் நீர் நிறைந்த இடமொன்று இருக்கிறது. அங்குத் தங்கி இளைப்பாறி, இன்னிசைபாடி மகிழ்ச்சியுடன் காலம்கழிக்க அந்தச் சோலை போன்ற இடம், பறவைகளை அழைக்கின்றது. பறவைகள் அத்தடாகத்திலுள்ள தண்ணீரில் குளித்துக் குடிக்கின்றன. தடாகத்தின் நீர்ப்பரப்பில் குமிழிகள் இடைவிடாமல் தோன்றிக்கொண்டே இருக்கின்றன. தடாகத்தில் அடியிலிருந்து கரியமிலவாயு மேலெழுந்து வருவதால், குமிழிகள் தோன்றுகின்றன. காற்று அடிக்காமல் அமைதியாய் உள்ள நாளில் இத்தடாகம் பறவைகளைக் கொல்லும் நச்சுத் தடாகமாய் அமைகிறது. ஏனெனில், காற்றோட்டம் இல்லாமையால், தடாகத்திலிருந்து மேலெழுந்த கரியமிலவாயு ப்றவைகளைக் கொல்லுகிறது. காற்று நன்றாக வீசும் நாட்களில், அக்கரியமிலவாயு காற்றினால் அடித்துக்கொண்டு செல்லப்படுவதால், அந்நாட்களில் பறவைகள் சாவதில்லை. இத்தடாகத்திற்கு **நச்சுப் பொய்கை** (Poison pool) என்பதே பெயர். முதலில் இத்தடாகம் எனக்கு அறிமுகப்படுத்தப்பட்டபோது எனக்கு வியப்புத் தோன்றியது. ‘மகாபாரதத்தில் கூறப்படும் நச்சுப் பொய்கை இதுதானோ !’ என்று ஐயுற்றேன். **பீமன்** முதலானவர்கள் இங்கு வந்தா இந்நீரைக் குடித்தார்கள் ?

11. புறநானூறும் மக்கள் சமுதாயமும்

[திருவாட்டி இராசாம்பாள் கோவிந்தராசனூர்,
M.A., L.T., Praveen]

'முதலில் தோன்றிய மொழி எது? வடமொழியா, தமிழ் மொழியா?' என்பது புலவர் ஒருவர் எழுப்பிய வினு. 'முதலில் தோன்றிய திசை எது? வடதிசையா, தென்திசையா?' என்பது கூறப்பட்ட விடை. இதை உளத்திற்கொண்டே 'வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி அதற்கிணையாத் தொடர்புடைய தென்மொழியை உலகமெலாம் தொழுதேத்தும் குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப்பாகர்,' என்று சமரசம் பேசினூர் அறிஞர் ஒருவர். உலகில் வழங்கும் மொழிகளுள் இன்ன காலத்தில் தோன்றியவை என்று கூற முடியாத கால வரையறையற்றவை சில உண்டு. அச்சிலவற்றுள் ஒன்ருய், உயர்தனிச் செம்மொழி என்னும் பெற்றியதாய் வழங்குவது நம் தமிழ் மொழியே.

தமிழ் மொழியில் வழங்கும் நூல்களுள் மிக்க தொன்மை வாய்ந்தது **தொல்காப்பியம்.** இதன் காலம் இன்னது என்று நிச்சயிக்கக்கூடவில்லை. தொல்காப்பியத்திற்குப் பின் தோன்றிய நூல்களுள் மிகப் பழையனவாகக் கருதப்படுவன கடைச்சங்க நூல்கள். இவை ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டவை என்பது ஆராய்ச்சியாளர் முடிபு.

கடைசங்க நூல்கள் எண்ணற்றவை. அவற்றுள் நமக்குக் கிடைத்துள்ளவை முப்பத்தாறு நூல்களே. இவை **பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு** என்னும் பாகுபாடுகள் உடையவை. இவற்றுள் காலத்தால் முற்பட்டது **புறநானூறு** என்பது. இது,

> "நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூ(று)
> ஒத்த பதிற்றுப்பத்(து) ஓங்கு பரிபாடல்
> கற்றறிந்தார் ஏத்தும் கலியோ டகம்புறம்என்(று)
> இத்திறத்த எட்டுத் தொகை."

என்னும் பாவால் குறிக்கப்பெறும் தொகை நூல்களுள் ஈற்றதாய் இலங்குகின்றதெனினும், இதன்கண் இடம் பெற்றுள்ள செய்யுட்கள் மற்ற ஏழு தொகை நூல்களிலும் காணப்படும்

செய்யுட்களைக்காட்டிலும் காலத்தால் முந்தியவை என்பது ஆராய்ச்சியாளர் கருத்து.

புறநானூற்றுச் செய்யுட்கள் இற்றைக்கு இரண்டாயிரமாண்டுகட்கு முற்பட்டவை என்றோம். எனவே, 'இவை இக்காலத்திற்கு ஏற்புடையனவாக இயங்குதல் எங்ஙனம்?' என்னும் ஐயம் எழலாம். இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் முக்காலத்துக்கும் பொதுவான கருத்துக்களை அமைத்துச் செய்யுளும் நூலும் இயற்றும் பெற்றியே பெரும்புலவர்களுக்குரிய சிறப்பியல்பாகும். எல்லா நாட்டவராலும் எக்காலத்தும் ஒப்புக்கொள்ளத்தக்க பொதுமைக் கருத்துக்கள் மிளிர்கின்ற **திருக்குறளை** இயற்றிய ஆசிரியர் இப்பெற்றியரேயாவர். பொதுமைக் கருத்துக்களுக்கு உறைவிடமாய் இருப்பதனாலன்றோ, திருக்குறள் அன்றும் இன்றும் அனைவராலும் போற்றப்பட்டது, போற்றப்படுகின்றது?

புறநானூற்றுச் செய்யுட்கள் பலவற்றுள் முக்காலத்துக்கும் பொதுவான கருத்துக்கள் செறிந்து கிடக்கின்றன. அத்தகைய செய்யுட்களுள் ஒன்றை இளைஞர் அறியச் செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இளம்பெருவழுதி என்பவர் பாண்டியர் குடியிற்பிறந்தவர்; வயதில் இளைஞர், எனினும், அறிவில் முதியர்; செய்யுள் இயற்றும் திறத்தவர்; உலக அனுபவம் நிரம்பியவர். இதனால், புலவர் பலர் அவரை நாடிச் சென்று அவரோடு அளவளாவி இன்புறுவர். ஒரு நாள் புலவர் சிலர் இளம்பெருவழுதியின் அரண்மனையிற்கூடித் தமிழாராய்ச்சியில் ஈடுபட்டிருந்தனர். புலவர் ஒருவர் வழுதியை நோக்கி, "அரசரேறே, இவ்வுலக நிலை பற்றி ஓர் ஐயம் எழுகின்றது: மாந்தரனைவரும் வெவ்வேறு தன்மையராய்க் காணப்படுகின்றனர். கல்வியிலும், ஒழுக்கத்திலும், அறிவிலும், ஆற்றலிலும், நடையிலும், உடையிலும், மனோபாவத்திலும் மக்களிடையே காணப்படும் ஒற்றுமைகளைக்காட்டிலும் வேற்றுமைகளே தலை தூக்கி நிற்கின்றன. அங்ஙனமிருந்தும், இவ்வுலகம் நிலைபெற்றிருக்கக் காண்கின்றோம். இந்நிலைபேற்றுக்குக் காரணம் அறிய விழைகின்றேன். இதனை விளக்குதல் வேண்டும்," என்று கூறினர்.

அதுகேட்ட இளம்பெருவழுதி, "பெரியீர், நீவிர் அறிய விரும்பும் உண்மை நான் மட்டும் அறிந்ததன்று ; இங்குள்ள அறிஞர் அனைவரும் அறிந்ததே. ஆயினும், என்பால் நீவிர் கொண்ட அன்பால் எனக்கு ஏற்றமளித்தற்பொருட்டே இக்கடாவை எழுப்பியுள்ளீர். யானும் எனது சிற்றறிவிற்குத் தோன்றியவாறு விடை பகர்வேன் . உலகில் வாழும் மக்களிடையே காணப்படும் பண்புகள் பெரும்பான்மையும் வேற்றுமையுற்றுக் காணப்படுகின்றன என்பது உண்மையே. ஆயினும், இவ்வேற்றுமைகளுக்கிடையே சிறிது ஒற்றுமையும் நிலவுகின்றது. இவ்வொற்றுமையே சமுதாயத்தை உருவாக்குகின்றது. எனவே, சமுதாய அமைப்புக்கும், சமுதாய வளர்ச்சிக்கும் இன்றியமையாத சில பண்பாடுகளே மாந்தரிடையே காணப்படும் வேற்றுமைகளினிடையே நிலவும் ஒற்றுமைக்குக் காரணம் என்று யான் குறிப்பிடுகின்றேன். மேலும் விளக்கமாகக் கூற வேண்டுமாயின், மக்களுள் பெரும்பான்மையோரிடத்தில் ஒரு சில பண்பாடுகள் பொதுவாய்த் திகழ்கின்றன. பொதுமைப் பண்பாடுகளே சமூகத்தின் அடிப்படையாய் விளங்குகின்றன. இவை எல்லா மக்களிடத்தும் இயற்கையில் இலங்குவனவென்று கூறுவதற்கில்லை. இவை மக்கள் மனங்களிற் கால்கொள்ளுமாறு செய்யப்படுகின்றன. இச்செயல் எல்லார்க்கும் எளிதன்று ; சிலர்க்கே எளிதாம். அச்சிலரே சமுதாயத்தை உருவாக்குகின்றனர். 'அவர் எத்தகையவர் ?' எனின், கூறுவேன். அவர் வாழ்க்கையின் குறிக்கோள், தமக்கென வாழாமை. சாவா மருந்தென்று கூறப்படுவதும் இந்திரர்க்கே உரியதுமாகிய அமிழ்தம் அவர்க்குக் கிடைப்பதாயினும், அதனை இனிதென்று கொண்டு தனித்துத் தாமே உண்ணுதவர் ; எவர்பாலும் வெறுப்புக் கொள்ளாதவர் ; பிறர் அஞ்சும் துன்பத்துக்கு அஞ்சாதவர் . அன்றியும், அதனைத் தீர்த்தலிற் சோம்புதல் இல்லாதவர். அவர் புகழ்ச்சிக்குரிய பண்புகளை மேற்கொண்டவர் ; எனவே, புகழ் கிடைக்கின், தமது உயிரையும் கொடுப்பர் ; பழியைப் பெரிதும் வெறுப்பவர் ; உலகம் முழுவதும் பெறுவதாயினும் இகழ்ச்சிக்குரிய பழிதொழிலை மேற்கொள்ளாதவர் ; எப்போதும் முயற்சி-

யுடையராதலின், அவர்பால் அயர்ச்சியைக் காண்டல் அரிது. அவர் முயற்சி முழுவதும் தன்னலத்தின்பாற்பட்டதன்று; பிறர் நலத்தையே குறிக்கோளாகக் கொண்டது. தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராகிய இத்தகையர்தாம் உலக சமுதாயத்தை உருவாக்குகின்றவர். அவர் வாழ்ந்திருத்தலாற்றான் மக்கள் சமுதாயம் வளம் பெற்று வாழ்ந்து வருகின்றது,'' என்னும் சீரிய கருத்துக்கள் அமைந்த ஒரு செய்யுளை யாத்தனர். அதனைக் கீழே காணலாம் :

“ உண்டால் அம்மஇவ் வுலகம் ; இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே ; முனிவிலர் ;
துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவ(து) அஞ்சிப்
புகழ்எனின், உயிரும் கொடுக்குவர் ; பழிஎனின்,
உலகுடன் பெறினும் கொள்ளலர் ; அயர்விலர் ;
அன்ன மாட்சி யனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே !”

ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னியற்றப்பட்ட புறச்செய்யுளின்கண் திகழும் கருத்துக்கள் இக்காலத்துக்கும் முற்றும் பொருந்தி நிற்றலைக் காண்க. இங்ஙனமே எந்நாட்டவர்க்கும் எக்காலத்துக்கும் பொருந்துவனவாக உள்ள செய்யுட்கள் பலவற்றைப் புறநானூற்றில் காணலாம்.

12. திருக்கடன்மல்லை

[திரு. த. சே. உமாபதி, M.A., L.T., Dip. in Geog.]

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன பண்டைத் தமிழ் நூல்களில் காணப்படும் நிலப் பாகுபாடுகள். மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி; காடும் காடு சார்ந்த இடமும் முல்லை; வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம்; கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல். இவற்றுள் நெய்தலும் குறிஞ்சியும் ஒன்றிக் காட்சியளிக்கும் நிலம் ஒன்றினைப் புலவர் ஒருவர் நமது தமிழ் நாட்டிற் காண்கின்றார். அது அவர் கண்ணையும் கருத்தையும் கவர்கின்றது. கடலினின்றும் வளம் மிக்கெழுகின்றது ஒரு பவழக்கொடி. அதன் மெல்லிய கொழுந்து கொழுகொம்பின்றித் துவள்கின்றது. கொழுகொம்பின்றி வாடிய முல்லைக்கொடிக்குத் தேர் ஒன்று பற்றுக்கோடாகக் கிடைத்ததல்லவா? அங்ஙனமே இப்பவழக் கொடிக்கும் ஒரு பற்றுக்கோடு கிடைக்கிறது. அது ஒரு சந்தன மரத்தின் கிளை.

நெய்தல் நிலப் பகுதியாகிய கடற்கரையில் குறிஞ்சியின் பகுதியாகிய மலையும் அதன் சரிவுகளும் இடம் பெற்றுள்ளன. அம்மலையின்மீதும், அதன் சரிவுகளிலும் சந்தன மரங்கள் நிறைந்துள்ளன. அம்மரங்களுள் ஒன்றின் கிளையே அருகில் உள்ள கடலினின்றெழும் பவழக்கொடிக்குப் பற்றுக்கோடாகக் கிடைக்கிறது. இக்காட்சியைக் காணும் புலவர் மனத்துள் கற்பனை அரும்புகின்றது. பின்னர் அது கீழ் வரும் செய்யுளாக மலர்கின்றது :

“கோடு கொண்டெழும் திரைக்கடல் பவளமென் கொழுந்து
மாடு மொய்வரைச் சந்தனச் சினைமிசை வளரும்
நீடு நெய்தலும் குறிஞ்சியும் புணர்நிலம் பலவால்
ஆடு நீள்கொடி மாடமா மல்லையே அனைய.”

புலவர் பிரான் அருளிய செய்யுளிற் குறிக்கப்பெறும் ‘நெய்தலும் குறிஞ்சியும் புணர்நில’மே சென்னை நகருக்குத் தெற்கே முப்பத்து நான்கு கல் தொலைவில் கடற்கரையில் குன்றுகளும் பாறைகளும் இடம் பெற்றுள்ள கடல் மல்லை. ‘**தலசயனம்**’ என்பது இதன் மறு பெயர். இதுவே,

நரசிம்மவர்ம பல்லவன் காலத்தில் **மாமல்லபுரம்** என வழங்கப் பெற்றுப் பின்னர்ப் புராணப் பேரரசனுகிய மகாபலியின் பெயரோடு தொடர்புற்று, மகாபலிபுரம் என்னும் பெயரோடு இன்று விளங்குவது.

மகாபலிபுரம் இன்று ஒரு சிற்றூராய்க் காட்சியளிப்பினும், பல்லவப் பேரரசர்கள் காலத்தில் அது அவர்களுடைய ஒப்புயர்வற்ற கடற்றுறைப்பட்டினமாய் விளங்கியது என்பதற்கு வரலாறு சான்று பகர்கின்றது. அன்றியும், பல்லவர் காலத்துக்கு முன்னரும் அது சிறந்த துறைமுகப் பட்டினமாகவே விளங்கிற்றென்பதனை இலக்கியம் எடுத்துக் காட்டுகின்றது :

“புலன்கொள் நிதிக் குவையோடு புழைக்கரமா களிற்றினமும்
நலங்கொள் நவ மணிக்குவையும் சுமந்தெங்கும் நான்றொசிந்து
கலங்களியங் கும்மல்லைக் கடல்மல்லைத் தலசயனம்
வலங்கொள்மனதி தாரவரை வலங்கொள்என் மடநெஞ்சே !”

....

“வங்கத்தால் மாமணிவந்து உந்துமுந்நீர் மல்லை”

—திருமங்கை ஆழ்வார்

இங்ஙனம் நிதிக் குவையும் களிற்றினமும் நவமணியும் சுமந்து வந்த கலங்கள் இயங்கிய கடல் மல்லை இன்றொரு சிற்றூராய்க் காட்சியளிக்கின்றது. ஆயினும், பண்டைத் தமிழரின் பண்பட்ட சிற்பக் கலையின் சிறந்த கருவூலமாய்த் திகழும் பெருமை இதற்குண்டு. “கல்லும் சொல்லாதோ கவி ?” என்று கூறிப் போந்த புலவர் வாக்கிற்கிணங்க, இங்குள்ள கருங்கற்கள், தமிழ் நாட்டுச் சிற்பிகளின் கைவன்மையால் உயிர் பெற்றுப் பாடுவதையும் ஆடுவதையும் பேசுவதையும் சிரிப்பதையும் கண்டு வியப்புற்றுக் கழிபேருவகை எய்துகிறோம்! இனி இக்கலைச் சின்னங்கள் சிலவற்றைக் காண்போம் :

மாமல்லபுரத்துச் சிற்பங்கள் பல்வேறு இடங்களிற் சிதறுண்டு கிடப்பதால், அவற்றைக் காண்பதற்குரிய முறை எதையும் பின் பற்ற இயலாது. ஆயினும், அவற்றுட்பெரும்பாலன கீழ்த்திசையையும் மேற்றிசையையுமே நோக்கி இருத்தலால், கிழக்கு நோக்கியுள்ளவற்றைக் காலை நேரத்-

திலும், மேற்கு நோக்கியுள்ளவற்றை மாலை நேரத்திலும் காண்பதே நலமெனக் கொள்ளலாம். இங்குள்ள சிற்பங்கள் எல்லாம் கோவில்கள், மண்டபங்கள், பாறைச் சிற்பங்கள் என மூன்று பாகுபாடுகளில் அடங்கும்.

கோவில்கள் :

ஊரின் இடையில் ஒன்றும், கடற்கரையில் ஒன்றுமாகக் கோவில்கள் இரண்டே உள்ளன. ஊரின் இடையில் உள்ளது திருமாலின் திருக்கோவில். இது ஏறத்தாழ முந்நூறு ஆண்டு-கட்கு முன் விஜய நகரத்தை ஆண்ட அரசர் ஒருவரால் கட்டப்பட்டது என்பது கூறப்படுகிறது. கடற்கரையில் உள்ள கோவில் நரசிம்மவர்ம பல்லவனுக்குப் பிறகு மூன்று-மவனுக அரசு கட்டில் ஏறிய இரண்டாம் நரசிம்மவர்மன் என்ற இராசசிம்மனுல் கட்டப்பட்டதாகும். நாம் பர்மியக் கோவில்களின் அமைப்பைப் படங்களில் பார்த்திருக்கிறேம். அதை நேரில் பார்த்தவரும் இருப்பர். கடற்கரைக் கோவிலைக் கண்ட உடனே நமக்குப் பர்மியக் கோவில்களின் அமைப்பே நினைவுக்கு வருகிறது.

இக்கோவில் மாமல்லபுரத்தில் உள்ள பிற மண்டபங்-களைப்போல ஒரே பாறையால் அமைந்ததன்று. இது வனப்-புறச் செதுக்கிய பல சிறு கருங்கற்களை ஒன்றன்மீது ஒன்ருக அடுக்கி உருவாக்கப் பெற்றிருக்கிறது. பண்டைய முறையினின்று வேறுபட்ட புதியதொரு முறையில் இக்-கோவில் அமைந்திருப்பதைத் தவிர, இதன்கண் வியத்தகு சிற்பங்கள் அதிகமில்லை. கோவிலின் மூலைகளில் மேல் விமானத்தைத் தாங்குவதுபோலப் பின்னங்கால்களை ஊன்றி முன்னங்கால்களை மேலே தூக்கி நிற்கும் அமைப்பில் காணப்படும் சிங்க உருவங்களே சிறப்பினவென்னலாம்.

இக்கோவில் ஒன்றே எனினும், மூன்று பிரிவு-களாய் அமைந்துள்ளது. இப்பிரிவுகளுள் மேற்கு நோக்கி-யுள்ள கருவறையில் சோமாஸ்கந்த மூர்த்தி இடம் பெற்றுள்-ளார். கிழக்கு நோக்கியிருக்கும் கருவறையில் சிவபெரு-மான், இலிங்க வடிவில் எழுந்தருளியுள்ளார். இவ்விரண்டின் இடையில் அமைந்து சிறிது தெற்கே நீண்டிருக்கும் பகுதி-

யின் கருவறையில் தரையிற் கண் துயிலும் திருமால் காட்சி-யளிக்கிறார். இங்கு ஒரே கோவிலின் இரண்டு கருவறை-களில் சிவ பெருமானும் திருமாலும் எழுந்தருளியிருக்கும் நிலையைத் **திருமங்கையாழ்வார்,**

"பிணங்களிடு காடதனுள் நடமாடு பிஞ்சகனோ(டு)
இணங்குதிருச் சக்கரத்தெம் பெருமானார்க் கிடம்விசும்பில்
கணங்களியங் கும்மல்லைக் கடன்மல்லைத் தலசயனம்
வணங்குமனத் தாரவரை வணங்குகென்றன் மடநெஞ்சே !"

என்று சிறப்பித்துக் கூறுகிறார். சமய ஒற்றுமையைக் குறிக்க எழுந்த இக்கோவில், இரண்டு கோபுரங்களை உடை-யது. கிழக்கு நோக்கியுள்ள இலிங்கத்தையும் மேற்கு நோக்கியுள்ள சோமாஸ்கந்தரையும் பகற்போதில் நன்கு காண முடியும். ஆனால், திருமாலோ, இடையூறேயின்றி இனிது கண்ணுறங்குதற்குரிய இருள் நிறைந்த இடத்தைத் தமக்கு இருப்பிடமாகக் கொண்டுள்ளார். ஆதலின், நண்-பகலிலும் விளக்கின் துணையின்றி அவரைத் தரிசிக்க இய-லாது. இக்கோவிலைச் சூழ இங்குக் கிடைத்த கல்லுரு-வங்கள் சுவர் போல வைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரே அச்சில் வார்த்தெடுத்தவை போன்ற ரிஷபங்களே மிகுதி-யாகக் காணப்படுகின்றன. அவையன்றி, நம் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரத்தக்க சில உருவங்களும் உண்டு.

மண்டபங்கள் :

இனி மாமல்லபுரத்தில் இடம் பெற்றுள்ள சில மண்டபங்-களைக் காண்போம் : கி. பி. 600 முதல் இருபத்தைந்தாண்டு-கள் காஞ்சியைத் தலை நகராகக் கொண்டு பல்லவப் பேரரசை இயக்கிய மகேந்திரவர்ம பல்லவ மன்னனே முதன்முதல் தமிழ் நாட்டில் கருங்கற்களால் கோவில் எடுக்கத் தொடங்கி-யவன் என்று வரலாறு கூறுகின்றது. எனவே, மாமல்ல-புரத்து மண்டபங்களுள் சில மகேந்திர வர்மனால் நிருமா-ணிக்கப்பட்டவையாகும். இம்மண்டபங்கள், பல கற்களால் இயன்றவையல்ல. இவை மலைப்பாறைகளைக் குடைந்து செய்வித்த கோவில்களேயாகும். ஆனால், நாம் காணுபவை கோவில்களின் வடிவத்தில் அமையாமல், மண்டபங்களின்

வடிவில் அமைந்திருப்பதால், இவை மண்டபங்கள் என்றே வழங்கி வருகின்றன. இவற்றைக் '**குகைக் கோவில்கள்**' என்று கூறுவதும் உண்டு.

மகேந்திரவர்மனால் செய்விக்கப் பெற்ற கோவில்களை எளிதில் கண்டறிதற்குரிய சில குறிகள் உண்டு. அவை மலையுச்சியிலும், மலையடியிலும் இரா; மலைச்சாரல்களிலேயே இடம் பெற்றிருக்கும். கடினமான கருங்கற்பாறைகளில் அவை எவ்வாறு குடையப்பட்டன என்பதை நாம் ஊகித்தறியலாம். கோவிலை மலையில் குடையும் போது தூண்கள், சுவர்கள், விக்கிரகங்கள் ஆகியவற்றைச் செய்வதற்குரிய பாறைப் பகுதிகளை விட்டு, அவசியமற்ற பகுதிகளை முதலிற்குடைந்து நீக்கிவிடுவது வழக்கம். பிறகு தூண்களையும் சுவர்களையும் அவற்றின்மீது சிற்பங்களையும், கருவறையையும், அதில் இடம் பெற வேண்டிய விக்கிரகங்களையும் செதுக்கி உருவாக்கி மண்டபத்தை முடிப்பது வழக்கம்.

பொதுவாக மகேந்திரவர்மனால் செய்விக்கப்பட்ட மண்டபங்களின் தூண்கள் கீழும் மேலும் நாற்சதுரமாகவும், இடையில் மூலை செதுக்கி எட்டுப் பட்டையாகவும் இருக்கும். தூணின் மொத்த உயரம் பதினான்கடியாகவும், மேற்பாகமும் கீழ்ப் பாகமும் நான்கடிக்கு நான்கடியுள்ள சதுரமாகவும் இருக்கும். சதுரங்களில் தாமரை மலர்கள் செதுக்கப் பெற்றிருக்கும். தூணின் போதிகை, நீண்ட சதுர வடிவினதாய் இருக்கும். சுவர்களிற் சிற்பங்கள் பல இடம் பெற்றிருக்கும்.

இங்ஙனமே மகேந்திர வர்மனின் மைந்தன் நரசிம்மவர்மனால் செதுக்குவிக்கப் பெற்ற குகைக் கோவில்களையும் சில அடையாளங்களால் அறிந்துகொள்ள முடியும். அவற்றில் சித்திர வேலைப்பாடுகள் மிகுந்திருக்கும். கோவிலின் முன் மண்டபச் சுவர்களை அழகிய உருவங்களும் அன்னப்பறவைகளும் அலங்கரிக்கும். அன்றியும், அவற்றின் தூண்கள் மகேந்திரன் கோவில்களின் தூண்களைப் போலச் சதுரமாயிராமல், உருளையாயிருக்கும். தலைப்பில் உள்ள போதிகைகள் உருண்டையாகவும் குழைவுகள் உடையனவாகவும் இருக்கும். தூண்களின் அடிப்பாகம் நான்கடி உயரமுள்ள-

வையும், திறந்த வாயுடன் அமர்ந்திருப்பவையுமான சிங்கங்களின் தலைகளில் பொருந்தியிருக்கும்.

மண்டபங்கள் என்று வழங்கப் பெறும் பத்துக் குகைக் கோவில்கள் மாமல்லபுரத்தில் உள்ளன. அவற்றுள் ஏழு மகேந்திரன் காலத்தவை என்றும், மூன்று நரசிம்மவர்மன் காலத்தவை என்றும் கொள்ளத்தக்கவை. அவற்றுள் முக்கியமான சிலவற்றைக் காணலாம் :

குகை மண்டபங்களுள் **வராக மண்டபம்** என்பது ஒன்று. இதன் இரு புறச் சுவர்களிலும் எழில் மிக்க சிற்பங்கள் இருக்கின்றன. வலப்பக்கத்தில் திருமாலின் வாமனவதாரக் கதையை விளக்கும் சிற்பங்கள் உள்ளன. மகாபலி சக்கரவர்த்தியின் இறுமாப்பையழிக்க விட்டுணு விஸ்வரூபமெடுத்து எட்டுக் கைகளுடன் இடக்காலை நிலத்தில் ஊன்றி வலக்காலைத் தூக்கி விண்ணையளப்பது போலவும் மண்ணையும் விண்ணையும் ஈரடிகளாக அளந்திட்டு, 'மற்றோர் அடிக்கு இடமெங்கே?' என்று கேட்பது போலவும் காட்சியளிக்கும் முகத் தோற்றமும், கொடுத்த வாக்கைக் காக்க முடியாத நிலையில் உடல் ஒடுங்கி மனங்குன்றி அடக்கமும் பயமும் தோன்றக் கீழே உட்கார்ந்திருக்கும் மகாபலியின் உருவமும் நேரில் கண்டு களிக்கத் தக்கவையேயல்லது, சொற்களால் வருணிக்கத் தக்கவையல்ல.

இடப்பக்கச் சுவரில் திருமாலின் வராக அவதாரக் கதையை விளக்கும் சிற்பங்கள் இருக்கின்றன. பூமியைச் சுருட்டிச் சென்ற அரக்கன் வராக மூர்த்தியின் முன்னிலையில் செயலற்றுக் கிடக்கும் காட்சியையும், வராகமூர்த்தி பூதேவியை ஒரு கையில் தாங்கி நிற்கும் பொலிவையும் என்னென்று கூறுவது !

இம்மண்டபத்தின் கருவறையில் இடப்பக்கம் இலக்குமியின் உருவமும், வலப்பக்கம் துர்க்கையின் உருவமும் இடம் பெற்றுள்ளன. இவற்றின் இடையில் சிலை எதுவும் காணப்படவில்லை.

மகிஷாசுர மண்டபம் என்பது, பழைய கலங்கரை விளக்கத்திற்குக் கீழே காணப்படுகின்றது. இதிலும் இரு புறங்களிலும் மதிற்சிற்பங்கள் உள்ளன. இடப்பக்கத்தில்

ஐந்து தலை அரவணையில் கண்கள் பாதி மூடிய நிலையில் யோக நித்திரை புரிகின்றார் திருமால். இவர் முகத்திற் குடி கொண்டிருக்கும் அமைதியைக் காணும் நமதுள்ளத்தில் அமைதி நிலவுகின்றது.

திருமாலின் திருவுருவத்துக்கு எதிரிலேதான், பல்லவர் காலத்துச் சிற்பிகள் தங்கள் கைத்திறன் முழுதும் விளங்கு-மாறு அமைத்துள்ள **மகிஷாசுரமர்த்தனி**யின் சிற்பம் இருக்கிறது. இதில் பகைவன்மீது பாயும் நிலையில் உள்ள சிங்கத்தின் மீது அமர்ந்திருக்கும் பராசக்தியின் உருவமே நடு நாயகமாய் விளங்குகிறது. அம்மையின் முகத்தில் சீறி-யெழும் சினக் குறியைச் சிற்பி காட்டியிருப்பதைக் கலை-யுணர்வற்ற பாமரன்கூடப் பாராட்டாதிருக்க முடியாது. அம்மையின் எட்டுக் கைகளில் எட்டு வகைப் போர்க்-கருவிகள் இருப்பினும், அவற்றுள் வில்லும் வாளுமே தலைமை எய்துகின்றன. அம்மையின் எதிரே நிற்கிறான் எருமைத் தலையரக்கன். எந்நிலையில் ? அம்மையைக் கண்டு அஞ்சும் நிலையில் அன்று; பாய்ந்து தாக்க எண்ணிக் கையிற் கதையுடன் பதுங்கி நிற்கின்ற அவன் முகத்தில் கபடம் களி-நடம் புரிகின்றது. இச்சிற்பத்தை அமைத்த சிற்பியின் திறத்தை நாம் வாயார வாழ்த்துவதைத் தவிர என்ன செய்வது ?

அடுத்தபடி **பசு மண்டபம், திரிமூர்த்தி மண்டபம், வராகப் பெருமாள் கோவில்** ஆகிய மூன்றும் கண்டு களிக்கத்தக்கவை. இவற்றுள் திருமால் கிருட்டிணனாய் அவதரித்துக் கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்து ஆயர்களையும் பசுக்களையும் காத்த கதை, பசு மண்டபத்தில் சிற்ப வடிவில் இடம் பெற்றுள்ளது. வராகப் பெருமாள் கோவில் என்பதும் ஒரு மண்டபமே. ஆனால், அதன் முன் புறம் அடைக்கப்பட்டுக் கோவிலாக மாற்றப்பட்டுவிட்டது. அதன்கண், சிம்ம விஷ்ணு, மகேந்திரவர்மன் ஆகிய பல்லவ மன்னர்களின் உருவங்கள் இடம் பெற்றுள்ளன. கருவறை-யிற் காட்சியளிக்கும் வராக மூர்த்தியின் உருவம் மிகப் பெரிய அளவில் அமைந்துள்ளது.

இனிப் பஞ்சபாண்டவ ரதங்களைப் பார்ப்போம் : இவை-

களும் உண்மையில் கோவில்களே. ஆனல், மலைச்சரிவில் இவை குடையப்படவில்லை. தனிப் பாறைகள் குடைந்து கோவில்களாக்கப்பட்டுள்ளன. இவை தேர்கள் போல அமைந்திருப்பதால், மக்கள் இவற்றை இரதங்கள் என வழங்குகிறார்கள். அன்றியும், இவற்றிற்கும் பாண்டவர்களுக்கும் எவ்வகைத் தொடர்பும் இல்லை. பாண்டவர் ஐவர்; இரதங்கள் ஐந்து; இதுதான் இரதங்கட்கும் பாண்டவர்கட்கும் உள்ள தொடர்பு.

இரதங்கள் எனப்படும் கோவில்களில் நான்கு ஒரு வரிசையாய் அமைந்து மேற்கு நோக்கியுள்ளன; ஒன்று மட்டும் தனியே அமைந்து தெற்கு நோக்கியுள்ளது. இது மிகச் சாதாரணமானது. இதற்குத் **திரௌபதி ரதம்** என்னும் பெயர் வழங்குகிறது. அடுத்துள்ள ரதம், சகாதேவன் ரதம். அதையடுத்து அருச்சுனன் ரதமும், அதையடுத்துப் பீமன் ரதமும், தென்கோடியில் தருமர் ரதமும் உள்ளன. பாவம்! நகுலனுக்கு ரதம் இல்லை. இந்த ரதங்களுள் ஒருவாறு முற்றுப்பெற்ற நிலையில் இருப்பது தருமர் ரதம். இதுவே எல்லாவற்றிலும் பெரியது. இது இரண்டு அடுக்குகளை உடையது. இதன் மேல் நிலையில் உள்ள சிற்பங்கள் நம்மிடம் பேசிச் சிரித்து நம்மை மகிழ்ச்சியிலும் வியப்பிலும் ஆழ்த்தும் பெற்றி வாய்ந்தவை. இந்த ரதங்களின் அருகில் உள்ள யானை, சிங்கம், காளை ஆகிய மூன்று விலங்குகளும் இரவிலும், தூரத்திலிருந்தும் பார்த்தால் உயிர் உள்ளவையாகவே புலப்படும் பெருமை வாய்ந்தவை.

பாறைச் சிற்பங்கள்

ஏறத்தாழ எண்பது அடி நீளமும் முப்பதடி உயரமும் உள்ள பாறையொன்றில் சுமார் நூற்றைம்பது சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. இப்பாறையின் இடையில் சிறிது இடை வெளியிருக்கிறது. இவ்விடைவெளிக்கு வடபால் தேவலோகத்து ஆண்களும், பெண்களும், இரண்டு பெரிய யானைகளும், கண்ணை மூடிக்கொண்டு தவம்புரியும் பூனையும், மற்றும் பல உருவங்களும் உள்ளன. தென்பக்கத்துப் பாறையின் மேற்புறத்தில் முனிவர் ஒருவர் இரு கைகளையும்

தூக்கிக்கொண்டும், ஒரு காலை மடக்கி ஒரு காலால் நின்று-கொண்டும் தவம் புரிகின்றார். இந்த உருவத்தை இப்பாறைச் சிற்பத்தின் நடுநாயகமாக வைத்து, இது பகீரதன் தவத்தை விளக்குவதென்றும் கூறப்படுகிறது. எது உண்மையாயினும், இவ்வுருவங்கள் நம் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து நம்மை வியப்பில் மூழ்கச் செய்கின்றன. தென்பாதியில் பூதகணங்கள், வில்லுடன் கூடிய வேடர்கள், பாய்ந்து செல்லும் சிங்கங்கள், துள்ளியோடும் மான்கள், அன்னப்-பறவை, ஆமை, பல்லி முதலியவற்றின் உருவங்கள் அவற்-றைச் செதுக்கிய சிற்பிகளின் திறத்தை உலகத்திற்கு வெளிப்படுத்தி அழியாப் புகழோடு நிலைபெற்றுள்ளன. இப்பாறையில் இடம் பெற்றுள்ள தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, தாவரம் அனைத்தும் நேரிற்கண்டு வியத்தற்-குரியவை. மாமல்லபுரம் சென்று இவற்றைக் காண்பவர் இவற்றின் இடையில் மான் குட்டியொன்று தன் பின்னங்-காலால் முகத்தைச் சொறிந்துகொள்ளும் இயற்கையைக் கண்டு இன்புறுவாராக.

வரலாறு :

இனி மாமல்லபுரத்தில் உள்ள கற்பாறைகளைப் பேசும்படி செய்த பெருமைக்குரிய பல்லவ மன்னர்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள் சிலவற்றைக் காண்போம் : தமிழ் நாட்டில் பல்லவர் ஆட்சி கி. பி. 250ல் தொடங்கி 900ல் முடிவுற்றது என்பர் வரலாற்று ஆசிரியர். இந்த 650 ஆண்டில் ஆட்சி புரிந்த பல்லவ மன்னர் முதற்காலப் பல்லவர் (கி. பி. 250—340), இடைக்காலப் பல்லவர் (கி. பி. 340—575), பிற்காலப் பல்லவர் (கி. பி. 575—900) என்று முப்பிரிவின-ராகக் கொள்ளப்படுவர். இவர்களுள் பிற்காலப் பல்லவர் காலத்திலேதான் மாமல்லபுரம் சிற்பக் கருவூலமாக்கப்-பட்டது.

சிம்ம விஷ்ணு :

பிற்காலப் பல்லவர்களுள் முதல்வனாகக் கருதப்படு-கிறவன் **சிம்ம விஷ்ணு** என்பவன். இவன் கி. பி. 575

முதல் 615 வரை ஆட்சி புரிந்தான். இவன் காலத்திலேதான் ஆதி வராகர் கோவில் கட்டப்பட்டதென்பது ஆராய்ச்சி-யாளர் துணிபு. இக்கோவிலுள் இவனது உருவச்சிலை ஒன்று செதுக்கப் பெற்றிருக்கிறது.

மகேந்திரவர்மன் :

இவன் சிம்மவிஷ்ணுவின் மகன். இவன் காலத்திலே-தான் **இரண்டாம் புலிகேசி** என்ற சாளுக்கியப் பேரரசன் காஞ்சீபுரத்தின்மீது படையெடுத்து வந்தான். இவன் கி. பி. 615 முதல் 630 வரை ஆட்சிபுரிந்தான். தருமர் மண்டபமும், கொடிக்கால் மண்டபமும், வேறு சிலமண்டபங்களும் இவனால் குடைவிக்கப்பட்டவை என்பது ஆராய்ச்சியாளர் துணிபு. இவன் உருவச்சிலையொன்றும் ஆதி வராகர் கோவிலில் செதுக்கப்பெற்றுள்ளது.

நரசிம்மவர்மன் :

இவன் மகேந்திரவர்மனின் புதல்வன் ; கி. பி. 630ல் பட்டம் பெற்று, 38 ஆண்டு ஆட்சி புரிந்தான். இவனே பல்லவ மன்னர் எல்லாருள்ளும் சிறந்தவன் ; தன் தந்தை காலத்தில் காஞ்சியின்மீது படையெடுத்து வந்த இரண்டாம் புலிகேசியின் தலைநகராகிய **வாதாபி**யை அழித்த பெருமை இவனுக்குரியது. மகிஷாசுர மண்டபம், வராக மண்டபம், திரிமூர்த்தி மண்டபம் ஆகிய மூன்றும் இவன் காலத்தவை. இவன் தந்தை காலத்தில் தொடங்கப்பட்ட சிற்பங்களை இவன் முடித்து வைத்தான். பாண்டவ ரதங்கள் இவன் காலத்தில் தொடங்கப்பெற்றவை ; ஆனால், முடிவுறவில்லை. ‘ மாமல்லன் ’ என்ற பட்டம் பெற்றவனும் இவனே. இவனுக்குப் பிற்காலத்தில் பட்டம் பெற்ற பல்லவ மன்னரும் மாமல்லபுரச் சிற்பங்களைச் சிறப்பிக்க முயன்றும் முடிவுறாத நிலையிலேயே அவை நின்றுவிட்டன.